


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 9 இதழ் - 10 - ஜனவரி - 2018*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
New Century Reader's Sangam
*என்ற பெயரில் அனுப்பலாம்.*


உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


1. படித்துப் பாருங்களேன்... — ஆ.சிவசுப்பிரமணியன் – 6
2. இலக்கியத்தில் உணவே மருந்து — டாக்டர் சு.நரேந்திரன் – 13
3. புரட்சிப் பாதையில் லெனின் — பி.எஸ்.கிருஷ்ணசாமி – 21
4. பொங்கல் விழா — நா. வானமாமலை – 27
5. தனிமனிதனிலிருந்து சமூக மனிதன் — சி.ஆர்.ரவீந்திரன் – 33
6. உலகிற் சிறந்தது ஊர் சுற்றுவதே — குரு மணிகண்டன் – 49
7. மார்க்ஸ் என்பவர், “மார்க்ஸ்” ஆக, மாறத் தொடங்கிய போது... — குருசாமிமயில்வாகனன் – 55
8. காவிக்குள் ஒரு சிவப்பு — அத்திவெட்டி வே.சிதம்பரம் – 63
9. வரலாற்றை உருப்படுத்திய ஒரு சொற்பொழிவு — க.காமராசன் – 71
10. இறையன்பு என்ற பன்முக ஆளுமை — ரவிசுப்பிரமணியன் – 80






பங்கய்யா புகுய்யா

BHANGYA BHUKYA (2017)
THE ROOTS OF THE PERIPHERY

A HISTORY OF THE GONDS OF
DECCAN INDIA

OXFORD UNIVERSITY PRESS

**விளிம்பு நிலையின் வேர்கள்:**
**தெக்கண இந்திய கோண்ட்டுகளின் வரலாறு**

# படித்துப் பாருங்களேன்...

## ஆ. சிவசுப்பிரமணியன்

பழங்குடிகள் அல்லது ஆதிவாசிகள் என்போர் காடு வாழ் மக்களாகவே பர்க்கப்படுகின்றனர். இந்தியாவின் மையப்பகுதியை விட்டு விலகி விளிம்பு நிலையிலேயே இவர்கள் வாழ்கிறார்கள். காடுகளின் எல்லையிலோ, காடுகளிலோ வாழும் இவர்கள் சமவெளியில் இருந்து விரட்டப்பட்டோ, தப்பியோடி வந்தோ காடுகளுக்குள் இடம் பெயர்ந்தவர்கள்தாம்.

சமவெளியில் ஆதிக்கம் செலுத்திய ஆளும் குழுவுக்கும் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த குழுவுக்கும் இடையே நிகழ்ந்த மோதலின் விளைவாகவே இவ்

இடப்பெயர்ச்சி நிகழ்ந்துள்ளது. மையத்தில் இருந்து விளிம்புக்கு நிகழ்ந்த இவ்விடப் பெயர்ச்சியானது அரசியல் சார்ந்த ஒன்றாகும். நிர்வாக அல்லது பூகோள எல்லை சார்ந்ததல்ல. மையப்பகுதியும் விளிம்பு நிலையும் அரசியல் பண்பாடு சார்ந்தே நோக்க வேண்டியன. விளிம்பு நிலைக்கும் மையத்துக்கும் இடையிலான உறவை, நாகரிகம் - புராதனம், பழக்கப் பட்டது - பழக்கப்படாதது, நவீனமானது - பின் தங்கியது, ஆளுகைக்கு உட்பட்டது - ஆளுகைக்கு உட்படாதது என்ற எதிர்மறைக் கூறுகளாகவே பார்க்க வேண்டும். விளிம்பு நிலை குறித்த ஆய்வுகள் பெரும் பாலும் சமூகவியல், மானிடவியல் என்ற இரு அறிவுத் துறைகளின் துணை கொண்டே நடத்தப்படுவது வழக்கமாக உள்ளது. ஆனால் இதற்கு மாறாக தெக்கண இந்தியாவில் வாழும் கோண்ட்டுகள் என்ற பழங்குடி யினரின் வரலாறையும் அரசியலையும் இந்நூல் ஆராய்கிறது.

இவ் அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூலின் ஆசிரியர் பங்கய்யா புகுய்யா ஹைதராபாத் பல்கலைக் கழகத்தில் வரலாற்றாசிரியராகப் பணியாற்றுகிறார். தென் இந்திய ஆதிவாசிகள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டவர். ஆந்திர, தெலுங்கானா மாநிலங்களில் வாழும் லம்பாடிகள் என்ற பழங்குடிச் சமூகம் குறித்து இவர் எழுதிய நூல் குறித்த அறிமுகம் ஏப்ரல் 2012 உங்கள் நூலகம் இதழில் வெளியாகியுள்ளது.

### விளிம்பு நிலையினரின் தோற்றம்

இந்திய விளிம்பு நிலையினர் குறித்த ஆய்வை ஆரியர் வருகையில் இருந்தே தொடங்க வேண்டும். இந்நாட்டின் பூர்வீகக்குடிகளான நாகர்களை வென்ற ஆரியர்கள் முதலில் பஞ்சாபில் குடியேறினர். பின்னர் கங்கை முகத்துவாரத்திலும், நீண்ட கடற்கரைப் பகுதி களிலும் நிலைபெற்றனர். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கிழக்கு நோக்கி முன்னேறிய ஆரியர் காடுகளை எரித்து அழித்தார்கள். வேளாண்மைக்காக காடுகளை எரியூட்டி அழிப்பது அவர்களின் வழக்கமாகும். ரிக்வேத சுலோகங்களில் நெருப்பைக் குறிப்பிடும் போது அதற்கு இடும் அடைமொழிகள் இதை உறுதிப்படுத்துகின்றன. காடுகளை விழுங்குபவனாகவும் அவற்றை அழிக்கும் கோடரியாகவும் அக்கினி வருணிக்கப்படுகிறான்.

காடுகளை எதிர்ப்பதென்பது நிலத்தைத் துப்பரவு செய்வது மட்டுமின்றி அக்கினிக் கடவுளை நிறைவு படுத்தும் செயலுமாகும். யமுனை நதிக்கரையிலுள்ள காண்டவ வனத்தை அருச்சனன் அழித்த செய்தி பாரதத்தில் இடம் பெற்றுள்ளது. இச்செய்தி பேரழிவின் பதிவாகும். காட்டில் வாழும் உயிரினங்கள் அனைத் தையும் தன் உணவாக நெருப்பு, உண்டு தீர்த்ததாகப் பாரதம் கூறுகிறது.

கங்கை முகத்துவாரத்திலும், கடலோரப் பகுதி களிலும் அவர்கள் தம் ஆட்சியை விரிவுபடுத்திய போது, ஈவு இரக்கமின்றி நாகர்களை அழித்தனர். சிதறுண்டு வாழ்ந்த பல தொன்மையான குழுக்களையும் அவர்களது நம்பிக்கைகளையும் அழித்தே ஆரியர்கள் ஒரு புதிய சமுதாயத்தை நிறுவியதாக கோசாம்பி எழுதியுள்ளார். ஆரியவர்த்தனாவின் விளிம்பு நிலையாகச் சித்தரிக்கப் படும் மத்திய இந்தியாவுக்கும் வடகிழக்கு இந்தியா வுக்கும் நாகர்களை இடம் பெயரச் செய்தனர். மத்திய இந்தியாவில் வாழும் கோண்டுகளிடம் பழைய நாகர் களின் அடையாளம் காணப்படுகிறது. கங்கைப் பள்ளத் தாக்கு ஆரியவர்த்தனை என்று நிலைநிறுத்தப்பட்டது. இது இந்தியாவின் மையப்பகுதி என்றும் இதற்கு வெளியில் உள்ளவை விளிம்புநிலை என்றும் வரை யறுக்கப்பட்டது. இவ்வாறு தொடக்ககால ஆரியக் குடியிருப்புகள் உருவானபோது மையப்பகுதிகளுக்கும் காட்டுப்பகுதிகளுக்கும் இடையே ஓர் எல்லை முதன்முறையாக வரையறுக்கப்பட்டது. பின்னர் இந்து சமய நூல்களில் பண்பாட்டுடன் இணைத்து நிலை நிறுத்தப்பட்டது. இந்து புனித நூல்கள் மட்டுமின்றி, புத்த, சமண சமயப் புனித நூல்களும் ஆரியர்களை நாகரிகம் அடைந்தவர்களாகவும், சுயேச்சைத் தன்மை கொண்ட இனக்குழுக்களை காட்டுமிராண்டிகளாகவும் கி.மு. ஆறாம் நூறாம் நூற்றாண்டில் இருந்து குறிப்பிடலாயின.

இந்தியாவில் அரசு உருவாக்கும் முயற்சியில் ஆரியர்கள் ஈடுபட்டபோது ஆரியர்களுக்கும் ஆரியர் அல்லாதாருக்கும் இடையே மோதல்கள் தீவிரமடைந்தன. எண்ணிக்கையில் அடங்காத ஆரியர் அல்லாதாரை அரசு இல்லாப் பகுதிக்கோ காடுகள், மலைப்பகுதிக்கோ இம்மோதல்கள் இடம் பெயரச் செய்தன.

ஆரியக் குழுக்கள் ஆரியர் இல்லாத குழுக்களை வென்று அவர்களைத் தம் அரசின் குடிகள் ஆக்கினர். இதை விரும்பாத, உரிமை வேட்கை கொண்டோர் அரசு அமைப்பு செயல்படாத பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இம்மக்களே இனக்குழுவினர் என்றும் பழங்குடியினர் என்றும் அழைக்கப்படலாயினர்.

பண்டைய இந்திய வரலாற்றில் பேரரசு உருவாக்கம் நிகழ்ந்தபோது அதில் இருந்து தப்பித்தோடிய, மக்களே இன்றைய இந்திய ஆதிவாசிகள் ஆவர். சுயஆட்சியின் மீது உறுதியான பற்றுகொண்டவர்களாக இவர்கள் இருந்துள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டுவரை இப்போக்கு தொடர்ந்துள்ளது.

சுல்தான்களின் ஆட்சியின்போது நிகழ்ந்த படை யெடுப்புகளின் போது படையொன்று ஒரு கிராமத்தை கடந்து செல்ல நேரிட்டால் அந்தக் கிராமம் அழிவுக் காளாகும்.

இதனால் இப்படை வருவதை அறிந்த கிராமத்தினர் சமவெளிப்பகுதியை விட்டு வெளியேறி காடுகளுக்குள் சென்று விடுவார்கள். நிலவரி செலுத்துவதில் இருந்து தப்பிக்கவும் காடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

நிலக்கொடைகள் வாயிலாக அரசின் விரிவாக்கம் காடுகளை நோக்கிச் சென்றது. இம்முறை கி.மு.150இல் வாகடகர் ஆட்சியில் தொடங்கி, பின்னர் இந்திய வரலாற்றில் நீடித்தது. தொடக்கத்தில் பௌத்தப் பள்ளிகளுக்கு நிலக்கொடை வழங்கும் முறை அறிமுக மாகி, பின்னர் இந்துக்கோவில்களுக்கும் பிராமணர் களுக்கும் வழங்கப்படாலாயிற்று. குப்தர்கள் ஆட்சியில் இது விரிவடைந்து உச்சத்தை எட்டியது. இக்காலத்தில் காடுகள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டு வரப்பட்டன.

வேளாண்மைக்காக காடுகளை அழிப்பது பேரரசுகளின் ஆட்சியில் தீவிரமானது. முகலாயர் 13-ஆம் நூற்றாண்டில் இருந்து காடுகள் விளை நிலங்களாக மாற்றப்படலாயின.

காகதீயர்கள் 'நாயக்கமுறை' என்ற முறையை அறிமுகம் செய்தனர். இதன்படி காட்டுப்பகுதிகளில் வேளாண்மை விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாறு உருவான புதிய கிராமங்களுக்கு 'நாயக்' என்ற பதவி வகித்தவன் தலைவனாக விளங்கினான் (நாயக் - தலைவன்) இந்நாயக்கர்கள் காடுகளை அழித்து வேளாண் நிலங்களாக்குவதில் தீவிரம் காட்டினார்கள். பாசனத்திற்காகக் குளங்களை வெட்டினார்கள். காகதீயர் ஆட்சியில் 5000 குளங்கள் வெட்டப்பட்டன. இச்செயல்கள் ஆந்திரப்பகுதியில் நிலவுடைமை முறை உருவாகத் துணை நின்றது. இதே நடைமுறைதான் விஜயநகர ஆட்சியிலும் குதுப்சாகிப் ஆட்சியிலும் தொடர்ந்தது. மொத்தத்தில் ஏராளமான காட்டுநிலங்கள் விளைநிலங்களாக்கப்பட்டன.



ஆட்சியில் வேளாண்மை வளர்ச்சியுற்றது. பயிரிடலை மேற்கொள்ளச் செய்தனர். சாகுபடிக்கு உட்படாத நிலங்களில் பயிர் செய்யும்படி குடியானவர்களைத் தூண்டினர். அவர்களுக்கு வரிச் சலுகை வழங்கினர். முதல்முறையாக வேளாண்மை செய்யப்படும் நிலத்திற்கு அய்ம்பது விழுக்காடு அல்லது அதற்கும் குறைவாக ஓராண்டுக்கு வரி விதிக்கப்பட்டது. பின்னர் அய்ந்தாண்டு வரை வழக்கமான வரித்தொகைக்குப் படிப்படியாக உயர்த்தப்பட்டது. இவ்வரிச் சலுகையானது காடு களுக்கும் மலைகளுக்கும் அருகில் புதிய கிராமங்களை உருவாக்கியது.

தென் இந்தியாவிலும் பயன்படுத்தப்படாத நிலங்களும், காட்டு நிலங்களும் வேளாண்மைக்குரிய நிலங்களாக மாற்றப்பட்டன. காகதீய, விஜயநகர, குர்சாகிப் ஆட்சிக்காலத்தில் தெக்கணப் பகுதியில்

**கோண்ட்டுகள்**

இதுவரை நாம் பார்த்த வரலாற்றுச் செய்திகள் விளிம்பு நிலையின் வேர்களை அறிமுகம் செய்துள்ளன. இச்செய்திகளின் பின்புலத்தில் கோண்ட்டுகள் என்ற விளிம்பு நிலை மக்களைக் குறித்த ஆய்வை ஆசிரியர் நடத்திச் செல்கிறார்.

நர்மதை ஆறு, கோதாவரி ஆறு என்ற இரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி ஆங்கிலேயர் ஆட்சியின் போது அவர்கள் உருவாக்கிய மத்திய மாநிலத்தின் ஒரு பகுதியானது. இப்பகுதியில் 13-ஆவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து 18-ஆவது நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலான 500 ஆண்டுக் காலம் கோண்ட்டுகள் மிகுதியான எண்ணிக்கையில் வாழ்ந்து வந்துள்ளனர். இது 'கோண்ட்வானா' என்றே அழைக்கப்பட்டது.

இந்தியாவின் பல்வேறு சாதிகள், ஆதிவாசிகள் ஆகியோருக்கு இருப்பது போன்றே கோண்ட்டுகளும் தமக்கென தோற்றப் புராணக்கதையைக் கொண்டு உள்ளனர். இதன்படி விசுவாமித்திரர் தமது அய்ம்பது மகன்களின் வழித்தோன்றல்களை ஆரியக் குடியிருப்பு களின் எல்லையில் வாழும்படி சபித்தார். இவர்கள் இந்துப் புராணங்களில் 'புலிந்தர்கள்' என்று குறிப்பிடப்படு கின்றனர். இவர்கள் விந்திய மலைக்கும் சத்புரா மலைக்கும் இடையில் வாழ்ந்தனர். இப்புலிந்தர்களே கோண்ட்டுகள் என்று அடையாளப்படுத்தப்படு கின்றனர்.

அண்மைக்கால ஆய்வுகள் சிந்துசமவெளி நாகரிகத்துடன் தொடர்புடையவர்களாக கோண்ட்டு களை கூறுகின்றன. ஆரிய நாகரிகத்திற்கு முந்தைய திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அவர்களது மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த தமிழ், கன்னட மொழிகளுடன் நெருக்கமானது என்றும் அறியப்பட்டுள்ளது. சிந்துசமவெளி மக்களின் வழித் தோன்றல்களே கோண்ட்டுகள் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் என்ற ஆங்கில அதிகாரி கிழக்கிந்தியாவில் இருந்து இடம் பெயர்ந்தவர் களாகவும் ஆர்.வி. ரஸ்ஸல் என்பவர் தென்இந்தியாவில் இருந்தும், மத்திய இந்தியாவில் இருந்தும் இடம் பெயர்ந்தவர்களாகவும் கோண்ட்டுகளைக் கருது கிறார்கள். ஆரியர்களுக்கு முற்பட்ட திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று திராவிட மொழி களுடனான கோண்ட்டுகளின் மொழி கொண்டு மொழித் தொடர்பின் அடிப்படையில் கூறப்படுகிறது.

ஆனால் இன்று தம் தாய்மொழியான கோண்டி மொழியைக் கைவிட்டு தாம் வாழும் பகுதியின் இந்தி, தெலுங்கு மொழியைப் பயன்படுத்துகிறார்கள்.

### கோண்ட்டு மன்னர்கள்

ஆதிவாசிகள் பிரிவினராக இன்று காட்சியளிக்கும் கோண்ட்டுகளின் சமூகத்தில் இருந்தே அவர்கள் ஆளும் மன்னர்கள் உருவாகியிருந்தனர். அவர்களின் ஆளுகைக் குட்பட்ட பரந்த நிலப்பரப்பு இருந்துள்ளது. இக்கடந்த கால வரலாறு அவர்களிடையே வழங்கும் வாய்மொழிக் கதைகளில் நிலை பெற்றுள்ளது.

கோண்ட்டுகளின் வரலாற்று நினைவுகள் புதைந் துள்ள பழமரபுக்கதைகளை காலனிய ஆட்சி அதிகாரிகள் பதிவு செய்துள்ளனர். ஃபெரோஸ்ஷா என்ற சுல்தான் முதல் முறையாக கோண்ட்டுகளின் கோண்ட்டுவான அரசின் மீது படையெடுத்தான். நர்சிங்ரே என்ற கோண்ட் மன்னன் ஏராளமான செல்வத்தைக் கொண் டிருந்தான். தன்னுடைய மேலாண்மையை ஏற்றுக் கொள்ளும்படி சுல்தான் செய்தியனுப்பினான்.

இதை ஏற்க மறுத்து அவனுடன் போரிட விரும்பிய நர்சிங்ரே மால்வா, கண்டேஷ் மன்னர்களிடம் உதவி வேண்டினான். நர்சிங்ரே தோற்க வேண்டும் என்று விரும்பிய அவ்விரு மன்னர்களும் உதவ வரவில்லை. இருந்தபோதிலும் அவன் சுல்தானை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றான். போர் முடிந்த பின்னர் சுல்தானுடன் பேசி போருக்கான ஈட்டுத் தொகையை வழங்கி தன் ஆட்சிப்பகுதியைத் திரும்பப் பெற்றான். ஆண்டுதோறும் கப்பம் கட்டுவதாகவும் ஒப்புக் கொண்டான். அத்துடன் சுல்தானின் அந்தப்புரத்துக்கு தன் மகள்களுள் ஒருத்தியை அனுப்பிவைத்தான்.

இதுபோன்ற போர்களும் ஒப்பந்தங்களும் மொகலாய ஆட்சியாளர்களுக்கும் கோண்ட்டு மன்னர் களுக்கும் இடையே நிகழ்ந்தன. ஆட்சிபுரிவோராக கோண்ட்டுகள் இருந்த வரலாற்றை 'பந்தான்கள்' என்றழைக்கப்படும் அவர்களது பரம்பரைக் கதை சொல்லிகள் பாதுகாத்து வந்துள்ளனர். இவ்வரலாறும் வரலாறு அடங்கிய பழமரபுக் கதைகளும் பெருமளவில் காலனிய ஆட்சிக்காலத்திலும் அதற்குப் பிந்தைய காலத்திலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பழ மரபுக் கதைகள் மட்டுமின்றி இப்பகுதியில் காணப் படும் சிதைவுற்ற கோட்டைகளும் கோண்ட்டுகளின் ஆட்சியையும் சமூகத்தையும் வெளிப்படுத்தும் சான்றுகளாக அமைந்துள்ளன.

செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் இந்துக்கள் கொண்டாடும் தசரா பண்டிகை தொடர்பாக பல்வேறு புராணக்கதைகள் உள்ளன. ஆனால் கோண்ட்டுகளின் தசரா கொண்டாட்டம் அவர்களது கடந்தகால ஆட்சி அதிகாரத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

1860-இல் நாகபுரி அரசை, ஆங்கிலேயர்கள் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்வரை கோண்ட்டு அரசர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் நிஜாம் மன்னர் ஆளும் பகுதிகளில் நுழைந்து தாக்குதல் நடத்திப் பொருட்களைக் கவர்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நிலத்தின் மீதும் காடுகளின் மீதும் அவர்களது கடந்தகால உரிமையை நிலைநாட்டும் வழிமுறையாக இதைக் கருதினார்கள். அவர்களைப் பொறுத்தளவில் வரி வாங்கும் தம் உரிமையை நிலை நாட்டும் வழிமுறையாகும். ஆனால் ஆங்கிலேயர்கள் இதைக் குற்றச்செயலாகக் கருதினார்கள்.

இதை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஆங்கிலேயர்கள் தம் படை பலத்தால் கோண்ட்டு அரசர்களையும் தலைவர்களையும் தோற்கடித்தாலும் முழுமையான வெற்றியை அவர்களால் அடையமுடிய வில்லை. அவர்களால் எளிதில் செல்லமுடியாத காட்டுப் பகுதியில் கோண்ட்டுகள் மறைந்து கொண்டதாலும் ஆங்கிலப் படையின் மீது கொரில்லாத் தாக்குதல்

நிகழ்த்தியதாலும் அவர்களை முழுமையாக வெற்றி கொள்ள இயலவில்லை. கோண்ட்டு சமிந்தார்களிடம் உறுதிமொழிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள மட்டுமே முடிந்தது. திருடர்களுக்குப் பாதுகாப்பு அளிக்காமலிருப்பது வழிப்போக்கர்களின் உடைமைக்குப் பாதுகாப்பு வழங்குவது கொள்ளைகளைத் தடுப்பது என்பன உடன்படிக்கையில் இடம் பெற்றன.

இதற்குக் கைமாறாக கோண்ட் சமிந்தார்களின் சொத்துரிமையைப் பாதுகாப்பதாகவும் கோண்ட் மன்னர்களைச் சிறப்பித்து மரியாதை செலுத்துவதாகவும் ஆங்கிலேயர் ஒத்துக்கொண்டனர்.

ஆனால் பல கோண்ட்டு மன்னர்கள் ஒப்பந்தத்தை மீறி ஆங்கில ஆட்சிப் பகுதியில் சூறையாடலை நிகழ்த்தினர். கோண்ட்டு மன்னர்கள், சமிந்தார்கள் கிராமத் தலைவர்கள் இச்செயல்களின் பின்னால் இருந்தனர். ஆங்கில அதிகாரிகள் சிலர் கொலையுண்டனர். கோண்ட்டுகளின் கலகம் என்று கூறத்தக்க அளவில் பல வன்முறைச் செயல்கள் ஆங்கிலேயருக்கு எதிராக நிகழ்ந்தன. இதைக் கடுமையான முறையில் இராணு வத்தின் துணையுடன் ஆங்கிலேயர் ஒடுக்கினர்.

என்றாலும் கோண்ட்டுகளின் இனவரலாற்றில் அவர்களது கடந்தகால மன்னர்களும் சமிந்தார்களும் அவர்கள் கட்டிய கோட்டைகளும், பயன்படுத்திய பீரங்கிகளும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இக் கடந்த கால வரலாறு, மலைகளிலும் காடுகளிலும் அவர் களுக்கு இருந்த தன்னாடசி உரிமையை நினைவூட்டியது.

அவர்களது மன்னர்களைக் குறித்த கதைகளைத் திரும்பத் திரும்பக் கூறுவதானது சுற்றியுள்ள பகுதிளைச் சூறையாடுவதை நியாயப்படுத்த உதவியது.

### கோண்ட்டு மன்னர்களைக் கட்டுப்படுத்தல்

ஆங்கில ஆட்சியின் தொடக்கத்தில் இருந்தே சமவெளிப் பகுதியின் மன்னர்களும் சமிந்தார்களும் ஆங்கிலேயரின் அதிகார மையமாக விளங்கினர். மராத்தியரின் அதிகாரத்துக்கு துணைநிற்பவர்களாகவும் மக்களின் ஆதரவு பெற்றவர்களாகவும் இருந்தமையே இவர்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும்படி ஆங்கிலேயரைத் தூண்டியது.

மலைப்பகுதிகளில் சட்ட ஒழுங்கை நிலைநிறுத்தவும் அம்மக்களைக் குடியானவர்களாக மாற்றவும் கோண்ட்டு களின் மன்னர்களுடன் நல்லுறவைப் பேண விரும்பினர். கோண்ட்டுகளைத் தம் பக்கம் இழுக்கும் வழிமுறையாக சமவெளி மன்னர்களுக்குரிய அடையாளங்களையும், சலுகைகளையும், ஓய்வூதியங்களையும் ஒப்பந்தங்கள் வாயிலாக கோண்ட்டு மன்னர்களுக்கு வழங்கினர். அவர்களுக்குத் தர்பார் நடத்தும் உரிமையையும், அன்பளிப்புகளையும் தலைப்பாகைகளையும், பட்டங் களையும் இராணுவ மரியாதையையும் வழங்கினர்.

இந்து சமயத்தில் இவர்களது இருப்பை வெளிப் படுத்தியதுடன் ஆங்கிலக் கல்வியை அறிமுகம் செய்தனர். இவற்றின் வாயிலாக ஆதிவாசித் தலைவர் களையும் மன்னர்களையும் தம் பிடிக்குள் கொண்டு வந்தனர். கோண்ட்டுகளை அடக்கிவைக்கும் வழி முறையாக, அவர்கள் மேற்கொண்ட இச்செயல்களை 'நாகரிகமாக்குதல்' என்று குறிப்பிட்டனர்.

'நாகரிகமாக்குதல்' என்ற பெயரில் அவர்கள் மேற்கொண்ட இந் நடவடிக்கைகளின் விளைவால், கோண்ட்டுகள் வாழும் பகுதிகளில் பள்ளிக்கூடங்களும் அதில் பயில்வோர் எண்ணிக்கையும் அதிகரிக்கலாயிற்று. 1901-ஆம் ஆண்டில் 288 பள்ளிக்கூடங்கள் இருந்தன. 13,404 மாணவர்கள் பயின்றனர். 1941-இல் மாணவர் களின் எண்ணிக்கை 69,164 ஆக உயர்ந்தது. கல்வி பயின்ற ஆதிவாசிகள் ஆசிரியர்களாகவும், படேல் என்ற பெயரிலான கிராம அதிகாரிகளாகவும் நியமிக்கப் பட்டனர்.

கல்வியும், அரசு வேலைவாய்ப்பும் பெற்ற ஆதிவாசிகள் அய்ரோப்பியமயமாதலுக்கு ஆட்பட்டனர். மற்றொரு பக்கம் இந்துமயமாதலும் இராஜபுத்திர மயமாதலும் நிகழலாயின. கோண்ட்டு தலைவர்கள் மட்டுமின்றி கோண்ட்டு மக்களும் சாதி இந்துக்களின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றலாயினர். வருண முறையை ஏற்றுக்கொண்டு தம்மை இராஜபுத்திரர்கள், ஷத்திரியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டனர். ஆதிவாசி சமூகத்தைவிட சாதி அடிப்படையிலான சமூகம் மிகவும் நாகரிகம் அடைந்த சமூகம் என்பதால் காலனிய அரசு இதை ஆதரித்தது. அவர்களைக் கட்டுப்படுத்துவதை இது எளிதாக்கும் என்பதும் அவர்களது கருத்தாகும்.

### காலனிய நிர்வாகத்தின் விரிவாக்கம்

காலனிய ஆட்சிக்கு முன்னர் நிலவிய மன்னர் ஆட்சியில் அரசுக்கும், தனிமனிதர்களுக்கும் நிலத்தின் மீதான சொத்துரிமை இல்லாதிருந்தது. காலனிய ஆட்சியில் நிலத்தின் மீதான சொத்துரிமை சமிந்தார் களுக்கும் கிராமத்தலைவர்களுக்கும் வழங்கப்பட்டது. ரயத்துவாரி முறையில் நிலஉரிமை பெற்றவர்களிடம் இருந்து வரிவாங்கப்பட்டது. காடுகளைப் பொறுத்த அளவில் அரசே முழு உரிமைகொண்டிருந்தது. காடுகள் ஒழுங்கமைப்பு, காடுகள் பாதுகாப்புச் சட்டம் என்பன வற்றின் துணையால் தன் உரிமையை நிலைநிறுத்திக் கொண்டது. காட்டுவளங்களைத் திட்டமிட்டுச் சுரண்டியது. காட்டு நிலங்களையும், தரிசு நிலங்களையும் வேளாண்மை நிலங்களாக்கியது.

### ஆதிவாசிகள் மீதான கட்டுப்பாடுகள்

காலனிய ஆட்சி நிலைபெற்ற பின் தன் ஆட்சியை விரிவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. மலைப்பகுதி

களிலும், காட்டுப்பகுதிகளிலும் வாழ்ந்துவந்த ஆதிவாசிகளை அங்கிருந்து வெளியேற்றி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக்கியது. இவர்களுள் சிலர், அரசின் பாதுகாப்பிலுள்ள காடுகளுக்குள் இடம்பெயர்ந்தனர். அவ்வாறு சென்றவர்கள் அவர்களது பழைய மரபுப் படியான வேட்டையாடுதல், வனப்பொருட்களைச் சேகரித்தல், எரியூட்டு வேளாண்மை கால்நடைகளை மேயவிடுதல் என்பனவற்றை மேற்கொள்ளக்கூடாது என்ற தடைக்கு ஆளானார்கள். மொத்தத்தில் சமவெளியில் வாழ்ந்தாலும் காடுகளில் வாழ்ந்தாலும் காலனிய ஆட்சியின்போது இந்தியா முழுமையும் ஆதிவாசிகள் விளிம்பு நிலையினராக மாறுவது அதிகரிக்கத் தொடங்கியது.

சமவெளியினரான சாதி இந்துக் குடியானவர்கள் மலைப்பகுதிகளில் குடியேறி வேளாண்மை செய்வதை ஆங்கிலேயர்கள் ஆதரித்தனர். வட்டிக்குக் கடன் கொடுத்தல் வாயிலாகவும், வலுக்கட்டாயமாகவும் இவர்கள் ஆதிவாசிகளின் நிலங்களைக் கைப்பற்றி அவர்களை வெளியேற்றினர். அத்துடன் அவர்களது சமூகப் பண்பாட்டு வாழ்விலும் ஊடுருவினர்.

காலனியத்தின் நிலவரிமுறையும், நவீன வேளாண் முறையும் மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் நிலங்களின் மீதான வேட்கையை அதிகரிக்கும் வகையிலேயே அமைந்தன.

நிலப்பட்டா வழங்கப்பட்ட போது அதன் மதிப்பு என்ன என்பதை கோண்ட்டுகள் புரிந்து கொள்ள வில்லை. நல்ல விளைச்சல் இருக்கும் போது அதை அறுவடை செய்வதும், வறட்சிக்காலங்களில் இடம் பெயர்ந்து செல்வதும் பின்னர் மீண்டும் திரும்பி வருவதும் கோண்ட்டு மக்களின் வழக்கம். விளைநிலம் கிராமத்தின் பொதுச் சொத்தாய் இருந்தது. ஆங்கிலேயர் அறிமுகம் செய்த புதியமுறையில் பயிர் செய்தாலும் செய்யாவிட்டாலும் வரி கட்டியாக வேண்டும். வரி செலுத்த அல்லது வரி பாக்கிக்காக கோண்ட்டுகள் தம் நிலத்தை இழந்தனர். அவர்களது நிலம் சாதி இந்து விவசாயிகளைச் சென்றடைந்தது. சாகுபடியாளர்கள் நில உடைமையாளர்களின் விவசாயத் தொழிலாளர்களாக மாறினார்.

இக்காரணங்களால் கோண்ட்டுகளின் வளமும் பண்பாடும் சிதையத் தொடங்கின. அவர்கள் வாழ்ந்த காடுகளினுள் நுழைய அவர்களை அனுமதிக்கவில்லை. காடுகளின் பலன்களை அரசு ஏலத்தில் விட்டது. ஏலம் எடுத்த ஒப்பந்தக்காரர்கள் ஆதிவாசிகளிடம் வரி வாங்கினர். ஊதியம் தராது வேலை வாங்கினர்.

மஹுவா என்ற மரத்தின் பூக்களை தம் கால்நடைகளுக்கு உணவாகக் கோண்ட்டுகள் வழங்குவர். அப்பூக்களைப் பயன்படுத்தி சாராயம் காய்ச்சுவர். உணவு கிடைக்காத போது, அப்பூக்களை உணவாகக் கொள்வர். மஹுவா மரத்தின் பூக்களைச் சேகரிக்கும் உரிமை ஏலம் விடப்பட்ட பின், கோண்ட்டுகள் இவ்வுரிமைகளை இழந்தனர்.

இதுபோன்றே காடுகளில் வளரும் புல், வீட்டின் கூரைவேய கோண்ட்டுகளால் பயன்படுத்தப்பட்டது. மூங்கில் மரம் வேலி அடைக்கவும், கால்நடைக் கொட்டிலில் சுவர் அமைக்கவும், பரண் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டது. ஒப்பந்தக்காரர்கள் ஒவ்வொரு ஆதிவாசிகளிடமும், இவற்றைப் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டாலும் ஒரு வீட்டிற்கு இவ்வளவு என்று கட்டணம் வாங்கினார்கள். காடுகளில் மேயப் போகும் கால்நடைகளுக்கு கட்டணம் வாங்கப்பட்டது.

அரசு தன் ஆட்சியைக் காடுகளுக்கு விரிவுபடுத்திய போது பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்த இவ்உரிமைகளை ஆதிவாசிகள் இழந்தனர். அவர்களது சுயேச்சையான இடப்பெயர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு ஒரே இடத்தில் வாழும்படி கட்டாயப்படுத்தப் பட்டார்கள். காட்டில் இலை ஒன்றைப் பறிக்கக்கூட கட்டணம் செலுத்த வேண்டியதாயிற்று. வனக் காவலருக்கு ஆண்டுக்கு ஒரு ரூபாய் மாமூலும் கொடுத்தனர். வருவாய்த் துறை அதிகாரிகள் அங்கு தங்கினால் இலவசமாகப் பொருட்கள் வழங்க வேண்டியதாய் இருந்தது.

மலைப்பகுதிகளில் நிகழ்ந்த மிகையான மக்கள் தொகைப் பெருக்கம் கோண்ட்டுகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தியது. மக்கள் தொகைப் பெருக்கத்தை மலைப்பகுதிகளில் ஏற்படுத்துவதென்பது காலனிய அரசின் திட்டமாக இருந்தது. இதன் வாயிலாக கோண்டுகளின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாதிருந்த நிலப்பகுதிகளை அரசிற்குரிய பகுதியாக மாற்ற முடிந்தது. காலனிய அதிகாரத்தை விரிவுபடுத்தலையும், வேளாண்மையை நவீனப்படுத்தலையும் வேளாண் உற்பத்தியை சுரண்டவும் முடிந்தது; காட்டு வளங்களையும் தாதுவளங்களையும் சுரண்ட முடிந்தது. அத்துடன் ஆதிவாசிகளை அமைதியான குடிகளாக கட்டாயப்படுத்தி மாற்றவும் முடிந்தது.

இதற்காகவே சமவெளியில் இருந்து, இந்துக் குடியானவர்களை நிலவரி, நிலவாடகையில் சலுகை வழங்கியும், கிராம அளவிலான பதவிகள் வழங்கியும் மலைப்பகுதிகளுக்கு அழைத்து வந்தனர். இதனால் மலைப்பகுதிகளில் சமவெளி மனிதர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. (இது தொடர்பான புள்ளிவிவரங்களை ஆசிரியர் தந்துள்ளார். பக்கம். 114-116).

(தொடரும்)

பார்க்கலாம்... வாங்கலாம்... படிக்கலாம்...

# 41 ஆவது சென்னைப் புத்தகக் காட்சி
# 41st CHENNAI BOOK FAIR

ஜனவரி 2018 January

## 10 To 22

வார நாட்களில்: **2.00** pm - **9.00** pm Week Days
விடுமுறை தினங்களில்: **11.00** am - **9.00** pm Holidays

செயிண்ட் ஜார்ஜ் ஆங்கிலோ
இந்தியன் மேல்நிலைப்பள்ளி
(பச்சையப்பன் கல்லூரி எதிரில்)
சென்னை-600 030

**St. George's Anglo Indian**
**Hr.Sec. School**
***(Opp:* Pachaiyappa's College)**
**Chennai- 600 030**

- தினசரி மேடை நிகழ்வுகள்
- பிரபலங்களின் உரை வீச்சு
- மாணவர்களின் ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்


10% Discount / கழிவு

குடும்பத்தோடு
செல்வோம்...
வாசிப்பை
நேசிப்போம்...

அரங்குகள் 700 STALLS
தலைப்புகள் 10,00,000 TITLES
பார்வையாளர்கள் 12,00,000 FOOTFALLS
வாசிப்பாளர்கள் 25,00,000 READERS

BAPASI
The Booksellers' & Publishers' Association of South India
தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம்

chennaibookfair bapasicommunications@gmail.com www.bapasi.com



# இலக்கியத்தில் உணவே மருந்து

டாக்டர் சு. நரேந்திரன்

**நோ**யில்லா நெறியை உணர்த்துவது உணவு நெறியாகும். உண்ணும் உணவில் குற்றமுடைய உணவு, நல்ல உணவிலும் உண்போர் உடலுக்கு ஒவ்வாத உணவு என்னும் வகை உணவை நீக்கி விட்டு, உடலுக்கும் மனத்துக்கும் ஏற்ற உணவை உட்கொண்டால் உடலுக்கு மட்டுமல்ல உயிருக்கும் குற்றம் உண்டாகாது என்பர்.

உணவே உயிர் வாழ்வதற்குத் தேவையாகவும், உணவே உடல் நோய்க்கு மருந்தாகவும், அவ்வுணவே பல சமயங்களில் உடல் நோயைக் கொடுக்கும் மருந்தாகவும் அமைவதுண்டு.

"நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டிமுதற்றே உணவின் பிண்டம்
உண வெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோ ரீண்டு
உடம்பும் உயிரும் படைத்தி சினோரே."

எனும் புறப்பாடல் பழந்தமிழர்களின் உணவுசார் மருத்துவ அறிவைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

*உயிர் வாழவேண்டுமானால் உணவு உண்ண வேண்டும். உணவு இல்லாமல் உயிர் வாழ்தல் என்பது இயலாது என்பதை உணர்ந்து;*

''உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே
உண்டிமுதற்றே உணவின் பிண்டம்.''

(புறம்-18: 19-20)

*என்று உரைத்தனர். உணவு உண்பதில் அளவை மேற்கொண்டிருந்தனர். பெருந்தீனி தின்றால் நோயும், சிறுதீனி தின்றால் வலுவிழப்பும், நோயும் வரக்கூடும் என்றறிந்து,*

''உண்பது நாழி உடுப்பவை இரண்டே.''

(புறம்: 61-6)

*என்னும் கொள்கையை நமது முன்னோர் வகுத் திருந்தனர். ஒவ்வொருவரும் நாழி அளவு உணவு உண்ண வேண்டும் என்பதும், ஆடை வகையால் இரண்டு ஆடைகள் மேலாடை, இடையாடை என உடுத்தவேண்டும் என்பதும் அவர்தம் கொள்கை.*

*நியதிகளைத் தொகுத்துரைக்கும் ஆசாரக் கோவை, உணவு உண்ணும் போது கிழக்கு நோக்கி அமர்ந்து, உணவு உண்ண வேண்டும். நின்று கொண்டோ, படுத்துக்கொண்டோ, கட்டிலின் மேல் அமர்ந்து கொண்டோ உணவுண்ணக் கூடா தென்கிறது.*

**உணவு உண்ட பின் நடை:**

*உணவு உண்ட பின்னர், ஒவ்வொருவரும் சிறிது தூரம் நடக்க வேண்டும். அவ்வாறு நடப்பது உண்ட உணவு செரிமானமாவதற்கு உதவும் எனக் கூறப்படுகின்றது. நோயாளி உணவு உண்டபின் சிறிது தூரம் நடக்க வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்துவர்.*

*உணவு உண்ட பின்னர், நூறடிதூரம் உலாவி விட்டு வரவேண்டுமென்று மருத்துவ நூல் கூறு கின்றது. அதற்கு ஏற்றவாறு, உணவு மண்டலம் நூறடி நீள நடை மண்டபத்துடன் அமைக்கப் பட்டிருப்பதாகவும், சீவக சிந்தாமணி உரையா சிரியர் நச்சினார்க்கினியர் உரைக்கக் காணலாம்.*

*இக்கருத்தை ஒட்டியே வள்ளல் இராமலிங்க அடிகளும் உண்டபின் உலாவுதல் வேண்டும் என்பார்.*

**உணவு உண்ண வாழை இலை:**

*உண்டதற்கு உண் கலங்கள் உடலுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்ற விதிக்கு இணங்க பொன், வெள்ளி, வாழை இலை, தேக்கிலை, தாமரை இலை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.*

''செழுங்கோள் வாழை யகலிலைப் பகுக்கும்.''

(புறம் 168: 13)

''குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு
அமுதம் உண்க அடிகள் ஈங்கென.''

(சிலம்பு-16: 41-42)

*இவ்வடிகளின் மூலம் வாழையிலையில் உணவு உண்ணும் மரபு தெரியவருகிறது.*

**மருந்தே உணவு: 'நெல்லிக்கனி'**

*சாக்காட்டினைத் தள்ளிப்போடும் ஆற்றல் வாய்ந்த மருத்துவ குணம் நெல்லிக்கனிக்கு உண்டு என்பதைப் பழந்தமிழர் உணர்ந்திருந்தனர். அதற்குச் சான்று அதியமான்-ஔவையார் வாழ்க்கை வரலாறு. இதனைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.*

''நெல்லி அம்புளி மாந்தி''

*என குறுந்தொகையும்,*

''புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றனர்''

*என அகநானூறும்,*

''சுவைக்காய் நெல்லி'' என்று நற்றிணையும்,
''கவினிய நெல்லி அமிழ்து விளை தீங்கனி''

*என சிறுபாணாற்றுப்படையும்*

''சிறியிலை நெல்லித் தீங்கனி.''

*எனப் புறநானூறும் குறிப்பிடுகின்றன. இவற்றுள் கருநெல்லி என்னும் கனியே சிறப்புக்குரிய மருந்தாகக் கருதப்படுகிறது. இது மரணத்தை வெல்லும் ஆற்றல் மிக்கது. காயகற்ப வகையைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது.*

**நெல்லிக்கனியும் - வாழ்நாளும்:**

*மனிதனின் சராசரி இறப்பு வயது 70 ஆக இருந்ததாகத் திருமந்திரம் (பாடல்-163) தெரிவிக்கிறது. அதிக அளவு வாழ்நாள் பெறுவதற்கு நெல்லிக்கனி மருந்தாகப் பயன்பட்டுள்ளது.*

*எ.கா: நெல்லிக்கனியைச் சங்கஇலக்கியங்கள் சிறப்பித்துக் கூறக் காண்கிறோம். குறிப்பாக,*

''..... நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத்தனையே.'' (புறம்: 91)

*எனும் ஔவையார் பாடல் வாயிலாக நெல்லிக் கனிக்குச் சாதலை நீக்கும் மருத்துவக்குணத்தை அறிந்துகொள்ள முடிகிறது.*

*இதுபோலவே,*

''மால்வரைக் கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீங்கனி அவ்வைக்கீந்த
... ... அதிகனும்.''

*எனச் சிறுபாணாற்றுப்படையும்;*



"சாதலை நீக்கும் அருநெல்லி தன்னைத்
தமிழ் சொல் ஔவைக்கு
ஆதரவோடு கொடுத்த"

என கொங்கு மண்டலச் சதகமும் எடுத்தியம்பு கின்றன.

"நெல்லிக்கனி அமுதை ஔவைக்களித்து வேலதிகன்
மல்கு புகழ் கொண்டான் வடமலையே."

என வடமலை வெண்பா எனும் நூல் குறிப்பிடுகிறது.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை ஆராயும் பொழுது, மலையில் விளையும் கருநெல்லிக்கனி என்பது உண்டாரை வாழ வைக்கும் அமிழ்தத்தைப் போன்று வாழ்நாளை நெடிது நீட்டிச் சாதலைத் தடுத்துத் தள்ளிப்போடும் தன்மையுடையது என்பதை உணரலாம்.

அஞ்சறைப்பெட்டி பொருள்கள்:

மிளகு, அது தமிழ் நாட்டின் வீட்டு மருந்து எனல் பொருந்தும்,

"பகைவன் வீட்டிற்குச் சென்றாலும்
பத்து மிளகோடு போ."

"பத்து மிளகிருந்தால்
பகைவன் வீட்டிலும் உண்ணலாம்."

என்பன பழமொழிகள். மிளகு மருத்துவத்தின் மூலப்பொருளாக அமைவதோடு உணவாகவும் அமையும்.

"கருங்கொடி மிளகின் காய்த்துணர் பசுங்கறி."

(மலைபடு கடாம்: 520)

விஷ முறிவிற்கு மிளகு அபூர்வ மருந்தாகும். இதுபோலவே இஞ்சி, மஞ்சள் ஆகியவை உணவாகி மருந்தாகிறது.

"இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்."

என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. இது போல சீரகம் முதலிய அஞ்சறைப் பெட்டியில் உள்ள சமையல் பொருள்கள் பல மருந்தாகவும், நோயைத் தடுக்க வல்லதாகவும் அமைந்திருப்பது எண்ணற்பாலது.

தமிழகச் சித்தர்கள் பலர் உடலை வளர்ப்பதற்கும் காப்பதற்கும் வளப்படுத்துவதற்கும் பல அரிய மூலிகைகளைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

"காக்கை கருநீலி கரந்தை கரிசாலை
வாக்குக்கு இனிமை வல்லாரை
இவ் வைந்தும் பாக்கள வேணும்
பாலில் கரைத்து உண்ண ஆக்கைக்கு
ஓதாது உணர்ந்தேன் மீதானம் உற் றேன்
அழிவு இல்லை ஆயிரம் எட்டு ஆண்டும்."

(மூலிகைத்தாவரங்கள்,
இராஜ மார்த்தாண்டம்- 2002:60)

என்னும் பாடல் மூலம் மூலிகைகளின் வகை களையும் இயல்பையும் காணலாம். காக்கை என்பது அவுரி இலையைக் குறிக்கும். அது இரத்தத்தி லுள்ள கிருமிகளை ஒழிக்கும் ஆற்றல் உடையது. சிவகரந்தை கண்களுக்குக் கூரிய பார்வை ஏற்படுத்துவது. கரிசாலை என்னும் மஞ்சள் கரிசலாங்கண்ணி ஈரலையும் சிறுநீரகத்தையும் சரி

செய்ய வல்லது. வல்லாரை நினைவாற்றலையும், அறிவையும் வளர்ப்பது. இவ்வைந்து மூலிகை களையும், உண்டு வந்தால் நோயற்ற வாழ்வு வாழலாம் என்று தமிழர்கள் அறிந்திருந்தனர்.

**உப்பு:**

நெல்லின் அளவுக்கே உப்பும் விற்கப்பட்டது என்பதால் உப்பு எவ்வளவு உயர்ந்த பொருளாக மதிக்கப்பட்டது என்பது விளங்கும்.

"நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலை மாற கூறலின் மனைய." (குறள்: 140)

என்று பண்ட மாற்றாக உப்பு விற்கப்பட்டதை அகநானூறு குறிக்கும்.

உப்பின் அளவு இரத்த அழுத்தத்தைக் கூட்டவும், குறைக்கவும் செய்யக் கூடும் நோயாளிகள் உப்பைக் கட்டுப்படுத்தினால் நோயின் வேகம் குறையும்.

இதனை:

"உப்பு அமைந்தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்." (குறள்: 1302)

என்றதனால் காதலர்களிடையே தோன்றும் பொய்க் கோபமும் உப்பின் அளவாக இருக்க வேண்டும் என்றும், இவ்விரண்டும் அதிகரித்தால் காதலும் கெடும்; உணவும் கெடும் என்னும் கருத்தில் எடுத்துக்காட்டாக அமைந்து உப்பின் பயன் உணர்த்தப்பட்டது.

**தேன்:**

தேன், தமிழ் மருத்துவத்தின் துணை மருந்தாகப் பயன்படுகிறது. அதனால்தான்;

"பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கி" (புறம்-34:10)

புண்ணுக்குத் தேனும் மருந்தாகப் பயன்பட்டு உள்ளது.

பால் சோற்றோடு தேன் கலந்து உண்டதாகப் புறநானூறு உரைக்கிறது. இதனை மேலும் சிறப்பாகத் திருக்குறள்;

"பாலோடு தேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்." (குறள்: 1121)

என்று குறிப்பிடுகிறது. பாலோடு தேன் கலந் துண்டால் உடல் வலிமையுறும் என்பது வள்ளுவர் கூறும் மருந்தியல் நுட்பமாகும்.

**அறுசுவை:**

உணவின் சுவை வகைகள் ஆறாகும். அவை, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, கைப்பு, புளிப்பு ஆகியன. இவை முறையே ஆற்றல், வீறு, வளம், தெளிவு, மென்மை, இனிமை ஆகிய வற்றைத் தரும் என்பது உணவு மருத்துவ நெறி. இதை நம் முன்னோர் அறுசுவையாக அமைத்துக் கொண்டனர்.

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும்."

என்பது நாலடியார்.

இவ்வுணவைக் காலத்திற்கும், இடத்திற்கும் உடலுக்கும், வயதிற்கும் ஏற்றவாறு திட, திரவ உணவு எனப்பிரித்து உண்டனர். அவை எட்டு வகைப்படும்.

"மெய்தெரி வகையின் எண் வகை உணவின்
செய்தியும் வரையார்." (தொல். மரபியல்- 79)

உரையாசிரியர் இளம்பூரணர் நெல், காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதுமை எனவும், பேராசிரியர் பயறு, உளுந்து, கடுகு, கடலை, எள்ளு, கொள்ளு, அவரை, துவரை என்றும், அடியார்க்கு நல்லார் நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி எனவும் உரைக்கின்றார்.

**மாறல்ல துய்க்க:**

உணவு வகைகளை, இளமைக்கு ஏற்றது, முதுமைக்கும் வேனிற்கும் ஏற்றது, கார் கூதிர்க்கும் நாற்காலத்துக்கும் ஏற்றது உண்டு. சில நோய்க் காலத்து ஒவ்வாது ஊறு செய்யக்கூடும் என்பதை முன்னோர்கள் அறிந்திருந்தனர். பருவ காலத்துக்கு ஏற்ற உணவு வகைகளை உண்பது உடல் ஓம்பும் வழியாகும்.

ஒன்றுக்கொன்று தேனும், நெய்யும் அளவொத்து உண்டால் நஞ்சாகும் என்பார் பரிமேலழகர் (குறள்:944) "ஒவ்வாமை ஏற்படாதிருக்க பலாப் பழம் உண்டால் சுக்கு உண்க." என்பார் மணக் குடவர். (குறள்-945)

கைப்பு, புளிப்பு, தித்திப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்று சொன்ன அறுவகைச் சுவையும் இப்படி மாறுபட வகுத்து உண்ணாது, ஒருபடியே உண்ணும் சில்சுவை உண்டி ஒழித்து மருத்துவர் கூறியாங்கு உண்க என்பார் காளிங்கர் (946)

சித்த மருத்துவர்கள் ஒரு சுவை மட்டும் உண்ணாது அறுசுவையும் மாற்றி, மாற்றி உண்க என்பர்.

**கள்ளும் உணவானது:**

அக்காலத்தில் வெற்றி பெற்றோர் தமது வெற்றியைக் கொண்டாடும் விதமாகக் கள்ளுண் பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தனர். இது

*தவிர மக்கள் கள்ளை உணவாகவும் பயன்படுத்தினர் என்பதை;*

> "இலங்குவளை இடுஞ்சேரிக்
> கட் கொண்டிக் குடிப்பாக்கத்து
> நல் கொற்கையோர்."

*என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.*

*மேலும் போர்க் காலத்தில் கள்ளும், இறைச்சியும் உணவாக உண்டு உண்பவரின் மனத்தையும் உடலையும் திண்மையடைய செய்துள்ளதையும் அறியமுடிகிறது.*

*குறிப்பு:- சித்த மருத்துவத்தில் பல மருந்து களைக் கள் போன்றவற்றின் அனுபானத்தில் கொடுக்கக் கூறப்பட்டுள்ளது. எ.கா: அன்னபேதிச் செந்தூரத்தைக் கள்ளில் அனுபானித்துக் கொடுக்க இரும்புச் சத்து குறைவினால் ஏற்படும் நோய் மாறி விடும். (சித்த மருத்துவ ஆய்வுக் கோவை: பக்.138)*

*கள் என்பது பழந்தமிழரின் இன்றியமையாத உணவாக அமைந்திருந்ததை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுவதை அறிந்தோம். இதற்கு ஒத்த கருத்தாக கள் என்பதை மயக்கம் தரும் கள் என்று எடுக்கக் கூடாது என்று உ.வே. சாமிநாதய்யர் குறிப்பிடு கிறார். அரசர்களும் வேறு சிறந்த வாழ்க்கை நிலையுடைய மக்களும் கள் உண்பர் என்று அவர் கூறுகிறார். நெல்லால் செய்த கள், பனங்கள், இனிமையும் வெப்பமுடைய கள், தேனாலாகிய கள் முதலியவை மக்களுக்கு உணவாகப் பயன் பட்டிருக்கின்றன. 'இன் கடுங்கள்' என்று குறுந் தொகை (330) பாடலில் வரும் சொற்றொடர் ஒருவகைக் கள்ளிற்கு இனிய சுவையும் 'வெப்ப வீரியமும் உள்ளது' என்ற மருத்துவப் பண்பைக் குறிக்கிறது. 'வெங்கட்தேறல்' என்பதும் மருத்துவப் பண்பையே குறிக்கிறது. (சித்த மருத்துவ ஆய்வுக் கோவை: 103)*


*மேலும், போருக்குச் செல்லும் பொழுது குளிரைப்போக்கி வெம்மையைப்பெற , "நறவு", என்னும் கள்ளுண்டதைப் புறநானூற்றிலும் (2077) வழிநடையின் பொழுது ஏற்படும் உடல் வலியைப் போக்கிக்கொள்ள கள்ளுண்ட செய்தியையும் அறியமுடிகின்றது. (பொ.ஆ.படை: 85-88)*

**முடிவுரை:**

*உணவே மருந்து, மருந்தே உணவு என்பது இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் ஆய்வுகள் நடத்திக் கண்டுபிடித்திருக்கும் உண்மை. இந்த உண்மையைப் பலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் உணர்ந்திருந்ததை, மேற்கண்ட குறிப்புகள் சுட்டுகின்றன.*

●

# வாழ்த்துகள்




**2017-ஆம் ஆண்டின்
மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கான
சாகித்ய அகாடெமி விருது பெறும்
யூமா வாசுகி அவர்களுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
மனமார்ந்த வாழ்த்துகளைத்
தெரிவித்துக்கொள்கிறது.**

**மலையாளத்தில் ஓ.வி.விஜயன் எழுதிய
'கசாக்கின்டே இதிகாசம்' என்ற நாவலை
'கசாக்கின் இதிகாசம்' என
தமிழில் மொழிபெயர்த்தமைக்காக
இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.**

# எதிர் வெளியீடு

## சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்




### ரூபி பாஸ்கேயின் மர்ம நோய்

ஹஸ்தா சௌவேந்திர சேகர்

தமிழில் : இரா. செந்தில்

ரூ : 290




### கினோ

ஹருகி முரகாமி


தமிழில் : ஸ்ரீதர் ரங்கராஜ்

ரூ : 320

எமது வெளியீடுகள் தமிழகத்தில் அனைத்து முன்னணி புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

எதிர் வெளியீடு

**எதிர் வெளியீடு**
96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.
04259 - 226012 | 99425 11302 | **Email : ethirveliyedu@gmail.com**
இணையம் வழி வாங்க : **www.ethirveliyedu.in**



காவ்யாவின்
புதிய வெளியீடுகள்
ரூ.580
பொதினி
நாட்டுப்புறவியல் ஆய்வுகள்
ரூ.330
சங்கரதாஸ் சுவாமிகளின் நாடக இசைக் கருவூலம்
ரூ.500
அன்பின் பிரபந்தம்
உலகக் கவிதைகள்
ரூ.160
குடும்ப அட்டை
நாவல்
ரூ.170
குமிலா
நாவல்
எஸ்.ஏ.காதர்
ரூ.650
குமரி நாட்டில் சமணம்
தோற்றம் வளர்ச்சி வீழ்ச்சி
ரூ.170
நவீனத் தமிழ் நாடகங்களில்
பெண்கள்
ரூ.280
பெண்மொழி
புனைவும் நீக்கமும்
ரூ.430
கன்னியாகுமரிக் கோயில்
ரூ.150
வாழ்வியல் நம்பிக்கைகள்
ரூ.170
தமிழ்ச் செவ்விலக்கிய மேன்மை
ரூ.150
திண்ணைப் பேச்சாய்
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com

# சந்தியா பதிப்பகம்

நெ.77, 53வது தெரு, அசோக் நகர், சென்னை - 83




₹ 1000/-




₹ 105/-



# புரட்சிப் பாதையில் லெனின்

பி.எஸ். கிருஷ்ணசாமி

**1931**ம் ஆண்டு மார்ச்சு 23ம் தேதி. லாகூர் மத்திய சிறையில் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட கைதிகளின் ஒற்றைக்கொட்டடி. எங்கும் அமைதி தவழ்கிறது. ஆம், அது மயான அமைதி. அங்கு மூலையொன்றில் இருந்த கொட்டடிக்குள் இளைஞன் ஒருவன் - அவனும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றும் நேரத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவன்தான் - எனினும் ஒரு

புத்தகத்தை தனது கவனம் முழுமையும் செலுத்தி படித்துக் கொண்டிருந்தான். அவன் கொட்டடிக்கு முன்னால் நீட்டிய சனியன்களைக் கொண்ட துப்பாக்கிகளுடன் நின்ற காவலர்கள் அவன் கவனத்தை எந்த வகையிலும் பாதித்ததாகத் தெரிய வில்லை. அப்பொழுது சிறை அதிகாரி வருகிறார். பல வார்டர்கள் புடைசூழ கலகலவென ஓசையுடன் கதவுகள் திறக்கப்படுகின்றன. ஆனால் புத்தகத்தில் லயித்திருந்த இளைஞனின் கவனம் திரும்பிய பாடில்லை. உடனே அதிகாரி, "தம்பி எழுந்திரு, தூக்குமேடை செல்லும் நேரம் வந்து விட்டது!" என்றார். அப்பொழுதும் இளைஞன் அதிகாரியை ஏறிட்டுப் பார்க்காமலேயே, "கொஞ்சம் பொறுங்கள், இன்னும் இரண்டு பக்கங்கள்தான் உள்ளன. முடித்து விட்டு வருகின்றேன்" என்று கூறி, அவ்விதமே முடித்துவிட்டு, 'சரி, நான் இப்பொழுது தயார்' என திருப்தியடைந்த முகத்தோடு, தூக்கு மேடைக்கு செல்ல எழுகின்றான்.

இந்த இளைஞன் வேறு யாருமல்ல. வீரன் பகத்சிங்தான். அவன் அப்படி ஆழ்ந்து படித்த நூல் எது தெரியுமா? லெனினைப் பற்றிய நூல்.

இவ்வாறு உலகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் ஈடுபட்ட அனை வருக்கும் ஒளிகாட்டி வழிகாட்டும் தீபஜோதியாக விளங்கியது லெனின் பெயர். இன்னும் அவ்வாறே விளங்குகிறது.

இத்தகைய மாமேதை லெனின் 1870 ஏப்ரல் 10ல் ரஷ்யாவில் சின்பிர்ஸக் என்ற ஊரில் ஒரு முற்போக்கான ரஷ்ய அறிவாளி வர்க்கக் குடும் பத்தில் பிறந்தார். அவருடைய மூத்த சகோதரர் அலெக்சாந்தருடைய திடமான மனோவலிமையும், உயர்ந்த ஒழுக்க சீலமும் அவரைப் பெரிதும் ஈர்த்தது. அலெக்சாந்தர் தான் முதன்முதலாக லெனினுக்கு மார்க்சிய இலக்கியம் பற்றிக் கூறியவர். மூன்றாவது ஜார் மன்னனை அலெக்சாந்தர் கொலை செய் வதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு அவர் தூக்கிலிடப்பட்டார். இது லெனினுக்கு பேரதிர்ச்சியை அளித்தது. புரட்சிகரப் போராட்டத்திற்கு தனது வாழ்வையே அர்ப்பணித்துக்கொள்வதற்கான அவரது உறுதியை இந்த சம்பவம் மேலும் ஊர்ஜிதப்படுத்திற்று. தனது அண்ணனின் வீரத்தையும் தியாகத்தையும் லெனின் போற்றினார். ஆனால் அவர் வேறுபட்ட புரட்சிப் பாதையை பின்பற்றத் தீர்மானித்தார். தனிப்பட்டவர்களை கொலை செய்வதன் மூலம் எதேச்சதிகாரத்தோடு போராட முயலுதல் தவறானதும் பயனற்றதுமாகுமெனக் கருதினார். இளைஞனாக இருந்தபொழுதே மார்க்சியத்தை ஆழ்ந்து கற்றார்.

### மார்க்சியத்தின் உண்மையான சீடர்

பதினேழு வயதிலேயே புரட்சிகர மாணவர் கூட்டத்தில் லெனின் கலந்துகொண்டார். எனவே நாடு கடத்தப்பட்டார். அவர் மீது பலத்த போலீஸ் கண்காணிப்பு இருந்து வந்தது, பின்னர் வரவிருக்கும் புரட்சிகரப் போராட்டத்திற்குத் தேவையான அறிவனைத்தையும் அவர் இந்த காலக்கட்டத்தில் தான் சேகரித்தார். அப்பொழுதுதான் அவரது மார்க்சிய கம்யூனிசக் கருத்துக்கள் ஓர் இறுதி வடிவம் பெற்றன. மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் ஆகியோரது மாபெரும் லட்சியத்திற்கும் போதனைகளுக்கும் லெனின் ஓர் உண்மையான சீடரானார்.

தொழிலாளர்களால் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தெளிவாகவும் எளிய நடையிலும் தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்தார். துண்டுப் பிரசுரங்களையும், கட்டுரைகளையும், சிறு நூல்களையும் எழுதி புரட்சிகரப் பணியில் பேரார்வத்துடன் லெனின் மூழ்கினார். தொழி லாளி வர்க்கத்தினது போராட்டத்தின் முன்னேற்றப் பாதையைச் சுட்டிக்காட்டினார்.

### போல்ஷ்விக் கட்சியை புது வடிவத்தில் உருவாக்கினார்

புது வடிவிலான புரட்சிகரமான தொழிலாளி வர்க்கக் கட்சியைக் கட்ட வேண்டுமென்றும், முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்காக தொழிலாளி வர்க்கத்தை ஸ்தாபனரீதியாகத் திரட்டி அவர் களுக்குத் தலைமைதாங்கும் ஆற்றலை அக்கட்சி பெற்றிருக்க வேண்டுமென்றும், கட்சியானது தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை தாங்க வேண்டு மென்றால், மார்க்சிய தத்துவத்தை தொழிலாளி வர்க்க இயக்கத்திற்குள் புகுத்த வேண்டுமென்றும், அதன் வாயிலாக தொழிலாளி வர்க்கத்திற்கு சோஷலிச உணர்வை ஊட்ட வேண்டுமென்றும் புரட்சிகரமான தத்துவமில்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்கமுடியாதென்றும் லெனின் எடுத் துரைத்தார். அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டி போல்ஷ்விக் கட்சியை 1903ல் புதிய வடிவத்தில் தொழிலாளிவர்க்கக் கட்சியாக முதன் முதலாக லெனின் உருவாக்கினார். அக்கட்சியின் திட்டத்தை புதுவடிவில் வகுத்தார். தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான போராட்டமே வர்க்கக் கட்சியின் முக்கியக் கடமை என்று அக் கட்சியின் திட்டம் கூறியது. நேரடியாக கட்சிக் கமிட்டிகளுக்கு லெனின் வழிகாட்டினார். 'இஸ்கரா' என்ற தொழிலாளிவர்க்கப் பத்திரிகையை முதன் முதலாகத் துவக்கினார்.

### பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை

1905-ல் ரஷ்யாவில் வெடித்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிப் போராட்டத்திற்கு லெனின் நேரிடையாகத் தலைமை தாங்கினார். பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியின் விசேட அம்சங்களையும், அதன் இயக்க சக்திகளையும், எதிர்கால வாய்ப்புக் களையும் வெளிக்கொணர்ந்த முதல் மார்க்சிய வாதி லெனினே ஆவார். பூர்ஷ்வா புரட்சியின் முழு வெற்றியினால் சோஷலிசத்திற்கான தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் முன்னேறிச் செல்லத் துணைபுரிய முடியுமென லெனின் நம்பினார். தொழிலாளி வர்க்கமும், விவசாயி வர்க்கமும் மாபெரும் போராட்டத்தை நடத்தியபோதிலும், இந்தப் புரட்சியானது ஜாரிசத்தால் நசுக்கப்பட்டு தோல்வியடைந்தது. லெனின் மீண்டும் வெளிநாடுகளில் தங்கவேண்டி வந்தது.

### பிராவ்தா தினசரி பத்திரிகையைக் கொணர்ந்தார்

புதிய வலிமையுடனும், ஆற்றலுடனும் அடுத்த புரட்சிக்கான தயாரிப்புகளில் இறங்கினார். பூர்ஷ்வா புரட்சியில் தோல்வி அவரது போராட்ட உறுதியை உடைத்துவிடவில்லை. எதிர்கால வெற்றியை தீர்க்கதரிசனத்துடன் கண்டார். அவரது நம்பிக்கை ஏனையோர் நெஞ்சங்களிலும் நம்பிக்கையினை ஊட்டியது. 1912-ல் ‘பிராவ்தா’ என்ற தினசரிப் பத்திரிகையைக் கொணர்ந்தார். மார்க்சிய போதனைகளின் சாராம்சம் பற்றியும், மார்க்சியம் என்னும் புரட்சிகர தத்துவத்தின் பொருள் பற்றியும் தினந்தோறும் பிராவ்தா பத்திரிகையில் எழுதினார். இரண்டாண்டுகளுக்குள் 280 கட்டுரைகளுக்கும் அதிகமாக அவர் எழுதினார்.

### தனியொரு முதலாளித்துவ நாட்டில் கூட சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெறும்

1914ல் ஏகாதிபத்திய யுத்தம் துவங்கியது. அதற் கெதிராக மிக உறுதியான போராட்டத்தைத் துவக்கினார். போரின் மீது போர் தொடுங்கள் என்ற லெனினது வீரமிக்க அறைகூவலே உலகம் முழுவதும் கேட்டது. தொழிலாளர்கள் பிற நாடு களிலுள்ள தமது சக தொழிலாளர்களைச் சுட்டுக் கொல்லக் கூடாது என்றும், மாறாக பிற்போக்கு பூர்ஷ்வா அரசுகளுக்கு எதிராகத் தமது துப்பாக்கி களைத் திருப்பவேண்டுமென்றும் லெனின் அறை கூவினார். இது தொழிலாளி வர்க்கப் புரட்சிக்கான அறைகூவலாகும். தொழிலாளி வர்க்க சர்வ தேசியப் பதாகையின் கீழ் எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்து வதும் ஒருங்கிணைப்பதும் பிரதானமானது என்று லெனின் கருதினார். சமுதாய வளர்ச்சி குறித்த புதிய விவரங்களின் அடிப்படையில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் சோஷலிசப் புரட்சியானது ஆரம் பத்தில் ஒரு சில முதலாளித்துவ நாடுகளிலோ அல்லது தனியொரு முதலாளித்துவ நாட்டிலோ கூட வெற்றிபெற முடியுமென லெனின் முடிவு கட்டினார். சோஷலிசப் புரட்சி சம்பந்தமான மார்க்சிய தத்துவத்தில் இது மேலும் ஒரு வளர்ச்சி யாகும்.

### புதுயுகத்தை தோற்றுவித்தார்

ரஷ்யாவில் 1917 பிப்ரவரிப் புரட்சி வெற்றி பெற்றது, ஏப்ரல் 3-ம் நாள் மீண்டும் லெனின் ரஷ்யா வந்து சேர்ந்தார். நாடு பூரிப்போடு விழாக் கோலத்துடன் அவரை வரவேற்றது. பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியினிடமிருந்து தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு ஆட்சியை மாற்றவேண்டி சோஷலிசப் புரட்சிக்கான ஒரு ஸ்தூலமான திட்டத்தை அவர் வெளியிட்டார். அன்றைய நிலவரத்தில் புரட்சியானது சமாதான மார்க்கத்தை பின்பற்றலாமென அவர் நம்பினார். ஆனால் தற்காலிக பூர்ஷ்வா அரசாங்கம் லெனினை கைது செய்ய முற்பட்டது. எனவே அவர் மீண்டும் தலை மறைவானார். கட்சிப்பத்திரிகை மீண்டும் தடை செய்யப்பட்டது. ஜனநாயக உரிமைகள் மீண்டும் பறிக்கப்பட்டன. எனவே, அமைதியான முறையில் ஆட்சியைக் கைப்பற்ற தொழிலாளி வர்க்கத்திற்கு ஏற்பட்டிருந்த சாத்தியப்பாடுகளில் மாறுபட்ட நிலைமை உருவாகிவிட்டது. இதனால், ஆயுதம் தாங்கிய புரட்சியை நடத்தியாக வேண்டிய அவசியமேற்பட்டது. அப்புரட்சியை திட்டமிட்டு அக்டோபர் 25ல் துவக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு வழி காட்டினார். புரட்சி வெற்றி வாகை சூடியது. இதுவே மாபெரும் அக்டோபர் புரட்சி யாகும். இது அனைத்துலக வரலாற்றில் ஒரு முக்கிய மான திருப்புமுனையாகும். ஒரு புதிய யுகத்தை முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் யுகத்தை, சோஷலிசம் கம்யூனிசத்தின் வெற்றி யுகத்தைத் துவக்கி வைத்தது. இந்தப் புரட்சியினை ஏற்பாடு செய்து உத்வேகமூட்டியவர் லெனினே ஆவார்.

### மக்கள் ஆதரவு பெருகிற்று

புரட்சிக்கான தயாரிப்பும், புரட்சியின் வழியும், லெனின் ஒரு மாபெரும் மார்க்சிய தத்துவவாதி யென்பதையும், ராஜதந்திரி, கம்யூனிஸ்டு கட்சியின் விவேகமிக்க தலைவரென்பதையும், புரட்சிக் கலையில் கைதேர்ந்தவரென்பதையும் உலகுக்கு வெளிப் படுத்தின. கம்யூனிஸ்டு கட்சி அதிகாரத்தில் அமர்த்தப் பட்டவுடனேயே மக்கள் பாலுள்ள கடமைகளை

அது நிறைவேற்றத் தொடங்கியது. புரட்சி பூர்த்தி செய்யப்பட்ட முதல் நாளிலிருந்தே அந்த ஆதாயங் களைப் பேணிப்பாதுகாத்து வளர்க்கும் பணியில் முழுமூச்சுடன் இறங்கினார். சோஷலிச நிர்மாணத்தில் பரந்த அளவில் தொழிலாளர்களையும் விவசாயி களையும் தீவிரமாக ஈடுபடுத்த வேண்டியது கட்சியின் தலையாய கடமையென லெனின் கூறினார். கட்சியின் கேந்திரக் கடமைகளையும் அரசாங்கத்தின் கொள்கையையும் உருவாக்கி வகுத்தார். உழைக்கும் சுரண்டப்படும் மக்களது உரிமைப் பிரகடனம் ஒன்றை லெனின் தயாரித்தார். மக்களது நலன்களுக்காக கட்சியாலும் சோவியத் அரசாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் உழைப்பாளி மக்களிடம் மாபெரும் செல்வாக்கினை ஏற்படுத்தின. மக்கள் மேலும் மேலும் அரசை ஆதரித்து அதிக அளவில் திரளலாயினர்.

### போல்ஷ்விக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆயிற்று

இந்தக் கால கட்டத்திலும் ஏகாதிபத்தியப் போர் தொடர்ந்து நடந்துகொண்டுதானிருந்தது, அந்தப் போர் ஒழிக்கப்பட வேண்டியதை முதல் வேலையாக லெனின் கருதினார். ஏகாதிபத்திய யுத்தத்தினின்று விலகிக்கொள்ளத் தீர்மானித்தார். பிரிட்டனும், பிரான்சும், அமெரிக்காவும் ஜெர்மனி யுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த மறுத்து விட்டன. சோவியத் அரசு ஜெர்மனியுடன் தனியாக ஒரு சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டு மென லெனின் கருதினார். ஆனால் ஜெர்மனி சோவியத் பிரதேசத்தில் பெரும்பகுதியை சமாதானப் பரிசாக விரும்பிற்று.

சோவியத் குடியரசைக் காப்பாற்ற தியாகங்கள் செய்யப்படத்தான் வேண்டுமென்று, சோவியத் ஆட்சியை வலுப்படுத்தவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாக்கவும், குறுகிய காலத்திற்காவது சமாதானம் வேண்டியது தான் என்று லெனின் கூறினார். ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் எற்பட்டது. இக் கால கட்டத்தில் தான் போல்ஷ்விக் கட்சி என்பதை கம்யூனிஸ்ட் கட்சியென பெயர் மாற்றம் செய்யப் பட்டது. பரிபூரண கம்யூனிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோமென்பதை கம்யூனிஸ்ட் என்ற பெயர் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது என்று லெனின் கூறினார்.

### புரட்சிப் போராட்டத்தின் நெளிவுசுளிவு

ஏகாதிபத்திய யுத்தத்தினின்று விலகிக் கொண்ட தானது, சோவியத் நாட்டின் தொழிலாளி வர்க்கத் திற்கும், பாடுபடும் விவசாயிகளுக்கும் கிடைத்த ஆதாயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள, அவர் களுக்குப் பெரிதும் தேவைப்பட்ட அந்த ஓய்வை அளித்தது, சோவியத் ஆட்சியைப் பலப்படுத்தி சோஷலிசப் புரட்சியை முன்னேற்றவும் தேவைப் பட்ட அந்த ஓய்வு பயனளித்தது. இதைச் சாதித்ததில் மிகப் பெரும் பெருமை லெனினுக்கே உரியது. சமாதான உடன்படிக்கையை மேற்கொண்டதானது லெனினுடைய நெளிவுசுளிவான நடைமுறைத் தந்திரத்திற்கும், வருங்காலப் போர்களில் வெற்றி பெறுவதற்கான சக்திகளை திரட்டப் போதுமான அவகாசத்தைப் பெறுவதற்கும், தேவையான போது பின்வாங்கும் அவரது திறனுக்கும் மிகச் சிறந்த சரித்திர முக்கியத்துவம் பெற்ற நடவடிக்கையாகும் - கிடைத்த அந்த சமாதான இடைக்காலத்தை லெனினும், கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசாங்கமும் சோவியத் அதிகாரத்தை ஸ்திரப் படுத்தவும், சோஷலிச நிர்மாணத்தைத் துவக்கவும் பயன்படுத்துவதில் முனைந்தனர்.

### லெனின் சுடப்பட்டு உயிர் மீண்டார்

எனினும் இந்த இடைவெளி ஓய்வு நீடிக்க வில்லை. 1918ம் ஆண்டு இளவேனிற்காலத்தில் ஆயுதபலத்தைக் கொண்டு, புதிய சோஷலிச நாட்டை நசுக்கிவிடும் முயற்சியில் பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜப்பானிய ஏகாதிபத்தியங்கள் சோவியத்துக்கு எதிராகத் தங்களது யுத்தத்தைத் தொடங்கின. தூக்கி யெறியப்பட்ட முதலாளிகளும், நில உடைமை யாளர்களும், வெண்காவல் படையினரும், எதிர்ப் புரட்சிக் காரர்களும் ஓர் உள்நாட்டு யுத்தத்தையும் தொடுத்தனர். ஏகாதிபத்தியவாதிகளால் தூண்டப் பட்டு அவர்கள் லெனினையும் அவரது கூட்டாளி களையும் கொலைசெய்ய முயன்றனர். 1918 ஆகஸ்ட் 30ம் தேதி 'காப்லான்' என்னும் ஒரு சோஷலிஸ்டு புரட்சிவாதி விஷம் தோய்ந்த குண்டுகள் கொண்ட கைத்துப்பாக்கியால் பக்கத்திலிருந்தே லெனினைச் சுட்டு அவரை படுகாயப்படுத்தினாள். லெனின் உயிர் பேராபத்திலிருந்தது. சில நாட்களுக்குப் பின்னர் குணமடைந்தார். குணமடைந்தவுடனேயே மீண்டும் கட்சியின் தலைமைப் பதவியையும் நாட்டின் தலைமைப் பதவியையும் லெனின் வகிக்க ஆரம்பித்தார்.

### சோஷலிச மலர்ச்சி

சற்றும் ஓய்வுஒழிச்சலின்றி லெனின் தனது வலிமையையும் ஆற்றலையும் தனது புரட்சிப் பணியிலேயே ஈடுபடுத்தினார். 1920 தொடக்கத்தில் அன்னிய தலையீட்டாளர்களையும் உள்நாட்டு, எதிர்ப்புரட்சியாளர்களையும் எல்லா முனைகளிலும் லெனினுடைய வழிகாட்டுதலில் செஞ்சேனை தோற்கடித்தது. நாட்டில் சமாதானமாக வாழ்

*வதற்கு சிறிது அவகாசம் கிடைத்தது. உடனடியாக லெனினும் கம்யூனிஸ்ட் கட்சியும் நாட்டின் மூல வளங்களில் பெரும்பகுதியை பொருளாதார நிர்மாணத்தில் ஈடுபடுத்தினர். அதில் பரிபூரண வெற்றியும் கிட்டிற்று. முதன் முதலாக சோஷலிசம் மலர்ந்தது ரஷ்யாவிலே.*

**லெனின் மறைவு**

*1921 ஜனவரி 21ம் நாள் மாலை 6-50க்கு மூளை இரத்த நாளங்கள் வெடிப்பினால் லெனின் இறந்தார். கம்யூனிஸ்ட் அகிலத்தை ஸ்தாபித்தவரும், சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் பாசத்திலும் பெருமை யிலும் உருவாகி நின்றவரும், ஒடுக்கப்பட்ட கீழைய மக்களுக்கு வழிகாட்டும் பதாகை ஏந்தியவரும், ரஷ்ய நாட்டின் தொழிலாளி வர்க்க சர்வாதி காரத்தின் தலைவரும், சோவியத் அரசை நிறுவிய வரும், கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பாளரும், உன்னத அறிஞரும், கருணை உள்ளம் கொண்ட வரும், அடக்கமான மனிதரும், மாபெரும் தலை வருமான லெனின் இறந்து விட்டார். மக்களின் துயர் கங்குகரையற்றுப் பொங்கி வழிந்தது. ஜனவரி 27ம் தேதி மாலை 4-30க்கு லெனினது இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டு அவரது உடலைத்தாங்கி யுள்ள சவப்பெட்டி செஞ்சதுக்கத்தில் ஒரு விசேஷ சமாதியில் வைக்கப்பட்டது. சமாதியில் அவரைக் காண இன்றும் மக்கள் திரள் திரளாக க்யூ வரிசையில் மைல் கணக்கில் நின்று அவருக்கு மரியாதை செலுத்தி வருகிறார்கள். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் லெனினியம் என்றழைக்கப்படும் மகத்தானதொரு புரட்சிகரச் சித்தாந்தத்தை லெனின் மரபுரிமை யாக விட்டுச்சென்றார். தனது 30 ஆண்டுகால அரசியல் நடவடிக்கைகளின் போது லெனின் நூற்றுக் கணக்கான நூல்களையும், துண்டுப் பிரசுரங் களையும், கட்டுரைகளையும், கடிதங்களையும் எழுதியுள்ளார். கட்சிக் காங்கிரஸ்களிலும், மாநாடு களிலும், உழைக்கும் மக்கள் கூட்டங்களிலும் பற்பல உரைகள் ஆற்றியுள்ளார். மார்க்சியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் லெனின் வளர்ச்சியுறச் செய்தார். அவரது உருவம் மக்களின் இதயங்களிலும் எண்ணங் களிலும் என்றென்றும் வாழும். அவரது மாபெரும் இலட்சியங்களும், போதனைகளும் யுகயுகமாக வாழும் லெனினது இலட்சியம் வெல்லற்கரியது!*

***1973ல் வெளிவந்த***
***மார்க்சிய ஒளி இதழ் 1ல் வெளியான கட்டுரை***



20-12-2017 அன்று திருவாரூர் ஆர்.டி.ஓ. அலுவலகம் அருகில்
என்.பி.டி. மற்றும் என்.சி.பி.எச். இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை
திருவாரூர் மாவட்ட ஆட்சியர் எல்.நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ். அவர்கள் திறந்து வைத்தார்.
திருவாரூர் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் திருமதி ஆர்.முத்து மீனாட்சி மற்றும்
என்.சி.பி.எச். பொது மேலாளர் தி.இரத்தினசபாபதி மற்றும்
தஞ்சாவூர் என்.சி.பி.எச். மேலாளர் ச.கருணாமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# எதிர் வெளியீடு

## சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்




வரலாற்றில்
புராணத்திற்கு
இடமில்லை

தொகுப்பும்
மொழியாக்கமும் :
செ. நடேசன்

ரூ : 110



நரகத்தில்
ஒரு பருவகாலம்

ஆர்தர் ரைம்போ

தமிழில் :
கார்த்திகைப் பாண்டியன்

ரூ : 75




பெர்சியாவின்
மூன்று இளவரசர்கள்
உலக இதிகாசங்களில் குழந்தைகள்

ரோஹிணி சவுத்ரி

தமிழில் :
சசிகலா பாபு

ரூ : 200




கடவுள்
என்னும் மாயை

தருமி

ரூ : 350




அடிப்படை
உடலியல்

அக்கு ஹீலர்
அ. உமர் பாரூக்

ரூ : 130




தமிழகத்தின்
பறவைக்
காப்பிடங்கள்

ஏ. சண்முகானந்தம்
முனைவர். சா. செயக்குமார்

ரூ : 300

**எமது வெளியீடுகள் தமிழகத்தில் அனைத்து முன்னணி புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்**

எதிர் வெளியீடு

**எதிர் வெளியீடு**
96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.
04259 - 226012 | 99425 11302 | **Email : ethirveliyedu@gmail.com**
இணையம் வழி வாங்க : **www.ethirveliyedu.in**



# பொங்கல் விழா

## நா. வானமாமலை

**த**மிழ்நாட்டில் தை மாதம் அறுவடைக் காலமாக இருந்தது. இப்பொழுது காலநிலை மாறுபாட்டால் பங்குனி அறுவடைக்காலமாக ஆகிவிட்டது. முற்காலத்தில் தைப்பொங்கல் விழா அறுவடை விழாவாகவே கொண்டாடப் பட்டது. இன்று தைமாதம் அறுவடைக் காலமாக இல்லாவிட்டாலும் வழக்கத்தையொட்டி இன்று தைமாதப் பிறப்பை அறுவடை விழாவாகவே தமிழ் மக்கள் கொண்டாடி வருகிறார்கள்.



அந்நாளில் கதிரவனைத் தமிழ் மக்கள் வணங்கு வதாக 'கல்கி' கூறுகிறது. ஏனெனில் கதிரவனே பூமியின் செழிப்புக்குக் காரணம் என்று கல்கி கருதுகிறது. கல்கியின் கருத்து தற்கால விஞ்ஞானக் கருத்துக்கு ஒருவாறு ஒத்திருக்கலாம். ஆனால் வரலாற்றுக்கோ, வழக்கத்துக்கோ, மரபுக்கோ அது பொருந்துவதாக இல்லை. பொங்கல் எவ்வா றெல்லாம் கொண்டாடப்பட்டு வந்தது. இன்று பொங்கல் விழாக் கொண்டாடப்படும் முறையில் வரலாற்று எச்சங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பொங்கல் விழாவின் உண்மையான தன்மை பற்றி நாம் முடிவுக்கு வரவேண்டும்.

பொங்கல் விழாவிற்கும் பாவை நோன்பிற்கும் தொடர்பு உண்டு. பாவை நோன்பு மார்கழி மாதம் தொடங்கி தை மாதப் பிறப்பன்று முடிவது. ஏழாம் நூற்றாண்டில் பாவை நோன்பு கொண்டாடப் பட்ட விதத்தைக் குறித்து 'திருப்பாவை'யினின்று நாம் அறியலாம்.

**'வையத்து வாழ்வீர்காள்!**
**நாமும் நம் பாவைக்கு,**
**செய்யும் கிரிசைகள்,**
**கேளீரோ பாற் கடலுள்**
**பையத் துயின்ற**
**பரமன் அடிபாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம்**
**நாட் காலே நீராடி,**
**மையிட்டு எழுதோம்**
**மலரிட்டு நாம் முடியோம்**
**செய்யாதன செய்யோம்**
**தீக்குறளைச் சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும்**
**ஆந்தளையும் கைகாட்டி**
**உய்யுமாறு எண்ணி**
**உகந்தேல் ஓரெ ம்பாவாய்!'**

மார்கழி மாதம் முழுவதும் கன்னியர்கள் மேற்கண்ட முறையில் நோன்பு நோற்கிறார்கள்.

இந்நோன்பு யாரை மகிழ்விக்க? கண்ணனை மகிழ்விக்கவா? இல்லை. 'அவன் அடிபாடி' அவர்கள் நோன்பு நோற்றாலும் நோன்பு பாவை நோன்பே; பாவை மகிழ்விக்கவே. பாவை யார்? பாவை மண்ணாலோ, சாணத்தாலோ, மணலாலோ செய்த படிமம். இது பூமியையே குறிக்கும். இந் நோன்பு பூமியை மகிழவிக்கவே நோற்கப்படுகிறது. பூமி மகிழ்ந்தால் செழிப்பைத் தருவாள். ஆண்டாள் ஆயர் மகளிர் கொண்டாடும் பாவை நோன்பை வருணிக்கிறாள். ஆகையால் அவர்களுக்குச் செல்வச் செழிப்பு எதுவோ, அதனைப் பாவை அருளும் என்று பாடுகிறாள்.

**'ஓங்கி உலகளந்த**
**உத்தமன் பேர் பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச்**
**சாற்றி நீராடினால்,**
**தீங்கின்றி நாடெல்லாம்**
**திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்குபெரும் செந்நெல்**
**ஊடு கயல் உகள**
**பூங்குவளைப் போதில்**
**பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து**
**சீர்த்த முலைப்பற்றி**
**வாங்கக் குடம் நிறைக்கும்**
**வள்ளற் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம்**
**நிறைந்தேல் ஓர் எம்பாவாய்'**

ஆயர் மகளிர் விரும்பும் செல்வம் எதுவென்று ஆண்டாள் மேற்கண்ட செய்யுளில் குறிப்பிடு கிறாள். இச்செல்வத்தைப் பாவை தருவாள். அவள் தருவதற்கு, ஆயர் மகளிர் தங்கள் உடல் வருந்த நோன்பு நோற்கிறார்கள். பூமி செழிப்பைத் தருவதற்கு இவர்கள் உடலை வருத்துவானேன்? இவ்வினாவிற்கு விடைகாண தொல்குடி மக்களின் உலகக் கண்ணோட்டத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இயற்கையின் இயக்க விதிகளைத் தொல்குடி மக்கள் அறிந்தவர்களல்லர். கூட்டுழைப்பினால் அவர்கள் இயற்கையோடு போராடினார்கள். போராட்டத்தின் முதல் வெற்றியே புன்செய்ப் பயிர்த்தொழில். அதற்கடுத்த வெற்றி ஆடுமாடு களைப் பழக்கியது. மனிதன் தனது செயலால் இயற்கையினின்று தனக்குத் தேவையானவற்றைப் பெற முடியுமென்று கண்ட தொல்குடி மக்கள் இயற்கை விதிகளோடு எவ்விதத் தொடர்புமில்லாத தங்களது செயல்களால் இயற்கையை வசப்படுத்த முடியுமென்று நம்பினார்கள். இடி முழக்கம் போன்ற ஓசைகளை எழுப்பிக் கூத்தாடினால், தங்களைப் பார்த்து இயற்கையும் மழையைப் பொழியும் என்று எண்ணினார்கள். அதற்காக ஒரு கூத்தும் வகுத்துக் கொண்டார்கள். காற்றிலிருந்து பயிரைப் பாதுகாக்கக் காற்றில் அசைந்தாடுவது போல் நடனமாடி அதைப்போலப் பயிரையும் ஆடும் படிக் கேட்டுக் கொண்டார்கள். அசைந்தாடினால் காற்று பயிரை வேரோடு பிடுங்கி எறியாது என்பது அவர்கள் நம்பிக்கை. உலக முழுவதிலும் இத்தகைய வழக்கங்கள் இருந்திருக்கின்றன. தொல்குடி மக்களினத்தவர் பலரிடம் இத்தகைய வழக்கங் களைக் காணலாம். இதனை நாம் (Magic) மந்திரம்

என்றழைக்கிறோம். இம் மந்திரம்தான் மனிதனுக்கும் இயற்கைக்கும் ஏற்பட்ட முதல் தொடர்பு. மனிதன் மந்திர முறைகளினால் இயற்கையை வசப்படுத்த முயன்றான். இயற்கையை அறிய புறவய முறைகள் தோன்றிய பின் மந்திரத்தைக் கொன்று விட்டு, அதன் வயிற்றில் விஞ்ஞானம் தோன்றியது. இம் மந்திரத்தின் எச்சமே பாவை நோன்பு. தங்கள் உடலை வருத்தித் தூய்மையாக இருந்தால் பாவையும் வரந்தரும் என்ற ஆயர் மகளிரது நம்பிக்கையே திருப்பாவையில் கவிதா ரூபத்தில் வெளிப்படுகிறது.

இதை உறுதிப்படுத்த ஒரே ஒரு சான்று காட்டுவோம். மந்திர முறையில், இயற்கைச் சக்தி களை அழைத்து மனிதன் கட்டளையிடுவது போல் சொற்களை மறுபடி உச்சரிப்பது வழக்கம். தெய் வத்தை வேண்டிக் கொள்வதென்பது மனிதன் தன் உடலில் சக்தியை வரவழைக்கவே சக்தி பெற்றதாக அவனுக்குத் தோன்றியதும் இயற்கைச் சக்திகளை நோக்கி மனிதன் கட்டளைகளைப் பிறப்பிப்பான். இவ்வாறு ஆயர் மகளிர் மழையைப் பார்த்துக் கூறுவதைக் கேளுங்கள்:

''தாழாதே சார்ங்கம்
உதைத்த சரமழை போல்
வாழ உலகினில்
பெய்திடாய்; நாங்களும்;
மார்கழி நீர் ஆட
மகிழ்ந்தேல் ஓர் எம்பாவாய்;

'நாங்கள் வாழ நீ பெய்' என்ற மந்திர மொழியாக அவர்கள் கட்டளையிடுகிறார்கள்.

மழை பெய்து பூமி விளைந்து அறுவடை ஆனபின் பாவைக்கும் அவர்கள் செய்யப்போகும் விழாச் சிறப்புகளைப் பற்றியும் முன்கூட்டியே ஆயர் மகளிர் சொல்லுகிறார்கள். அதுதான் அறுவடைத் தினத்தன்று அவர்கள் பாவைக்குச் செய்யப் போகும் சிறப்பான விழா.

'கூடாரை வெல்லும் சீர்க்
கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டு
யாம்பெறும் சம்மானம்
நாடும் புகழும்
பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள் வளையே
தோடே, செவிப் பூவே
பாடகமே என்று அனைய
பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம்
அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து
முழங்கை வழிவாரக்
கூடி இருந்து
குளிர்ந்தேல் ஓர் எம்பாவாய்!'

* * *

கறவைகள் பின் சென்று
கானம் சேர்ந்துண்போம்.

அறுவடையின் பயனை அவர்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சியே பாவைக்குச் செய்யும் விழா.

இவ்விழாவைக் கொண்டாடுபவர்கள் பெண்கள். ஆரம்பத்தில் உழவுத் தொழிலைக் கண்டுபிடித்த வர்கள் பெண்களாதலால் அவர்களே அவ்விழாவிற் குரியவர்களாகிறார்கள். பாவையும் பெண் தெய்வம். அது பூமியின் படிமம். அவளை மந்திர மூலமும் பாட்டின் மூலமும் மகளிர் மகிழ்விக்கிறார்கள். மகளிர் கண்ணனை வழிபடுகிறார்களென்றாலும் கண்ணனிடம் பறை மட்டுமே கேட்கின்றார்கள். பறை எதற்கு? குரவைக் கூத்தாடப் பறையை முழக்க வேண்டி பறையைக் கண்ணனிடம் பெற்று அவர்கள் பாவைப் படிமம் செய்து அதன் முன் குரவையிடுவார்கள். அவர்கள் 'சம்மானம்' பெறுவது கண்ணனிடமல்ல, பாவையிடமே. இன்றும் பொங்கல் பொங்கும்போது பெண்கள் குரவையிடுகிறார்கள். இது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் குரல் ஒலி. இது குரவைக் கூத்தின் எச்சம்.

இவ்விழா புறநானூற்றுக் காலத்தில் கொண் டாடப்பட்டது. நெல்களத்தைப் போர்க்களத்துக்கு உவமை கூறுவது பண்டைப் புலவர் மரபு. குறுங் கோழியூர் கிழாரென்னும் புலவர் நெல் களத்தை வருணித்து அதனைப் போர்க்களத்துக்கு உவமை கூறுகிறார். அன்று அறுவடை விழா 'சாறு கொண்ட களம்' என்று புலவர் கூறுகிறார். சாறு என்றால் விழா. அறுவடை விழாவைப் பற்றி இச் செய்யுளி லிருந்து நமக்குச் சில வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டு உழவர் பொங்கல் கொண்டாடிய முறையைப் பற்றி இச்செய்யுள் அறிவிக்கிறது.

'வலங்க செந்நெல் கதிர் வேய்ந்த
வாய் கரும்பின் கொடிக் கூரை
சாறு கொண்ட களம் போல,
வேறு வேறு பொலிவு தோன்ற
குற்றானா வுலக்கையால்
கலிச் சும்மை வியாலங் கண்'

நெற்கதிர் வரிந்த கூரை வீடுகள். கரும்பை வாசலில் தோரணமாகக் கட்டியிருக்கிறார்கள்.

இவ்வலங்காரம் விழா நாளை அறிவிக்கின்றது. தானியம் குவியலாகக் கிடக்கிறது. உலக்கையைக் கழுவி அணி செய்து வைத்திருக்கிறார்கள். அது நெல் குற்ற அல்ல. வள்ளக் கூத்தாடு களத்தின் நடுவே கிடத்துவதற்காக வைத்திருக்கிறார்கள். இவ்வாறு விழா கொண்டாடப்படுகிறது. இவ் விழா வள்ளைக் கூத்து நெல் குற்றுவது போல ஆடும் கூத்து. ஆகவே பெண்கள் ஆடும் கூத்து, கைக் கூத்து விழாவில் மகளிரின் பங்கை வலியுறுத்தும். உழவுத்தொழிலின் ஆரம்ப காலத்தில் மகளிர் அத்தொழிலில் ஈடுபட்டிருந்ததன் எச்சமாக இக் கூத்து காணப்படுகிறது.

அறுவடை விழா, அறுவடையன்று தான் நிகழும். அன்று உழவர் மனமகிழ்ச்சி கொள் வார்கள். அன்றுபோல் என்றும் மகிழ்ச்சி கொள்ளும் உழவர் பெருமக்கள் வாழும் நாட்டையுடையவன் எங்கள் அரசன் என்று பிசிராந்தையார், கோப் பெருஞ் சோழனைப் புகழ்ந்து பாடுகிறார். ஒரு நாள் விழாவன்று வயிறு நிறைந்தாற் போதாது என்றும் நிறைய வேண்டும் என்ற இன்றைய உழவரது கோரிக்கையைக் கவிஞர் தமது ஆர்வமாகவும் வெளியிடுகிறார்.

'நுங்கோ யாரென வினவின் எங்கோ
களமர்க் கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம் வீடவாரா
வராற் கொழுஞ் சூடங் கவுளடாஅ
வைகு தொழின் மடியு மடியா விழுவின்
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகி
கோழியானே கொப்பெருஞ் சோழன்' (புறம்: 282)

'உழவர்கள் நாள்தோறும் விழாக் கொண் டாடுகிறார்கள். நாள்தோறும் ஆமை இறைச்சியும், மீன் கறியும் உண்டு கள் குடிக்கிறார்கள். தினந் தோறும் புது வருவாய் கிடைக்கிறது. ஆடல் பாடல் கலைஞர்கள் பசியறியாதவர்களாக உழவர்கள் மகிழ்விக்கிறார்கள். இந்நாட்டின் தலைநகரான கோழியில் கோப்பெருஞ் சோழன் அரசு வீற்றிருக்கிறான். அவனே எங்கள் அரசன். அறுவடை நாள் ஆண்டின் ஒருநாள் விழாவாகப் போய்விடக் கூடாது. தினந்தோறும் அறுவடை விழாவாக, செல்வச் செழிப்போடு உழவர்கள் வாழ வேண்டும்' என்ற கவிஞரின் கனவை இச்செய்யுள் சித்தரிக்கிறது.

பொங்கல் விழாவிலே பூமியை வாழ்த்தியது போலவே, மகளிர் நீர் தரும் ஆற்றையும் வாழ்த்தி னார்கள். ஆறு பெண்பாலாகக் கருதப்பட்டது. தைந்நீராடல் என்பது பண்டைய வழக்கம். இவ் வழக்கத்தைப் பரிபாடல் வருணிக்கிறது. வையை நதிக்குப் பொங்கலிட்டுப் பூசனை புரிகின்றனர் மதுரை நகர மகளிர்; நாட்டுக்கு வளம்தர வேண்டு மென வையை நதியை வேண்டுகிறார்கள். பின்பு தங்கள் தாய்மாரருகில் நின்று நீராடுகிறார்கள். நீராடும்போது வையையை நோக்கிப் பாடுகிறார்கள்.

'வையை! நினக்கு மடைவாய்த் தன்று
மையாடல் ஆடல் மழபுலவர் மாறு எழுந்து
பொய் ஆடல் ஆடும் புணர்ப்பில் அவர், அவர்
தீ எரிப்பாலும் செறிதவம் முன்பற்றியோ,
தாயருகா நின்று தவத்தைந் நீராடுதல்
நீ உரைத்தி வையை நதி!' (பரிபாடல்-11)

அவர்கள் வையையை வாழ்த்தும்போது தங்கள் வேண்டுகோள்களையும் வையையிடம் சமர்ப்பிக்கிறார்கள்.

'நீ தக்காய், தைந்நீர் நிறம் தெளித்
தாய்' என்மாரும்,
'கழுத்து அமை கை வாங்காக்
காதலர்ப் புல்ல
விழுத்தகை பெறுக! என
வேண்டுதும்' என்மாரும்,
'கிழவர் கிழவியர்' என்னாது
ஏழ் காறும்
மழ ஈன்று மல்லற் கேள்
மன்னுக!' என்மாரும், (பரிபாடல்-11)


சிறந்த கணவனைப் பெறவேண்டுமென தை நீராடும் மகளிரின் வேண்டுகோள் வையையிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, பொங்கல் விழா உழவர்களின் ஆர்வங் களை வெளியிடும் விழாவாகக் கொண்டாடப் பட்டது. அவர்கள் வாழ்க்கை, விழாவன்று மட்டும் வளம் பெற்று விளங்காமல் என்றும் வளம்பெற வேண்டும் என்பதே அவர்கள் ஆர்வம். மந்திர மொழியின் மூலமும், வணக்கத்தின் மூலமும் இயற்கையை வசப்படுத்த அவர்கள் செய்த முயற்சி இன்று வேறு வழியில் நிறைவேறி வருகிறது. மனிதன் விஞ்ஞானத்தின் மூலம் இயற்கையை வென்று வருகிறான். இயற்கையளிக்கும் சக்தியைத் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்தி, உழவர்களை அடிமைப்படுத்தும் சுரண்டல் வர்க்கத்தை எதிர்த்துத் திரளும் உழவர் பெருமக்கள் நாள்தோறும் பொங்கல் விழாக் கொண்டாடும் காலத்தை நோக்கி முன்னேறுகிறார்கள்.

*(நா.வா.வின் 'தமிழர் வரலாறும் பண்பாடும்' நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரை)*



அருணா பப்ளிகேஷன்ஸ்
எங்களது புதிய வெளியீடுகள்
தமிழ்நாட்டுப் பாரம்பரியக் கதைகள்
மதுரை வீரன் நல்லதங்காள் கதைகள்
27 நட்சத்திரக்காரர்களுக்கான அதிர்ஷ்ட தெய்வங்கள் அற்புத மந்திரங்கள்
இந்திய நீதிக் கதைகள்
Mahathma Gandhi
Biography of a Historical Era
Stories of Tenali Raman
Bala
World Famous Mathematicians
Malathy Vaidyanathan
ஸ்ரீ பிரம்ம புராணம்
நவக்கிரக தோஷங்கள் நீக்கும் ஐந்து வார காஞ்சி மகான் வழிபாடு
பாரதியாரின் பகவத் கீதை
மாமனிதர் அப்துல் கலாம் கருத்துரைகள் (பொன்மொழிகள்)
ஆர்.சி. சம்பத்
Moral Stories from Panchatantra
Bala
முட்டாள் மேதாவிக் கதைகள்
சிறுவர்க்கு காந்தி கதைகள்
சம்பத்குமரன்
முழுமையான வாஸ்து சாஸ்திர விளக்கம்
சாதனைகள் சாத்தியமே
தொடர்புக்கு:
அருணா பப்ளிகேஷன்ஸ் ARUNA PUBLICATIONS
12, 1st Street, (Annexe) North Jagannatha Nagar, Villivakkam, Chennai - 600 049. ✆ +91-44-2650 7131.
Cell: 94440 47790 E-mail : arunapublications@yahoo.com Website : www.arunapublications.com



# நியூ செஞ்சுரியின் வெளியீடாக வரவுள்ள வெ.இறையன்புவின் நூல்கள்

1. போர்த் தொழில் பழகு
2. வையத் தலைமை கொள்
3. 10000 மைல் பயணம்
4. திருவிழாக்கள்
5. மருந்து
6. பொறுமை
7. மழை
8. ஆணவம்
9. ஆர்வம்
10. ஆன்மீகம்
11. இரயில் பிரயாணம்
12. விவாதம்
13. இணையற்ற இந்திய இளைஞர்களே

**விரைவில்...**



# தனிமனிதனிலிருந்து சமூக மனிதன்

சி.ஆர்.ரவீந்திரன்

புதிய நூற்றாண்டில் மனிதன் சார்ந்த எல்லா விதமான துறைகளிலும் புதிய அறிவியலும், தொழில் நுட்பமும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மனிதவளம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அறிவியல் தொழில்நுட்ப வளம் வியக்கத் தகுந்த விதத்தில் மேலெழுந்து பரவி வருகிறது. பொருள் உற்பத்தி முறையில் உடல் உழைப்பு முதன்மை இழந்து விட்டதால் மனித உறவுகள் தகர்ந்து சமூகம் என்ற கட்டமைப்புச் சிதறி புதியதோர் வடிவம் பெறுகிறது. அதைப் போலவே உற்பத்தித் திறனும் பகிர்வும் கூடுதலாகி வருகின்றன. உலகச் சந்தைகளுக்குத் தேவையான பொருள்கள் உற்பத்தி செய்து ஈடுகட்டவேண்டிய தேவையும் பெருகி வருகிறது. ஆகவே புதிய உற்பத்தி முறைச் சூழலில்,

மனித வாழ்க்கை குறித்த பாதுகாப்பு தேவையாக இருக்கிறது. இதுவரை மனிதனுக்குப் பாதுகாப்பாக இருந்து வந்த இயற்கை வளம் மீண்டும் புதுப்பிக்க முடியாத அளவில் சிதைத்து அழிக்கப்படுகின்றன. வணிக அடிப்படையிலான உற்பத்தி முறை நாடு களிடையே நெருக்கடிகளை உருவாக்கிப் போட்டி யையும், போர்களையும் தோற்றுவித்து உலக அமைதிக்குக் கேடு விளைவிக்கிறது. இந்த நிலை மையில் மனித வாழ்வின் முக்கியத்துவத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை மனிதனுக்கு வந்துவிட்டது. அறிவியலும், தொழில் நுட்பமும் மனிதனுக்குத் தேவைதான். ஆகவே, அவை மனிதனின் கட்டுப்பாட்டில் இயங்கவேண்டுமே தவிர, அவைகளின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டிய தேவை இல்லை என்பதை நவீன உலகுக்கு உணர்த்த வேண்டியது இன்றைய தேவை.

மனித வரலாறு மாறுபட்ட தொழில் உற்பத்தி முறைகளின் வளர்ச்சியினூடாகத் தொடர்ந்து வாழ்ந்து கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக் கிறது. நிலம் சார்ந்த உற்பத்தி முறைகளிலிருந்து, இயந்திரத் தொழில் சார்ந்த உற்பத்தி முறைக்கு மாறும்போது மனித வாழ்க்கையில் பல வகையான மாற்றங்கள் நிகழ்ந்து தொழில் முதன்மையான முதலாளித்துவ சமூக அமைப்பு தோன்றி வளர் கிறது. அதன் தொடக்க நிலையை, பிரெஞ்சுப் புரட்சியை முதன்மையாக்கி மதிப்பீடுகளை முன் வைக்கலாம். முன்னுரிமை, சமத்துவம், சகோதரத் துவம் போன்ற கோட்பாடுகளை நடைமுறைப் படுத்தும் தேவை வரலாற்றில் நடைமுறைக்கு வருகிறதே. அதன் தொடர்ச்சியான வளர்ச்சியே மார்க்சிய அறிவியலும், சித்தாந்தமும், தத்துவமும். அவை பொதுவுடைமைத் தத்துவமாகவும், நடை முறை வாழ்க்கையாகவும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது.

வரலாற்றுத் தேவையின் ஆக்கரீதியான வெளிப் பாடு மார்க்சியமாக மலர்ந்தது. தொடர்ந்து மணம் வீசுகிறது. இயற்கைக்கும், மனிதனுக்கும் இடை யிலான முரண்பாட்டின் இயங்குதலே வாழ்க்கை யாக இருந்த ஒரு தத்துவம் பின்னுக்குத் தள்ளப் பட்டு மார்க்சிய தத்துவம் என்ற புதிய தத்துவம் வடிவம் பெற்று நடைமுறைக்கு வந்து தொடர்ந்து வரலாற்றில் புதிய பரிமாணங்களுடன் வளர்ந்து வருகிறது. இதை ஆழமாகப் புரிந்து கொள்ள மார்க்சிய தத்துவம் நமக்குப் பெருமளவில் உதவு கிறது. அதன் முக்கியத்துவத்தை மீண்டும் புதுப் பிக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையில் வரலாற்றை மீள்பார்வைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

அதை முன் நிறுத்தும் வகையில் தற்போது புதிய பதிப்பாக வெளிவந்துள்ளது. 'மார்க்ஸ் பிறந்தார்.' என்ற கார்ல்மார்க்ஸின் வாழ்க்கை வரலாறு. ஆய்வுக் கண்ணோட்டத்தில் இந்த வரலாற்றை ஹென்றி வோல்கவ் வடிவமைத் துள்ளார். அதைத் தெளிவான முறையில் தமிழில் நா. தர்மராஜன் மொழி பெயர்த்துள்ளார்.

"இது, மார்க்சியத்திற்கு ஒரு வகையான 'அறிமுகம்' என்று கூறலாம். வேறு எத்தத்துவத்தைக் காட்டிலும் அதிகமாக மனித குலத்தின் விதியை நிர்ணயித்திருக்கின்ற இந்த மாபெரும் தத்துவத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்குகின்றது.

"இளைஞரான மார்க்சின் தேடல்கள், சிந்தனைகள், உணர்ச்சிகள், குமுறல்கள் என்ற உலகத்திற்குள் அவருடைய நெருப்புப் போன்ற கருத்துக்கள் பரிணாம வளர்ச்சியடைந்த படைப்புத் தன்மை கொண்ட சோதனைச் சாலைக்குள் தன்னோடு வாசகரையும் அழைத்துச் செல்லு வதற்கு இந்த உலகத்துக்குள் தன்னை அமிழ்த்திக் கொள்ளும்படி வாசகரை ஊக்குவிப்பதற்கு இப் புத்தகத்தின் ஆசிரியர் முயற்சி செய்திருக்கிறார்."

இது, மிகவும் சரியான ஒரு மதிப்பீடு!

மார்க்சின் தனித்துவத்தையும், மனித வரலாற்றில் அவரது அரிய முயற்சியின் வாயிலாக அளித்த அவரது பங்களிப்பையும் நிறுவுவது இதனுடைய தனிச்சிறப்பு.

மனித வரலாற்றில் தொடர்ந்து வளர்ந்து வந்த ஐரோப்பிய மெய்யியலின் அறிஞரான ஹெகல் மெய்யியல் உட்பட இயற்கை அறிவியல், வரலாற்று அறிவியல் ஆகியவற்றின் அனைத்துத் துறை களையும் இயங்கியல் தர்க்கவியலைக் கொண்டு ஆராய்ந்தவர். மிகவும் ஆழமான இயங்கியல் உணர்வையும், அறிவியல் வளத்தையும் உள்ளடக்கி செழிப்பாக இயங்கியலை வளர்த்தெடுத்தாலும் அவருடைய கொள்கை கருத்துமுதல்வாதமாகவே நீடித்தது.

"இந்நிலையில், இவ்வுலகம் ஏன் இப்படி இருக்கிறது? இதை மாற்ற இயலாதா? என்று சிந்தித்துக் கொண்டிருந்த மார்க்ஸ் பொருளா தாரம், அரசியல், கருத்தியல் போன்ற தளங்களைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்து ஹெகலின் நேர்த்தி யான இயங்கியலைப் பொருள் முதல்வாதத்துடன் இரண்டற இணைத்தார்."

இதில், மார்க்சின் ஆளுமையின் வளர்ச்சியும், மார்க்சியத்தின் வளர்ச்சியும் ஒரே நிகழ்வுப் போக்காக ஆராயப்படுகிறது.

தன்னுடைய முன்னுரையில் இந்த நூலுக்கான தேவையையும், நோக்கத்தையும் நூலாசிரியர் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார்.

"இளைஞரான மார்க்சின் ஆன்மிக வளர்ச்சியைப் பற்றி நுணுக்கமான அல்லது முழுமையான சித்திரத்தை வரைவதற்கு நான் முயற்சிக்கவில்லை. அவருடைய ஆளுமையும், அவருடைய உலகக் கண்ணோட்டமும் வளர்ச்சியடைந்த முக்கியமான திசை வழிகளைக் குறிப்பிடுவது இந்தச் சிறுநூலுக்குப் போதுமானதாகும். மார்க்சிய நூல்களில் உள்ள கருத்துக்களை விளக்குவதும் விமர்சிப்பதும் என்னுடைய நோக்கமல்ல; அவற்றில் வாசகரின் அக்கறையைத் தூண்டித் தானாகவே சிந்திக்கும்படி தேடும்படி வாசகரை ஊக்குவிப்பதே என்னுடைய நோக்கம்."

தொடர்ந்து அவர் இன்னொரு கருத்தையும் விளக்கித் தெளிவுபடுத்துகிறார். "மார்க்சியத்தின் வளர்ச்சியில் தத்துவஞான மற்றும் சமூக பொருளாதாரக் கருத்துக்களை மட்டுமின்றி, கலை அழகியல் கருத்துக்களும் முக்கியமான பாத்திரத்தை வகித்தன என்பது மெய்யாகும். சுதந்திரத்தை நேசிக்கின்ற கலை உலகமே இளைஞரான மார்க்சின் கருத்துக்கள் மலர்ந்த முதல் கல்விக் கூடமாகும். கலை அவரை யதார்த்தத்தின் பால் விமர்சன ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறு செய்தது; தன்னிறைவுடைய அற்ப வாதத்தைக் கண்டனம் செய்யுமாறு பணித்தது. மார்க்சின் கலையுணர்வின் வளர்ச்சி அவருடைய அரசியல் உணர்வின் வளர்ச்சியுடன் இணைந்தது. அற்பவாதத்தைப் பற்றிய அவருடைய விமர்சனம் அதைப் பேணி வளர்த்த சமூகத்தின் அடிப்படைகளைப் பற்றிய விமர்சனமாயிற்று."

இதையே, லெனின் இன்னொரு வகையில் தெளிவுபடுத்துகிறார். "மார்க்ஸ் மனித சிந்தனை தோற்றுவித்திருந்தவை யாவற்றையும் மறு பரிசீலனை செய்தார். விமர்சனத்துக்கு உட்படுத்தினார். தொழிலாளி வர்க்கத்தைக் கொண்டு சரிபார்த்தார். முதலாளித்துவ வரம்புகளால் கட்டுப்படுத்தப்பட்டோரில் அல்லது முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் கட்டுண்டோரால் வந்தடைய முடியாத முடிவுகளை இவ்வழியில் வந்தடைந்து அவர் வரையறுத்துக் கொடுத்தார்."

இவற்றைத் தகுந்த தகவுகளோடு அறிவியல் கண்ணோட்டத்தில் நிலவுவதே 'மார்க்ஸ் பிறந்தார்' என்ற மாறுபட்ட வரலாற்றின் உள்ளடக்கமாக இருக்கிறது.

"ஜெர்மன் அற்பவாதம் பிரபலமானது; ஏனென்றால் ஹேய்னெயின் புண்படுத்துகின்ற கிண்டலும், மார்க்ஸ் மற்றும் எங்கல்சின் தப்ப முடியாத ஏளனமும் அதன் தோலை உரித்துக் காட்டியிருக்கின்றன."

அற்பவாதம் எந்த விதத்திலும் ஒரு தேசியக் கண்டுபிடிப்பு அல்ல. அது குட்டி முதலாளி வர்க்க சுயதிருப்தி. போலியான மத ஆசாரம். இதயத்தில் கைக்கூலித் தனத்தை வைத்திருக்கின்ற முன்னாளைய கைக்கூலியின் அடிமைப்புத்தி ஆகியவற்றின் இயற்கையான விளைவு, தனிமனிதவாத ஆளுமையை இவ்வாறு அடையாளப்படுத்துகிறது மார்க்சியம்.

மார்க்ஸ் அற்பவாதத்தை மேலும் தெளிவுபடுத்துகிறார். "ஒரு நபர் தனக்காக மட்டுமே பாடுபட்டால், ஒருவேளை பிரபலமான அறிவாளியாகலாம்; மாபெரும் ஞானியாகலாம்; மிகச் சிறந்த கவிஞராகலாம். ஆனால் அவர் குறையில்லாத, உண்மையிலேயே மாபெரும் மனிதனாக முடியாது"

இது தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் மார்க்ஸ் மற்றும் அவருடைய தந்தையான ஹென்ரிக் மார்க்ஸுக்கும் இடையில் நடைபெற்ற கடிதத் தொடர்புகளும், கருத்துப் பரிமாற்றங்களும் இதில் பொருத்தமாக எடுத்தாளப்பட்டு தெளிவுபடுத்தப்படுகின்றன. அவற்றிலிருந்து மார்க்ஸ் உருவாக அவருடைய தந்தை எந்தெந்த வகையில் ஈடுபாடு காட்டி அவரை ஊக்குவித்திருக்கிறார் என்பதையும் இதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

தன்னுடைய வாழ்க்கைப் பணியான மூலதனத்தை எழுதுவதற்காகத் தன்னுடைய உடல் நலத்தை, மகிழ்ச்சியை குடும்பத்தைத் தான் தியாகம் செய்திருப்பதாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார். அவர் உருவாவதற்கு இன்னொருவரும் தன்னையே தியாகம் செய்திருக்கிறார் என்பதையும் வரலாற்றாசிரியர் உணர்வெழுச்சியுடன் அடையாளப்படுத்துகிறார்: "அவருடைய ஓய்வில்லாத வாழ்க்கையின் எல்லாச் சுமைகளையும் - அலைச்சல், சிறை, நாட்டிலிருந்து வெளியேற்றப்படுதல், வறுமை, காட்டுமிராண்டித்தனமான ஒடுக்கு முறை - ஜென்னி தன்னுடைய கணவருடன் பகிர்ந்து கொண்டாள். மூன்று குழந்தைகள் இறந்தன. ஆனால் அவள் மார்க்ஸின் மிக நெருங்கிய சகாவாக, ஆலோசகராக அவருடைய நற்தெய்வமாக இருந்தாள். ருஷ்யாவிலிருந்து அமெரிக்கா வரையிலும் புதிய போராடுகின்ற உலகத்தின் சின்னமாக மார்க்ஸ் ஆகியிருப்பதை அவள் உயிரோடிருந்து பார்த்தாள். இது அவள் இழந்த அனைத்துக்கும் ஈடாக இருந்தது."

மார்க்ஸ் தன்னுடைய கற்பனை உலகங்களைப் படைத்து முடிப்பதற்குள்ளாகவே உடைந்து விடுகிறார். புதிய உலகங்களைத் தேடிப் புறப்பட்டு விடுகிறார். அவர் எழுதிய 'தேடல்' என்ற கவிதையை ஜென்னிக்கு அர்ப்பணித்தார். அதில் அவரே பின்வருமாறு எழுதுகிறார்:

என்னைக் கட்டிய தலைகளை நொறுக்கி எழுந்தேன்.

**"எங்கே செல்கிறாய்?"**
**"எனக்கொரு உலகம் தேடி"**
**"இங்கே அகன்ற பசும்புல் வெளிகளும்,**
**கீழே - கடல்களும்**
**மேலே - விண்மீன்களும் இல்லையா?"**

**"உலகம் என்னிடமிருந்து தோன்ற வேண்டும்**
**என் இதயத்தில் அது வேரூன்ற வேண்டும்**
**என் இரத்தத்தில் அது ஊற்றெடுக்க வேண்டும்**
**என் ஆன்மாவின் மூச்சில் அது வசிக்க வேண்டும்**
**நான் நெடுந்தூரம் அலைந்து சென்றேன்**
**திரும்பினேன்-கீழும் மேலும் உலகங்கள்**
**விண்மீன்களும் கதிரவனும் துள்ளின**
**மின்னல் வெட்டியது-நான் மடிந்தேன்."**

"மார்க்ஸ் மிக அதிகமான அன்பும், நட்புணர்ச்சியும் கொண்டவர். அதனால்தான் அவர் தவறு செய்தவர்களை அதிகமாக வெறுத்தார். அவருடைய வாழ்க்கையில் இரு நபர்கள் மிகவும் அசாதாரணமான பாத்திரத்தை வகித்தனர். ஜென்னியின் காதலும், எங்கல்சின் நட்பும் வாழ்க்கை மார்க்சுக்கு அளித்த மிகவும் சிறந்த கொடைகளாகும்.

"ஹெகல் எழுதிய தர்க்கவியல் முழுவதையும் நன்குப் படித்துப் புரிந்து கொள்ளாமல் மார்க்ஸ் எழுதிய 'மூலதனத்தை' புரிந்துகொள்ள முடியாது என்று லெனின் எழுதினார். அதைப் போலவே, ஷேல்லிங், ஃபிஹ்டே, கான்ட், லேய்ப்னித்ஸ், ஸ்பினோஸா, அரிஸ்டாடில், பிளாட்டோ, சாக்ரடீஸ், டெமாக்ரீடஸ், ஹெரக்லீடஸ் ஆகியோருடைய தத்துவ குணங் களைப் புரிந்து கொள்ளாமல் ஹெகலின் தர்க்க வியலைப் புரிந்து கொள்ள முடியாது."

"அந்நியமாதலை ஒழிப்பது பிரதானமாக தனிச்சொத்துடைமையை ஒழிப்பதைப் பொறுத்திருக்கிறது என்ற உண்மையிலிருந்து மார்க்ஸ் தெளிவாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும் முன்னேறுகிறார். தனிச்சொத்துடைமை "அந்நியப் படுத்தப்பட்ட உழைப்பின் உற்பத்தி முடிவு, அவசியமான விளைவு" பொருளாதார அந்நியமாதல்.

"அந்நியமாதலின் வெவ்வேறு வடிவங்களின் (அரசியல், மத, தத்துவஞான, அறவியல், இதரவை) சாயல்களும், அம்சங்களும் பொருளாதார அந்நியமாதலில் குவிகின்றன. மொத்த மனித அடிமைத்தனமும் உற்பத்தி முறையில் தொழிலாளியின் உறவின் அடிமைத்தனத்தில் வெளிப்படுகிறது. "...அடிமைத்தனத்தின் எல்லா உறவுகளும் இந்த உறவின் உருத்திரிபுகளும், விளைவுகளுமே." இங்கே மார்க்ஸ் அடிப்படையில் சமூக உற்பத்தி உறவுகளின் தலைமையான பாத்திரத்தைப் பற்றிய கருத்தை வகுத்துரைக்கிறார்.

"ஹெகலிடம் எல்லா அந்நியமாதலுமே கருத்தின் அந்நியமாதலாக இருந்தது. அகப்பொருளின் "உணர்வில்" இந்த ரகத்தைச் சேர்ந்த ஊடுருவுதளம் சாத்தியமாக இருந்தது. ஆனால், அவர் உலகத்துடன் தன்னுடைய உறவுகளின் அடிமைத் தன்மையை உணர்ந்து கொண்டிருப்





**மார்க்ஸ் பிறந்தார்**
ஹென்றி வோல்கவ்
தமிழில் : நா. தர்மராஜன்
***வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,***
***41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.,***
***அம்பத்தூர், சென்னை - 600 098***
***தொடர்புக்கு : 044 - 26251968***
***விலை: ₹ 175/-***

பதால் அவருடைய அந்நியமாதல் மறையவில்லை. அது, அதிகரிக்கிறது.

"ஹெகலியத் தத்துவகுணத்தின் கருத்துமுதல் வாதமும் வரையறைகளும் எப்படி இருந்தாலும் உலகத்தைப் பற்றிய விளக்கத்தில் அது முன்னே எடுத்து வைக்கப்பட்ட மாபெரும் காலடியாக இருந்தது."

"ஹெகல் தன்னுடைய தத்துவ ஞானத்தில் உலகத்தை தலைகீழாகத் திருப்பி வைத்திருக்கிறார். அது, அந்த ஆபத்தான நிலைமையிலேயே நின்று கொண்டிருந்தது. முன்னே போகமுடியவில்லை இப்படி ஆடிக்கொண்டிருக்கும் அடிப்படையின் மீது இயக்கவியல் முறை வளர்ச்சியடைய முடியவில்லை."

"தத்துவ ஞானம் தனிமுதலான கருத்துமுதல் வாதம் என்ற ஹெகலிய அமைப்பை முன்வைத்த பொழுது அது செய்ய வேண்டிய அனைத்தையும் ஏற்கனவே நிறைவேற்றிவிட்டது. அது அறியக் கூடிய அனைத்தையும் ஏற்கனவே அறிந்துவிட்டது. அது சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லி விட்டது. தனிமுதலான உண்மை அறியப்பட்டு விட்டது."

ஹெகலிய வாதத்திலிருந்து மார்க்சியத்திற்கு முன்னேறிய எங்கல்ஸ் பின்வருமாறு எழுதியது முற்றிலும் நியாயமே. "ஹெகலின் தர்க்கவியலிலிருந்து இந்தத் துறையில் ஹெகலின் உண்மையான கண்டுபிடிப்புகளைக் கொண்ட கருத்தைப் பிரித்தெடுப்பதற்கும், இயக்கவியல் முறையின் மீதுள்ள கருத்துமுதல் வாதப் போர்வைகளை நீக்கி, அதன் எளிமையான வடிவமே கருத்தின் பரிணாமத்திற்கு ஒரே சரியான முறை என்பதை நிறுவுவதற்கும் மார்க்ஸ் ஒருவர் மட்டுமே இருந்தார்; இன்னும் அவர் ஒருவர்தான் இருக்கிறார். அரசியல், பொருளாதாரத்தைப் பற்றிய மார்க்சின் விமர்சனத்துக்கு ஆதாரமான இந்த முறையை உருவாக்கியது அடிப்படையான பொருள் முதல்வாதக் கருதுகோளுக்கு எந்த விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்ததல்ல என்று நாங்கள் கருதுகிறோம்."

இவ்வாறு கார்ல்மார்க்ஸ் தனது முன்னோடியான ஹெகலின் கருத்துக்களை ஆய்ந்தறிந்து உலகளாவிய நன்மைகள் அடங்கிய ஒரு புதிய அறிவியல் கண்ணோட்டத்தை மனித குலத்திற்கு இது அடையாளம் காட்டுகிறது.


ஜென்னி மார்க்ஸ் மரணமடைந்து ஒரு வருடத்திற்குப் பிறகு 1883 மார்ச் 14ந் தேதியன்று கார்ல் மார்க்ஸ் இறந்த பொழுது, "மனித குலத்தில் ஒரு 'தலை' குறைந்துவிட்டது அது, நம் காலத்திலேயே மாபெரும் தலை" என்று எங்கல்ஸ் எழுதினார்.

காலப்போக்கில் இதுவே சமூக அறிவியலாக மாற்றம் கொண்டு உலகளாவிய அளவில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மனிதனுமே தன்னிலிருந்து, தன்னுடைய வாழ்க்கைச் சூழலிலிருந்து தன்னுடைய அனுபவம் சார்ந்த புற உலகைப் புரிந்து கொண்டு இயல்பாக வாழ்க்கையை மதிப்பீடு செய்கிறான். அவனுடைய மதிப்பீடுகள் மாறக் கூடியவையாக இருந்தாலும், ஏற்கனவே நிறுவப்பட்ட சமுதாயக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இயங்க வேண்டியிருக்கிறது. அவ்வப்போது அவன் வந்தடையும் தளத்தில் நின்றபடியே அவன் தன்னுடைய வாழ்க்கையைப் புரிந்து கொண்டு உணர்வு ரீதியாக அதனை மதிப்பீடு செய்கிறான். அவனுடைய அனுபவங்கள் சார்ந்த புரிதல்களும், உணர்தல்களுமே அவனளவில் வாழ்க்கை பற்றிய மதிப்பீடாகிறது. இந்த அடிப்படைகளை ஆழ்ந்து ஆய்வு செய்து அக, புற இயக்கங்களை உணர்வது வாயிலாக உலகளாவிய வாழ்க்கையை மதிப்பீடு செய்வதும் வரலாற்றில் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அந்த வகையில் முற்றிலும் மாறுபட்ட, நடைமுறை சார்ந்த அறிவியல் கண்ணோட்டமுடைய மார்க்சியத் தத்துவத்தின் எதிர்மறையான தோற்றத்தையும் வளர்ச்சியையும் வாசிப்புக்கு உகந்த வகையில் வடிவமைத்திருக்கிறார் வரலாற்று ஆசிரியர்.

கார்ல் மார்க்ஸ் தன்னிலிருந்து வாழ்க்கையைக் கற்கத் தொடங்கி தனிமனிதன் என்ற நிலையிலிருந்து தன்னுடைய பல வகையான அனுபவங்களின் ஊடாக வளர்ந்து தன்னை சமூக மனிதனாக இனம் காணும் வாழ்க்கையை அறிவியல் கண்ணோட்டத்தில் வாசிப்புக்கு எளிமையாக்குகிறார். ஹெகலிய தத்துவத்திலிருந்து மீண்டு, சமுதாயக் கண்ணோட்டம் மிகுந்த அறிவியல் கண்ணோட்டத்தை உலகுக்கு வழங்கியிருக்கிறார்.

ஒரு மனிதன் தன்னுடைய உயிர்வாழ்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் அவனே உற்பத்தி செய்து கொள்ள முடியாது. ஒவ்வொரு தனி மனிதனும் தனக்குத் தேவையான எல்லாவற்றையும் தன்னுடைய ஏதேனும் ஒரு வகையான உழைப்பிலிருந்தே தனக்குத் தேவையானவைகளைப் பெற்று வாழ்கிறான். சமூக மனிதன் என்ற உணர்வில் இந்த 'மார்க்ஸ் பிறந்தார்' நூலை எவரும் வாசிக்கலாம். ●

## மார்க்ஸ் - எங்கெல்ஸ் 200வது பிறந்தநாள்களையும் சோவியத் புரட்சியின் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடும் முகமாக



முன் வெளியீட்டுத் திட்டம்

# மார்க்ஸ்-எங்கெல்ஸ்

## தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்

## 20 தொகுதிகளாக...

தமிழ் மார்க்சிய மெய்யியலாளர் **ந.முத்துமோகன்** அவர்களின் பதிப்பாசிரிய மேற்பார்வையில்

- **ரா.கிருஷ்ணையா, ஆர்.கே. கண்ணன், எஸ்.வி.ராஜதுரை** முதலான தலைசிறந்த மார்க்சிய அறிஞர்களின் மொழிபெயர்ப்பில்
- மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் (12 தொகுதிகள்), அரசியல் பொருளாதார விமர்சனத்துக்குப் பங்களிப்பு, டூரிங்குக்கு மறுப்பு, இயற்கையின் இயக்கவியல் முதலான
- தமிழில் இதுவரை வெளிவந்துள்ள மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள் ஆகிய அனைத்தையும் காலவரிசைப்படுத்தி
- சோவியத் அறிஞர்கள் குழு எழுதிய ஆசான்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சேர்த்து
- மொழிபெயர்ப்புகளை மேம்படுத்தி, கலைச்சொற்களைச் சீர்மை செய்து.
- ஒவ்வொரு தொகுதிக்கும் ந.முத்துமோகனின் விரிவான அறிமுகவுரையுடன் வெளிவருகிறது.

**1/8 டெமி அளவில் சுமார் 7600 பக்கங்களுக்குமேல் அழகிய வடிவமைப்பில், தரமான தாளில்**

**விலை ₹ ~~5000/-~~ முன்வெளியீட்டுத் திட்டத்தில் ₹ 2500/- மட்டுமே**

**வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க**

**ஜனவரி 31, 2018 வரை மட்டுமே முன்பதிவு செய்யப்படும்**

NCBH

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# எதிர் வெளியீடு

## சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்





## இஸ்மத் சுக்தாய் கதைகள்

இஸ்மத் சுக்தாய்

தமிழில் : ஜி. விஜயபத்மா

ரூ : 500




## வார்த்தைகளில் ஒரு வாழ்க்கை

இஸ்மத் சுக்தாய்

தமிழில் : சசிகலா பாபு

ரூ : 400

எமது வெளியீடுகள் தமிழகத்தில் அனைத்து முன்னணி புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

எதிர் வெளியீடு

**எதிர் வெளியீடு**

96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.

04259 - 226012 | 99425 11302 | **Email : ethirveliyedu@gmail.com**


இணையம் வழி வாங்க : **www.ethirveliyedu.in**

## சாகித்திய அகாதெமி


443, குணா வளாகம், 2ம் தளம் அண்ணா சாலை
தேனாம்பேட்டை சென்னை - 600 018
போன்: 044 - 2435 4815/2431 1741





விநோதினி
₹ 150/-





வண்டல்: தஞ்சை
வட்டார எழுத்துக்கள்
₹ 125/-




தனிநாயக அடிகளாரின்
தமிழியல் பங்களிப்பு
₹ 200/-





தெலுங்கு நாவல்கள்,
சிறுகதைகள்
₹ 135/-





சிங்காரவேலர்
₹ 50/-




பன்முக நோக்கில்
அயோத்திதாசப் பண்டிதர்
₹ 180/-




பேராசிரியர் ந. சுப்பு
ரெட்டியாரின் பன்முகம்
₹ 120/-




ராஜம் கிருஷ்ணன்
₹ 50/-





கடித இலக்கியம்
₹ 200/-




காட்டில் உரிமை
₹ 270/-




திரௌபதியின் கதை
₹ 275/-




ஜெயகாந்தன்
₹ 50/-

e-mail: chennaioffice@sahitya-akademi.gov.in



# உலகிற் சிறந்தது ஊர் சுற்றுவதே

## குரு மணிகண்டன்

நிலப்படங்களும் நிலப்பட வரைவியலும் இல்லாத அக்காலத்தில் பயணிகள் பாதை கண்டறிவதும் அதன் வழி செல்வதுமான பல்வேறு இடையூறுகளுக்கிடையே அவர்கள் சென்று வந்து, அந்த அறிவை தமக்குப் பின்பு வருவோர் பயன்பெறுமாறு பயண இலக்கியம் படைத்தனர். இந்திய பயண இலக்கியத்தின் தந்தை என அறியப்படுபவர் இராகுல்ஜி எனும் இராகுல் சாங்கிருத்தியாயன். இராகுல்ஜி 1893 ஆம் ஆண்டு கிழக்கு உத்திரப் பிரதேசத்தில் ஆஜம்கட் மாவட்டம் , பண்டகா என்ற கிராமத்தில் பிறந்தார். தன் வாழ்வில் இந்தியோடு, பாலி, சமஸ்கிருதம், அரபி, உருது, பாரசீகம், கன்னடம், சிங்களம், ப்ரெஞ்சு, ரஷ்யன் போன்ற 33 மொழிகளையும் தாமாகவே கற்று பன்மொழிப் புலவராய் விளங்கினார். இவர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றதோடு மட்டுமன்றி நேபாளம், திபெத், இலங்கை, ஈரான், சீனம், முன்னாள் சோவியத் உள்ளிட்ட உலக நாடுகளுக்கும் சென்றிருக் கிறார். திபெத்திற்கு இவர் புத்த துறவியாகச் சென்று அங்கிருந்து பல மதிப்புள்ள புத்தகங்களையும் ஓவியங் களையும் இந்தியாவிற்குக் கொணர்ந்தார். இவை முன்னர் இந்தியாவின் நாளந்தா நூலகத்தில் இருந்தவை ஆகும். 1963 ஏப்ரல் 14 அன்று தனது 70வது வயதில் மறைந்த ராகுல்ஜி எனும் ராகுல் சாங்கிருத்தியாயன் இன்றளவும் அவரது எண்ணற்ற எழுத்துக்களுக்காக இன்றுவரை போற்றப்படுகிறார்.

இராகுல்ஜி பல்வேறு துறைகளில் 146 புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய நூல்களில் அனைவரும் அறிந்தது வால்கா முதல் கங்கை வரை, பொதுவுடமை தான் என்ன?, சிந்து முதல் கங்கை வரை போன்ற புகழ்பெற்ற நூல்கள். இவற்றோடு சமீபத்தில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸால் மறுபதிப்புக் கண்டிருக்கும் சில நூல்களும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டவை : இந்து தத்துவ இயல், இஸ்லாமிய தத்துவ இயல், ஐரோப்பிய தத்துவ இயல், விஞ்ஞான லோகாயத வாதம் மற்றும் ஊர்சுற்றிப் புராணம். இவை யாவையும் தமிழில் மொழி பெயர்த்திருப்பவர் திரு.ஏ.ஜி. எத்திராஜுலு.

தன் வாழ்நாளில் பெரும்பகுதியைப் பயணங்களில் கழித்ததைப் பெருமையாகக் கருதிய இராகுல்ஜி, புதிதாகப் பயணம் செய்பவர்களுக்காக மிகச் சிறந்த வழி காட்டும் நூலாகப் படைத்ததே ஊர்சுற்றிப் புராணம். தன் பயண அனுபவங்களால் எதிர்கொண்ட சவால் களையும், ஆச்சரியங்களையும், கண்டடைந்த சாதனை களையும் மிகுந்த ரசனையோடு இந்நூலில் எழுதி யிருக்கிறார் இராகுல்ஜி. தலைசிறந்த பயணிகளான மெகஸ்தனீஸ், பாகியாண், யுவான் சுவாங் போன் றோரின் பயண அனுபவங்களும் சிறந்த பயண இலக்கியங்கள் எவ்வாறு படைக்கப்பட்டன என்பன போன்ற தகவல்களும் நூல் முழுவதும் விரவியுள்ளன.

வாசகர்களின் மனதில் ஊர்சுற்றும் எண்ணத்தை வலுப்படுத்தவே இந்நூலை எழுதியதாகவும் ஊர் சுற்றிகளுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை முடிந்தவரைத் தந்திருப்பதாகவும் இராகுல்ஜி கூறுகிறார். பதினாறு தலைப்புகளில் ஊர்சுற்றிப் புராணம் பயணப்படுகிறது. நாமும் சேர்ந்து ஊர்சுற்றலாமா?


1. ஊர்சுற்றும் அவா : உலகத்திலுள்ள தலைசிறந்த பொருள் "ஊர்சுற்றுவது" தான் என்கிறார் இராகுல்ஜி. ஊர்சுற்றுவதை விட தனி மனிதனுக்கும், சமுதாயத் திற்கும் நன்மை தரும் செயல் வேறொன்றுமில்லை எனவும் உறுதியாகக் கூறுகிறார். இயற்கையான புராதன மனிதன் வானத்துப் பறவைகளைப் போல் ஊர் சுற்றியாகத் தான் இருந்திருக்கிறான். சார்லஸ் டார்வின் ஒரு சிறந்த ஊர்சுற்றியாக இல்லாதிருந்தால் உயிர்களின் பரிணாமவளர்ச்சி பற்றிய மகத்தானக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருக்க முடியுமா? என வினவுகிறார். மேற்கத்திய நாடுகளில் விஞ்ஞான யுகத்தைத் துவக்கிய வெடிமருந்து, பீரங்கி, கண்ணாடி, அச்சகம், திசைகாட்டி, மூக்குக் கண்ணாடி போன்ற பொருட்களைக் கொண்டு சேர்த்த வர்கள் மங்கோலிய ஊர்சுற்றிகளே! என்கிறார் இராகுல்ஜி. புத்தர், இயேசு, ஆதிசங்கரர் போன்ற மதத் தலைவர்கள் அநேகர் ஊர்சுற்றிகளே!. குடில், ஆசிரமம் என்று என்று கட்டிக் கொண்டு ஓரிடத்திலேயே தங்கிவிடும் மேதாவிகளை "செக்குமாடுகள்" என்று சாடுகிறார். அஞ்சாமை உள்ளவன் தான் ஊர்சுற்றி விரதம் கொள்ளமுடியும். கவலையில்லா வாழ்வை நாடிவரும் எதிர்கால ஊர்சுற்றிகளே, உங்களை வரவேற்க உலகம் தன் இருகைகளையும் விரித்து நிற்கிறது. வாருங்கள் என வரவேற்கிறார் இராகுல்ஜி.

2. தடைகளைத் தகர்த்தெறி : உலகத்தைப் புரிந்து கொண்ட எந்த வாலிபனோ யுவதியோ தடைகளைத் தகர்தெறிந்து வெளிவந்தால் மட்டுமே சிறந்த ஊர் சுற்றியாக மாறமுடியும். வெளிஉலகத் தடைகளை விட உள்ளத்தடைகளே அதிகம். பிறந்த மண், தாய், தந்தை, மனைவி, சுற்றம், நண்பர்கள் என அன்புத் தளைகளும் பொறுப்புகளும் இருந்தாலும் அவற்றையெல்லாம் கடந்தது "ஊர்சுற்றிப் பாதை" என உணர வேண்டும் என்கிறார் இராகுல்ஜி. பறவைகள் தம் குஞ்சுகளுக்கு இறக்கைகள் முளைக்கும் வரையில் மட்டுமே அவற்றின் பொறுப்பை வகிக்கின்றன. அதன் பிறகு பறவைக் குஞ்சுகள் பரந்த உலகில் சுதந்திரமாகப் பறக்கத் தொடங்கிவிடுகின்றன. ஆனால் படித்த பெற்றோர்கள் தமது வயது வந்த பிள்ளைகளும் தங்கள் அருகிலேயே வாழ்நாள் கைதிகளாக விழுந்து கிடக்கவே விரும்பு கிறார்கள். மனைவியை விட்டுவிட்டு ஊர்சுற்றப் போய்விடுவதால் நாட்டுக்கு நன்மைதான் பயக்குமே தவிர, கேடு வந்துவிடாது!!! என்கிறார். பயணம் பற்றிய பல அச்சங்கள் நம்மிடையே இருக்கின்றன. அந்த மன பலவீனத்தைத் துறந்துவிட்டால் உலகத்தையே வெற்றி கொள்ளலாம். சல்லிக்காசில்லாமல் இந்த உலகத்தையே சுற்றிவரலாம். அதற்கு வெளியேறும் தைரியம் தான் வேண்டும் என்கிறார்.

3. கல்வியும் வயதும் : ஊர்சுற்றுதல் என்பது ஒரு மரியாதைக்குரிய பதவியாகும். அதை அடைய சில வழிமுறைகள் தேவைப்படுகின்றன. உலகத்திடமிருந்து பெறுவதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாக உலகிற்குத் தருபவனே ஒரு முதல்தர ஊர்சுற்றியாக ஆக முடியும் என்கிறார் இராகுல்ஜி. தனது ஒன்பதாவது வயதிலேயே தன் சித்தப்பாவின் கைப்பிடித்து காசியில் கங்கை நதிக்குச் சென்றதை அவமானமாகக் கருதி, இரண்டு நாட்கள் கழித்து காசியின் தெருக்களைத் தனியாகச் சுற்றித் திரிந்தது அவருள் உறங்கிக் கிடந்த ஊர்சுற்றும் எண்ணமே என்கிறார். பதினாலாவது வயதில் தனது முதலாவது நீண்ட பயணத்தைத் தொடங்கியதாகவும், பதினாறு வயதில் தான் தனது முறையான ஊர்சுற்றும் விரதத்தைத் தொடங்கியதாகவும் கூறுகிறார். மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் ரக ஊர் சுற்றியாக முன் தயாரிப்பின்றி எப்போது வேண்டுமானாலும் வீட்டை விட்டு வெளியேறிவிடலாம். ஆனால் முதல், இரண்டாம் தர ஊர்சுற்றியாக வேண்டுமெனில் முழுத் தயாரிப்புடன் மட்டுமே ஊர்சுற்றப் புறப்பட வேண்டும். வீட்டை விட்டு வெளியேறக் குறைந்த வயது 16 -18 வருடங்கள்;

அதிகபட்சம் *23 - 24* வருடங்கள். குறைந்தபட்ச கல்வித் தகுதி *10* ஆம் வகுப்பு மற்றும் இலக்கியம், பூகோளம், வரலாறு, கணிதம் ஆகியவற்றில் சாதாரண அறிவாவது இருக்கவேண்டும் என்று கூறுகிறார் இராகுல்ஜி. அத்தோடு தற்கால இந்தியப் பயணிகளின் பயண வரலாறுகளைப் படித்திருக்க வேண்டும். பின்னர் அயல்நாட்டுப் பயணிகளின் பயண வரலாறுகளை கற்க வேண்டும். சில வேற்று மொழிகளைக் கற்றிருப்பது கூடுதல் சிறப்பு. அத்தோடு உடலை உறுதியாக வைத்திருக்க வேண்டும். ஆரோக்கியமான உடலினால் உடலுழைப்பைப் பழகிக் கொள்வது ஊர்சுற்றிக்கு மிகவும் பயனளிப்பதாகும்.

*4.* தன்னிறைவு : ஊர் சுற்றும் எண்ணம் ஒரு நாட்டிற்கோ, இனத்திற்கோ, வர்க்கத்திற்கோ சொந்த மானதல்ல. ஊர் சுற்றும் அறம் எந்த விதமான ஜாதி, மத, நிற வேற்றுமைகளையும் பாராட்டாது. உலகத்தில் எவரையுமே, தன்னைவிட உயர்ந்தவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் எண்ணாத மனோநிலையை ஊர்சுற்றி பெற்றிருக்க வேண்டும் என்கிறார் இராகுல்ஜி. கல்வியும், பண்பாடும், தன்மானமும் ஒரு ஊர்சுற்றிக்கு இருக்க வேண்டிய முக்கியமான குணங்களாகும்.


**ஊர் சுற்றிப் புராணம்**

ராகுல் சாங்கிருத்யாயன்

தமிழில் : ஏ.ஜி.எத்திராஜுலு

***வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்., அம்பத்தூர், சென்னை - 600 098***

***தொடர்புக்கு : 044 - 26251968***

**விலை: ₹ *130/-***


அத்தோடு இன்னும் சில சிறப்புத் தகுதிகள் (விவசாயம், இயந்திரம் சரிபார்த்தல், தச்சு வேலை, ஆடை வெளுத்தல், வடிவமைப்புக் கலைகள், புகைப்படக் கலை...) இருந்தால் ஊர்சுற்றி தன்னிறைவு அடைய மிகவும் உதவிகரமாக இருக்கும். முதலுதவி சிகிச்சைத் தெரிந்திருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஊர்சுற்றிக்கு நடனமும், சங்கீதமும், வாத்திய இசையும் தெரிந்திருப்பின் எந்த நாட்டினருடனும் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

*5.* பழங்குடிகளிடையே... : உலகில் நாகரீகம் வளர்ச்சியடையாத இனமக்களைப் பார்ப்பது ஊர் சுற்றிக்கு மிகவும் பிடித்தமானது. அங்கு வறுமையில் வாழும் பின்தங்கிய மக்களின்பால் உலகத்தோர் கவனத்தை ஈர்க்கிறான். காடுவாழ் மக்களின் பழக்க வழக்கங்களை வெறுப்பில்லாமல் நாமும் பழகிக் கொள்வது அவர்களிடத்தில் மேலும் நெருக்கத்தை அதிகரிக்கும். அவர்களிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கும் அது உதவியாக இருக்கும். நம்மிடமிருக்கும் மருந்தோ, நாகரீகப் பொருட்களோ அவர்களுக்குத் தேவைப்படும். அவற்றை ஊர்சுற்றி வைத்துக் கொள்வது நலம் பயக்கும். பழங்குடியினருடன் சுற்றித் திரிவது ஒரு தனி இன்பம் பயக்கும் அனுபவ மாகும்.

*6.* பெண் ஊர்சுற்றிகள் : பெண்களை அடிமை களாக நடத்தாத நாடுகளிலுள்ள பெண்கள் இன்றும் வீரதீரப் பயணங்கள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அமெரிக்க, ஐரோப்பியப் பெண்கள் ஆண்களைப் போலவே சகஜமாக ஊர் சுற்றுகிறார்கள். பெண் சுதந்திரத்திற்கு அருகதையுடையவளல்ல என்று கூப்பாடு போடும் இந்து சாஸ்திரங்களால் இந்தியாவில் பெண் ஊர் சுற்றிகள் குறைவாகவே இருக்கின்றனர். தற்போது உலகம் பெரும் மாற்றமடைந்து வருகிறது. அதனால் யுவதிகளும் ஊர்சுற்றத் தயாராகி வருகின்றனர்.

*7.* மரண தத்துவம் : ஊர்சுற்றியின் அகராதியில் ‘பயம்’ என்ற சொல்லுக்கே இடமில்லை என்கிறார் இராகுல்ஜி. ஓரங்குலம் வரை நீளமுடைய, எலும்பில்லா பிராணி “பிலனாரியன்” உணவு கிடைக்காத போது, தனது உடலையே உணவாக்கிக் கொண்டு, சிறியதாக மாறத்தொடங்கும். பல மாதங்கள் உணவில்லாமல் கிடந்த பிறகு, பிறக்கும் போது இருந்த அளவிற்குச் சிறியதாகி விடுமாம். அது சாவிடம் தோற்று விடுவ தில்லை. மீண்டும் குழந்தைப் பருவத்திற்கே திரும்பி விடும் அதிசயமும் நிகழ்கிறது. பத்தொன்பது தலைமுறை வரைகூட முதுமையிலிருந்தும், சாவிலிருந்தும் தப்பி வாழமுடியுமாம். மனிதன் அப்படி நீண்ட காலம் வாழமுடியாது. வீணாகவே சாவைப் பயங்கரமானதாக நினைக்கிறோம். வாழ்க்கையில் விரும்பத்தகாத விஷயம்

இருக்கிறதென்றால் அது சாவல்ல; சாவு பற்றிய பமம் தான் அது. ஒரு உண்மையான ஊர்சுற்றிக்குச் சாவு பற்றிய பயம் ஒருபோதும் இருப்பதில்லை. புகழுடலை விரும்பாமல், வாழும் காலத்திலேயே உலகத்திற்குத் தன்னாலானதை அளித்துவிட்டு, சூனியத்தில் மறைந்து விடுவது கவர்ச்சியற்றதாகத் தோன்றலாம். தன்னலமற்ற, ஆத்மதிருப்தி அளிக்கும் இந்த வாழ்வு எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. உண்மையான ஊர்சுற்றியின் வாழ்வும் இவ்வகையானதே.

*8. எழுதுகோலும் தூரிகையும் :* வெளியுலகத் தொடர்பு சற்றும் இல்லாவிட்டால், மனித உள்ளத்தில் கற்பனைகளோ, சிந்தனைகளோ எழமுடியாது. ரவீந்திர நாத்தின் எழுத்துகளுக்கு ஊர் சுற்றுதல் மெருகூட்டி யுள்ளது என்பதை உலகு தழுவிய நிறுவனமாக்க ஊர் சுற்றுதலே அவரைத் தூண்டியது. அழகான காவியங் களையும் மகா காவியங்களையும் எழுத ஊர்சுற்றுதலை மிக அதிகமாக ஊக்குவிக்கலாம். இளம் ஊர்சுற்றியும் தனது பயண அனுபவக் காட்சிகளால் தூண்டபெற்று அழகிய கவிதை மழை பொழிய முடியும். உயர்தர ஊர் சுற்றி நல்ல எழுத்தாளனாகவுமிருப்பது அவசியம். பயண வர்ணனையும் ஒரு சிறந்த இலக்கியமாக இருக்க முடியுமென்பதைப் பல எழுத்தாளர்களின் பயண நூல்களிலிருந்து அறியலாம். ஊர்சுற்றி எழுதும்போது கட்டுப்பாட்டை மிகவும் கடைப்பிடிக்க வேண்டும். ஊர்சுற்றிகள் சூரியனைப் போல் உதித்து, அஞ்ஞான இருளை, மூடநம்பிக்கைகளை வளர்க்கும் கதைகளை சின்னாபின்னப்படுத்திவிட வேண்டும் என ஆவேசப் படுகிறார் இராகுல்ஜி. இமயமலையைச் சித்திரமாகத் தீட்டிய சோவியத் ஓவியர் நிக்கோலஸ் ரோய்ரிக், ஒரு நல்ல ஊர்சுற்றி தூரிகையாலும் சாதனை நிகழ்த்த முடியும் என்பதற்கு நல்ல உதாரணம்.

*9. பயன் கருதாப் பயணம் :* குறிக்கோள் ஏதுமில்லாமல் வெறும் மனதிருப்திக்காக ஊர்சுற்றுவது கூடத் தவறில்லை என்கிறார் இராகுல்ஜி. பழங்காலத்திய ஊர்சுற்றிகளில் பலரும் ஒரு நூலோ, புத்தகமோ எழுதிப் போகவில்லை. எத்தனையோ பேரை இவ்வுலகம் அறியவுமில்லை. உலகமெல்லாம் சுற்றிக்கொண்டே ஊர் பேர் தெரியாமல் மறைந்துவிட்ட எத்தனையோ பேரின் மண்டை ஓடுகளைத் தான் பார்த்து வியந்ததாகக் கூறுகிறார் இராகுல்ஜி. எந்தக் குறிக்கோளுமில்லாமல் உலகைச் சுற்றி வருவதும் பயனற்ற செயலல்ல. இப்படிப் பட்ட ஊர்சுற்றிகள் இதற்கு முன்னும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். 1932ல் லண்டனில் ஷெரீஃப் எனும் ஊர்சுற்றியைச் சந்தித்ததாகவும், முதலாம் உலகப் போர் நடக்கும் சமயத்தில் அவர் எப்படியோ லண்டனுக்குள் நுழைந்து விட்டதாகவும், பிச்சை எடுத்துக் கொண்டே வாழ்வை ஓட்டுவதாகவும், இரவு நேரங்களில் பொதுப் பூங்காக்களை மூடிவிடுவதால் பகலில் அங்கு தூங்கி விட்டு இரவு முழுவதும் விழித்திருந்து தெருக்களைச் சுற்றிவர பழகிவிட்டதாகவும் இராகுல்ஜி குறிப்பிடுகிறார்.

இதே போல் குறிக்கோளற்ற ஊர்சுற்றி ஒருவன் ஒரு கிராமத்திற்கு வரும்போது, கிராமத்தினர் எல்லோரும் அவனைப் பார்த்து ஏதோ கிசுகிசுக் கின்றனர். அவனை நன்கு வரவேற்று, சமைத்து சாப்பிடும் போது ஊரே அவனைச் சுற்றிக் கொண்டு, பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன் இளம் மனைவியைப் பிரிந்து சென்றவன் அவன் தான் என்று கருதி அவளுடன் சேர்த்து வைத்து விடுகிறார்கள். அவன் எவ்வளவோ மறுத்தும் அவர்கள் கேட்காததால் வேறு வழியில்லாமல் அவனும் வாழ்ந்து ஒரு குழந்தைக்கு தகப்பனும் ஆகிவிடுகிறான். அதன் பிறகு உண்மையான ஆசாமி வருகிறான். இப்போது ஊர்சுற்றியின் நிலைமை என்னாகும்? என்ற கேள்வியுடன் முடிக்கிறார் இராகுல்ஜி.

*10. நினைவுகள் :* ஊர்சுற்றி பற்றற்றவனாக இருப்பான்; ஆனால் அதே சமயத்தில் அவன் உள்ளத்தில் மானிட சமுதாயத்தின்பால் அபாரமான அன்பு நிறைந் திருக்கும். அதுவே அவனுடைய உள்ளத்தில் கணக்கற்ற நினைவுகளைச் சேர்த்துவிடும். தற்காலிகமாக அமையும் ஒரு சில நட்புகள் ஊர்சுற்றியின் நினைவுகளில் நீங்கா இடத்தைப் பெற்றுவிடுகின்றனர். ஊர்சுற்றி எப்போதுமே வேதனை தரும் நினைவை உண்டாக்கிக் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகிறார் இராகுல்ஜி. உதவி செய்தவர்களையும் மகிழ்ச்சியும் நிம்மதியும் அளித்தவர் களைத் தன் உள்ளத்தில் நினைவாகத் தேக்கி வைத்துக் கொள்கிறான் ஒரு நல்ல ஊர்சுற்றி. இந்நினைவுகளை யெல்லாம் நாட்குறிப்பில் எழுத்து வடிவமாக்கினால் நல்லது.

மனிதன் தோன்றிய புராதன காலத்திலிருந்தே ஊர் சுற்றுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதிக அனுபவமும், திறமையும் உள்ள சிந்தனையாளர்கள் ஊர் சுற்றுதலைப் பற்றி எழுதாமல் இருந்துவிடக் கூடா தென்பதற்காகவே இந்நூல் எழுதுவதற்கு முக்கியக் காரணம் என்கிறார் இராகுல்ஜி. இதுவரை மக்கள் ஊர்சுற்றுதலைச் சாதனமாகவும், கடவுளைத் தரிசிப் பதையும், மோட்சம் பெறுவதையும் லட்சியமாகவும் கொண்டிருந்தனர். ஆனால் ஊர்சுற்றுதல் வெறும் சாதனம் மட்டுமல்ல; இலட்சியமும் கூட! எழுத்தாள னுக்கும் கலைஞனுக்கும் ஊர்சுற்றுதல் ஒரு வெற்றிப் பயணமாகும். ஊர்சுற்றுதல் என்பது சாதாரண விஷயம் அல்ல. அது உண்மையைத் தேடுவதிலும், கலைகளைப் படைப்பதிலும், நட்புறவை வலுப்படுத்துவதிலும் மாபெரும் சாதனமாகும் என்கிறார் இராகுல்ஜி. ●

# மார்க்ஸ் - எங்கெல்ஸ் தேர்வுநூல்கள்
# நியூ செஞ்சுரி வெளியீடாக...

**படிப்பதற்கும் கையாளவும் எளிதான 1/8 டெமி அளவில்...**
**காலவரிசையில் தொகுக்கப்பட்டுள்ள மார்க்ஸ் - எங்கெல்ஸ் எழுத்துகள் 20 தொகுதிகளாக...**
**ந.முத்துமோகன் பதிப்பாசிரிய மேற்பார்வையில் வெளியிடப்படவுள்ள**

## 20 தொகுதிகளின் விவரங்கள்

**தொகுதி 1**
*1841* முதல் *1852* வரையான
மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துகள்

**தொகுதி 2**
மெய்யறிவின் வறுமை (மா) [*1847*]

**தொகுதி 3**
பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் (மா) [*1850*]
ஜெர்மனில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் (எ) [*1851*]
பதினெட்டாம் புரூமோர் (மா) [*1852*]

**தொகுதி 4**
அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு
ஒரு பங்களிப்பு (மா) [*1857*]

**தொகுதி 5**
நியூயார்க் ட்ப்யூரின் கட்டுரைகள் (*1853-62*)

**தொகுதி 6**
*1864* முதல் *1874* வரையான
மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துகள்

**தொகுதி 7**
பிரான்சில் உள்நாட்டுப் போர் நூல்,
அதன் முதலாம் இரண்டாம் உருவரைகள்,
கட்டுரைகள், சொற்பொழிவுகள் [*1871*]

**தொகுதி 8**
கார்ல் மார்க்ஸின் மூலதனம் முதல் தொகுதிக்கான
எங்கெல்சின் மதிப்புரைகள், சேர்க்கைகள்
மற்றும் பொழிப்பு
மூலதனம் நூலில் இந்தியாவைப் பற்றிய
குறிப்புகள் (தொகுப்பு)

**தொகுதி 9**
குடியிருப்பு பிரச்சினை (எ) [*1872*]
கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சனம் (மா)
[*1875*]
கார்ல் மார்க்ஸ் (எ ) [*1877*]
கார்ல் மார்க்சின் உடலைப் புதைக்கின்றபோது
நிகழ்த்திய உரை (எ) [*1883*]

**தொகுதி 10**
டூரிங்குக்கு மறுப்பு (எ ) [*1878*]

**தொகுதி 11**
கற்பனாவாத சோசலிசமும்
விஞ்ஞான சோசலிசமும் (எ) [*1880*]
கூலிமுறை [லேபர் ஸ்டேண்டர்ட் இதழில்
எங்கெல்ஸ் எழுதிய தலையங்கங்கள் - *1881*]
மார்க்சும் Neue Rheinische Zeitung இதழும்
(*1848-49*) (எ) [*1884*]
கம்யூனிஸ்ட் சங்கத்தின் வரலாறு குறித்து (எ) [*1885*]

**தொகுதி 12**
குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின்
தோற்றம் (எ) [*1886*]

**தொகுதி 13**
இயற்கையின் இயக்கவியல் (எ) (*1873-86*)

**தொகுதி 14**
லூத்விக் பாயர்பாக்கும் செவ்வியல் ஜெர்மன்
தத்துவத்தின் முடிவும் (எ) [*1886*]
கிறித்தவம் எங்கெல்ஸின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
[*1882-1894*]

**தொகுதி 15**
வரலாற்றில் வன்முறையின் பாத்திரம் (எ) [*1888*]
சமூக-ஜனநாயக வேலைத்திட்ட நகலைப் பற்றிய
விமர்சனம் (எ) [*1891*]
எதிர்கால இத்தாலியப் புரட்சியும் சோசலிஸ்ட்
கட்சியும்(எ) [*1894*]
பிரான்சிலும் ஜெர்மனியிலும் உழவர் பிரச்சினை(எ)
[*1894*]

**தொகுதி 16**
இந்திய வரலாறு பற்றிய கார்ல் மார்க்ஸின்
குறிப்புப் புத்தகம்

**தொகுதி 17**
எங்கெல்சின் இளமைக்காலக் கடிதங்கள் [*1838-1845*]
மார்க்ஸ் - எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்துகள்
[*1846-1895*]

**தொகுதி 18, 19**
கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

**தொகுதி 20**
எங்கெல்ஸ் வாழ்க்கை வரலாறு

# சங்கர் பதிப்பகம்

15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி,

வில்லிவாக்கம், சென்னை-600 049

தொலைபேசி எண் : 044-26502086 / 9444191256

## எங்கள் புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| சித்தர் பாடல்கள் உரையுடன் பகுதி-1 | அடியன் மணிவாசகன் | 250-00 |
| சித்தர் பாடல்கள் உரையுடன் பகுதி-2 | “ | 240-00 |
| சித்தர் பாடல்கள் உரையுடன் பகுதி-3 | “ | 210-00 |
| சித்தர் பாடல்கள் உரையுடன் பகுதி-4 | “ | 300-00 |
| ஆழ்வார்களின் சிந்தனைகள் - பகுதி-1 | ஜெ. குமாரபிள்ளை | 300-00 |
| ஆழ்வார்களின் சிந்தனைகள் - பகுதி-2 | “ | |
| தாமிரபரணி மகாத்மியம் | கீர்த்தி | 150-00 |
| சித்தவைத்தியத் திரட்டு | அங்கமுத்து முதலியார் | 225-00 |
| திகைக்க வைக்கும் தீர்க்கதரிசி நாஸ்டரடாமஸ் | குன்றில் குமார் | 140-00 |
| பறக்கும் தட்டு | “ | 175-00 |
| பிரபஞ்ச ரகசியம் | “ | 200-00 |
| ஜல்லிக்கட்டு | “ | 165-00 |
| யுவான் சுவாங் (புத்தனைத் தேடி ஒரு புனித பயணம்) | “ | 160-00 |
| புதுச்சேரி தொல்லியல் சுவடுகள் | சி.எஸ்.முருகேசன் | 175-00 |
| சேயின்ட் ஜார்ஜ் கோட்டை | குன்றில் குமார் | 175-00 |
| ஹிட்லர் | “ | 235-00 |
| பிரபஞ்ச ஞானம் | சி.எஸ். தேவநாதன் | 150-00 |
| பிரச்சனைகளுக்குத் தீர்வு தரும் பதஞ்சலி யோகரகசியங்கள்-1 | வேணுசீனிவாசன் | 240-00 |
| பிரச்சனைகளுக்குத் தீர்வு தரும் பதஞ்சலி யோகரகசியங்கள்-2 | “ | 220-00 |
| துளசி வழிபாடு | “ | 150-00 |
| தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு | பானுகுமார் | 250-00 |
| நலமுடன் வாழ வீட்டு வைத்தியம் | உஷா சுப்பிரமணி | 120-00 |
| தேர்வின் வெற்றி உன் கையில் | டாக்டர் பால சுப்பிரமணியன் | 100-00 |
| ஜோதிடம் கற்றுக் கொண்டு பலன் சொல்லுங்கள் | ஷிவகுமார் | 300-00 |
| காஞ்சி மாமுனி மகா பெரியவர் தரிசனம் | வீ.இராமசுந்தரம் | 110-00 |
| வளமான வாழ்விற்கு சூபி தத்துவம் | குன்றில் குமார் | 150-00 |
| லீலாசுகரின் அமிர்தத் துளிகள் | கோபால தேசிகாசாரியார் | 200-00 |
| அறிவுலகின் ஆசான் அப்துல்கலாம் | இரா.குழந்தை அருள் | 145-00 |
| நல்ல நட்பு | “ | 145-00 |
| அன்பை விதைத்திடுங்கள் | “ | 140-00 |
| வெற்றி பெறு விண்ணைத் தொடு | “ | 190-00 |
| உணவே மருந்து உணவே மருந்து | சி.எஸ்தேவநாத் | 165-00 |
| மகாபாரதக் கதைகள் | ஆர்.கல்யாண மல்லி | 165-00 |



# மார்க்ஸ் என்பவர், "மார்க்ஸ்" ஆக, மாறத் தொடங்கியபோது...

## குருசாமிமயில்வாகனன்

**1835**ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், சட்டம் படிப்பதற்காக ஜெர்மனியிலிருந்த பான் பல்கலைக் கழகத்தில் கார்ல் ஹென்ரிச் மார்க்ஸ் (KARL HENRICH MARX) சேர்ந்தார்.

ஆனால் இரண்டு செமஸ்டர்களுக்குப் பிறகு, அங்குள்ளதைவிட பிரெஷ்ய நாட்டின் தலைநகரமான பெர்லினில் இருந்த பெர்லின் பல்கலைக்கழகத்தில் சிறந்த ஆசிரியர்கள் இருந்ததாக அவரது தந்தை ஹென்ரிச் மார்க்ஸ் கருதியதால் அவரது ஆலோசனைப் படி 1836ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பெர்லினுக்குச் சென்று அப்பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

1839ஆம் ஆண்டிலிருந்து உலக தத்துவ ஞானங்களின் வரலாற்றினை அவர் தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தார். இதனால், ஏற்கனவே அவரிடமிருந்த நாத்திகக் கண்ணோட்டமானது மேலும் வளர ஆரம்பித்தது.

1840ஆம் ஆண்டு பிரெஷ்யாவின் மன்னர் பட்டத்திற்கு வந்த நான்காம் பிரடெரிக் வில்ஹெம், அதற்கு முன்னர் தான் மாட்டியிருந்த முற்போக்கு முகமூடியினைக் கழற்றினான். அரசைப் பற்றி விமர்சனம் செய்பவர்கள் மீது பாய்ந்தான்.

1841 ஏப்ரல் மாதத்தில் கார்ல் மார்க்ஸ் படிப்பை முடித்தார். பெர்லின் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்கான கட்டணங்கள் அதிகம் என்பதால், அவர் தனது ஆய்வுரையை ஜெனா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தார். அவரது ஆய்வுரையை ஜெனா பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டது. அவருக்கு டாக்டர் பட்டமும் வழங்கியது. ஆனால், தனது வாழ்நாளில் ஒருபோதும் அவர் அப்பட்டத்தினைப் பயன்படுத்திக் கொண்டதேயில்லை.

தொடக்க காலங்களில் ஹெகல் என்பவரது கருத்துக்களினால் மார்க்ஸ் தாக்கம் பெற்றிருந்தார். 'இடதுசாரி ஹெகலியவாதி'களின் குழுவிலும் அவர் இருந்தார். பான் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிய வேண்டும் எனும் விருப்பமும் அவருக்கு இருந்தது. அவரது நண்பர் புரூனோபாயரும் அங்கு தான் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தார். ஆனால், பிரெஷ்ய அரசாங்கமானது, மதத்திற்கு எதிராகக் கூறப்படும் கருத்துக்களை ஒடுக்கும் வகையில், இளம் 'இடதுசாரி ஹெகலியவாதிகள்' மீது கடும் நடவடிக்கை களை எடுத்தது.

அதனடிப்படையில், ஏற்கனவே 1832ஆம் ஆண்டில் பான் பல்கலைக்கழகத்தில் பணி புரிந்து வந்த பேராசிரியர் லுட்விக் ஃபாயர்பாஹை பதவி நீக்கம் செய்தது. 1836இல் அவர் மீண்டும் பணிக்குத் திரும்புவதையும் தடுத்தது. அதன்பின்பு, அவர் இறையியலை விமர்சிக்கத் தொடங்கினார்.

1841ஆம் ஆண்டு அவருடைய 'கிறிஸ்தவ மதத்தின் சாரம்' எனும் புகழ்பெற்ற நூல் வெளிவந்தது. அடுத்ததாக, ஏப்ரலில் மார்க்ஸின் நண்பரான இளம் பேராசிரியர் புரூனோபாயரை பல்கலைக்கழகத்தில் உரையாற்ற நிர்வாகம் தடை விதித்தது.

ஜூலை மாதத்தில் மார்க்ஸ் 'கிறிஸ்தவ மதத்தின் சாரம்' நூலைப் படித்தார். பொருள் முதல்வாதக் கருத்துக் களின் பக்கம் ஃபாயர்பாஹின் கவனம் திரும்பியிருப்பதை மார்க்ஸ் அறிந்துகொண்டார்.

பான் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டும் எனும் மார்க்ஸின் விருப்பமானது அரசின் போக்கினால் மாறியது. அவர் பத்திரிகைத் துறையின் பக்கம் தனது விருப்பத்தைத் திருப்பினார்.

1843ஆம் ஆண்டில் லுட்விக் ஃபாயர்பாஹின் 'எதிர்காலத் தத்துவஞானத்தின் கோட்பாடுகள்' எனும் நூல் வெளியானது. அந்நூலின் கருத்துக்களால் தாக்கம் பெற்ற மார்க்ஸ், எங்கெல்ஸ், புரூனோபாவர் உள்ளிட்ட இடதுசாரி ஹெகலியவாதிகள் அனைவரும் ஃபாயர்பாஹ் வாதிகள் ஆனதாக எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.

1842ஆம் ஆண்டு ஜனவர் 1ஆம் நாள் ரைன்லாந்தி லுள்ள கோலோன் எனும் நகரத்தில் Rheinische Zeitung (ரெய்னிஷ் ஜீய்ட்டுங்) அதாவது, ரைனிஷ் பத்திரிகை எனும் பெயரில், அந்நகரத்தில் மேலாதிக்கம் பெற்றுக் கொண்டிருந்த சட்டசபையில் எதிர்க்கட்சியினராகவும் இருந்த 'தீவிரவாத முதலாளித்துவ'த்தின் பிரதிநிதிகளான இருந்த சில முதலாளிகளால், ஒரு தினசரிப் பத்திரிகை யானது ஆளுகின்ற அரசை, கட்சியை விமர்சிப்பதற் கென்றே தொடங்கப்பட்டது.

'ரெய்னிஷ் ஜீய்ட்டுங்' பத்திரிகையின் முதலாளிகள் சிறந்த எழுத்தாளர்களைப் பத்திரிகையில் சேர்ப்பதற்காக இடதுசாரி ஹெகலியவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மார்க்ஸையும் புரூனோபாவரையும் வெகுவாக அறிந்திருந்த அவர்கள் அப்பத்திரிகையின் ஆசிரியர் குழுவிற்குத் தலைவராக இருக்குமாறு மார்க்ஸிடம் கோரினர். 1842 மே மாதம் முதல் அப்பத்திரிகையில் எழுதத் தொடங்கியிருந்த மார்க்ஸ், அக்டோபர் மாதம் 15ஆம் தேதி அப்பத்திரிகையின் தலைமை ஆசிரியர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். அதற்காக கோலோன் நகருக்குக் குடிபுகுந்தார்.

மார்க்ஸின் தலைமை ஆசிரியப் பொறுப்பில் பத்திரிகையானது புரட்சிகரமான ஜனநாயகப் பாதையில் பாய்ந்தோட ஆரம்பித்தது. ரைன்லாந்து சட்டசபையில் அப்போது நடைபெற்று வந்த, பத்திரிகை சுதந்திரம் எனும் பொருள் குறித்த விவாதத்தைக் குறித்து, தனது முதல் கட்டுரைத் தொடரை, மார்க்ஸ் அதில் எழுதினார். பத்திரிகைச் சுதந்திரத்தை அழுத்தமாக வலியுறுத்தி எழுதப்பட்டிருந்த அவரது கட்டுரை பெருமளவில் வரவேற்பையும் விவாதத்தையும் கொண்டு வந்தது. விற்பனையையும் அதிகரித்தது. 1842 அக்டோபரில் ஆசிரியராக மார்க்ஸ் பொறுப்பேற்பதற்கு முன் 885 பிரதிகள் மட்டுமே விற்பனையாகி வந்த பத்திரிகை யானது 1843 ஜனவரியில் அதாவது மூன்றே மாதத்தில் 3400 பிரதிகள் விற்பனையானது. இது அக்காலத்தில் பெரும் சாதனையாகும்.

தனது இரண்டாவது கட்டுரைத் தொடருக்கான விசயத்தினையும் அவர் சட்டசபை விவாதங்களிலிருந்தே எடுத்துக்கொண்டார். சட்டசபை உறுப்பினர்கள் பேசிக்கொள்கிற அலுப்பூட்டுகின்ற, அற்பத்தனமான மொக்கை விவாதங்களைத் தன்னுடைய கட்டுரையில் எடுத்தாள்வது குறித்து அவருக்கு அருவருப்பு உண்டாகி யதாக மார்க்ஸே கூறியிருக்கிறார்.

ஆனால், இரண்டாவது கட்டுரைத் தொடருக்காக அவர் எடுத்துக்கொண்ட விசயமானது அவரை வேறொரு திசைக்கு மாற்றிப் பயணம் செய்ய வைத்தது. அவருள்ளிருந்த வேறொரு புதிய சிந்தனையாளனையும் வெளிக் கொண்டு வந்தது.

அதுவரை இளம் ஹெகலியவாதியாக இருந்து, தத்துவஞானத் துறையில் அதிரடியான வாதங்களை முன்வைத்துக் கொண்டிருந்த மார்க்ஸை, அதிலிருந்து முறித்துக் கொண்டு தன்னுடைய தனித்துவத்தை நோக்கி அவர் செல்லவேண்டிய சந்தர்ப்பத்தை இக் கட்டுரைத் தொடருக்கான தயாரிப்பு அவருக்கு வழங்கியது. 'மரத் துண்டுகளைத் திருடுவது குறித்த சட்டத்தின் மீதான விவாதங்கள்' என்பது அக்கட்டுரைத் தொடரின் தலைப்பாகும். இக்கட்டுரையை எழுதும் போதுதான் மார்க்ஸ் என்பவர் "மார்க்ஸ்" ஆகத் தொடங்கியிருந்தார்.

* * *

1840களில் பிரஷ்ய நாட்டின் பெரும் பிரச்சினைகளுள் ஒன்றாக, 'காடுகளில் மரம் திருடுதல்' பிரச்சனை இருந்தது. பிரஷ்யாவின் நீதிமன்றங்களில் ஆறில் ஒரு பங்கு வழக்குகள், காடுகளிலிருந்த விறகுகளை மக்கள் திருடுவதான குற்றச்சாட்டுகள் குறித்தே நடந்தன. ரைன்லாண்டில் அவ்வழக்குகள் இன்னும் அதிகமாக நடைபெற்று வந்தன.

அரசுக்குச் சொந்தமான தேக்கு மரக் காடுகள், அப்பகுதியிலிருந்த சிறு நிலவுடமையாளர்களான ஏழை விவசாயிகளின் பயன்பாட்டில் இருந்தன. முதிர்ந்து பட்டுப்போன தேக்கு மரங்களையும் பச்சைத் தேக்கு மரங்களிலிருந்து கீழே விழுகின்ற சுள்ளி விறகுகளையும் உணவு சமைக்கவும், வெப்பப்படுத்தவும் விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். அவர்களின் சிறு குழந்தைகள் அக்காட்டில் விளைந்த கிரன்பெர்ரிப் பழங்களைச் சேகரித்து வந்தனர். தங்கள் வனப் பகுதியினைப் பாதுகாக்கும் பொருட்டு அங்கேயே தங்கி வாழவும்; பட்டமரங்களின் சுள்ளி விறகுகளைச் சேகரித்துக் கொள்ளவும்; அன்னியர்கள் காடுகளுக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுக்கவும்; விலங்குகள் வேட்டையாடப் படுவதைத் தடுக்கவும்; பச்சைத் தேக்கு மரங்களை வெட்டுவதைத் தடுக்கவுமாகிய உரிமைகளை ஏற்கனவே அவர்கள் பெற்றிருந்தனர். அந்த உரிமையானது, அவர்களுக்கு யாராலும் வழங்கப்பட்டதில்லை. வரலாறறியாக் காலத்திலிருந்தே அவ்வுரிமை அவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தது.

காடுகளின் பராமரிப்பிற்காக, வனத் துறையினை உருவாக்கிப் பாதுகாத்தபோதும், மேற்கண்ட உரிமைகளைத் தடுக்கும் கட்டளையினை வனப் பாதுகாவலர்களுக்கு அரசு வழங்கவில்லை. அதுவரையிலும் பிரச்சினை ஏதுமில்லை.

இப்போது ரைன்லாந்தை தொழில்மயமான மாநிலமாக ஆக்கப் போவதாக அரசு கூறத் தொடங்கியிருந்தது. பிரச்சினைகள் ஆரம்பித்தன. காடுகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டன. பெரும் நிலவுடமையாளர்கள் காடுகளில் சட்டப்படியாகவே, அத்துமீறிப் புகுந்தனர். அதனால், அதுவரை இயற்கையாகவே விவசாயிகளுக்கு இருந்துவந்த பயன்பாட்டு உரிமைகள் நிலவுடமையாளர்களால் பறிக்கப்பட்டன. இதுவரை பாரம்பரியமாக இருந்துவந்த அவர்களது உரிமைகள் இப்போது அரசால் 'சட்டவிரோதம்' என குற்றம் சாட்டப்பட்டன. காலங்காலமாக அவர்கள் செய்துவந்த செயல்கள் அரசால் 'குற்றங்கள்' என அறிவிக்கப்பட்டன. அதனால், வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. நீதிமன்றங்கள் அக்குற்றங்களுக்கான கடுமையான தண்டனைகளை ஏழை விவசாயிகளின்மீது சுமத்தின.

இத்தனை காலமாக, சுள்ளி விறகுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த ஏழைகளாகப் பார்க்கப்பட்ட விவசாயிகள், இப்போது, நில உடமையாளர்களுக்காக அரசால் கொண்டு வரப்பட்ட வனத் துறைச் சட்டத்தின் வழியாகப் பார்த்தபோது, 'மரத்துண்டுத் திருடர்'களாக மாறி விட்டனர். அரசு ஊழியர்களாக இருக்கும் வனப் பாதுகாவலர்கள், விவசாயிகளைப் பெரும் நில உடமையாளர்கள் வசம் ஒப்படைத்தனர். அவர்களுக்காகக் கட்டாயமாக வேலை பார்க்குமாறு ஏழை விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். சட்டசபையில் இப்பிரச்சினையின் மீதான உறுப்பினர்களின் விவாதம் பெரும் பிரச்சினையாகக் கிளம்பியது. இப்பிரச்சினையையே மார்க்ஸ் தனது அடுத்த கட்டுரைத் தொடருக்கான விசயமாக எடுத்துக் கொண்டார்.

* * *

இப்பிரச்சினையை முழுமையாக அறிந்து கொள்வதற்காக அவர் மோஸெல் நகரில் வாழுகின்ற விவசாயிகளைச் நேரடியாகச் சென்று சந்தித்தார். வறுமையில் சிக்கித் தவிக்கின்ற, உரிமைகள் பறிக்கப்பட்ட அவர்களுடன் உரையாடினார். அவர்களின் வேதனையை முழுமையாக உணர்ந்தார். 'என்றுமே மறக்க முடியாத, சொந்த நாட்டில் பொது மக்கள் படுகின்ற வேதனையின் மொழியை, மிக அதிகமான மனசாட்சியுடன், அவர்களிடமிருந்து கேட்டதுபோலவே, பத்திரிகையின் பக்கங்களில் எழுதுவது தனது அரசியல் கடமை என அனைவரும் கருத வேண்டும்.' எனப் பத்திரிகையில் எழுதுபவர்களுக்கான விசயம் குறித்து எழுதும்போது பின்னர் மார்க்ஸ் எழுதினார்.

தத்துவச் சிக்கல்கள் குறித்த விவாதங்களில் வானில் பறந்து வாளைச் சுழட்டி எதிரிகளை வீழ்த்திக் கொண்டிருந்த இளம் ஹெகலியவாதியான மார்க்ஸ், முதன் முறையாக பூமியில் நின்று மக்களின் வேதனைக் குரலைப் புரிந்துகொள்ள முயன்றார்.

பத்திரிகையில், 'வனத் திருடர்கள் பற்றிய சட்டத்தின் மீதான விவாதங்கள்' எனும் தலைப்பில் தனது கட்டுரைத் தொடரைத் தொடங்கினார் மார்க்ஸ். வழக்கம்போல, அத்தொடரில் ஆழமான விவாதங் களை அவர் எடுத்து வைத்தார்.

அறிவுப்பூர்வமானது எனக் கருதப்படும் அரசின் சட்டங்களும் சட்டசபையும் நில உடைமையாளர்களின் கருவிகளாகச் செயல்படுவதை அக்கட்டுரைத் தொடரில் மார்க்ஸ் அம்பலப்படுத்தினார். தனிச் சொத்துடமை யானது மனித விரோதமானது; அது தனி மனிதருக்கும் எதிரானது; தனி நபருக்கு எதிரான அனைத்துக் குற்றங் களையும் நியாயப்படுத்துகிறது; மனிதனை மிருகத்தின் நிலைக்குத் தாழ்த்திவிடுகிறது என்பதில் அவர் தெளிவாக இருந்தார் என்பதை அவரது எழுத்துக்கள் வாசகர் களுக்குப் புரிய வைத்தன.

இயற்கைப் பிராணிகள் உலகில், 'உழைக்கும் தேனீ'க்களானது 'சோம்பேறித் தேனீ'க்களைக் கொன்று விடுகின்றன. மனிதப் பிராணிகள் உலகில், 'சோம்பேறி மனிதத் தேனீ'க்கள், 'உழைக்கும் மனிதத் தேனீ'க்களை உழைக்க வைத்தே கொன்று விடுகின்றன என்றார்.

வன விதிகளை மீறுபவர்களைப் பற்றிக் கூறும் போது, சட்டசபையானது, மரம் திருடுபவர்களுக்கும் சுள்ளி விறகு பொறுக்குபவர்களுக்கும் வேறுபாடு இல்லை, சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான் என்கிறது. ஆனால், நில உடைமையாளர்கள் மரங்களை வெட்டி அழிப்பதைப் பற்றிக் கூறும்போது, அதே சட்ட சபையானது, மரம் திருடுபவர்களுக்கும் சுள்ளி பொறுக்கு பவர்களுக்கும் வேறுபாடு உள்ளதாகக் கூறுகிறது, எனும் அரசினுடைய நில உடைமையாளர்களின் பக்கமான சார்பை அம்பலப்படுத்தினார்.

அதுவரை "அரசு" என்பதை, 'மனிதனுடைய இனக் குழு வாழ்க்கைச் சாராம்சத்தின் வெளிப்பாடு' என்றே மார்க்ஸ் கருதியிருந்தார். அது ஹெகலியக் கண்ணோட்ட மாகும். இந்த கட்டுரை எழுதுகின்ற முயற்சியின் போதுதான் "அரசு" என்பது 'உடமையாளர்களின் ஊழியன்' என்பதை மார்க்ஸ் கண்டுகொண்டார்.

நில உடமையாளர்களின் சுயநலத்தைக் கடுமை யாகச் சாடினார். சுயநலமானது தனக்காக முன் வைக்கின்ற தர்க்கத்தினைப் போன்ற பயங்கரம் வேறெதுவும் இல்லை என்றார். அந்தத் தர்க்கமானது, அரசினுடைய அதிகாரத்தை, நில உடைமையாளர் களுடைய வேலைக்காரனாக மாற்றிவிடுகிறது என்றார்.

நில உடைமையாளர்களின் நலன்களானது, அரசின் உறுப்புகள் அனைத்தையும் தனக்கான காதுகளாக, கண்களாக, கைகளாக, கால்களாக மாற்றி, அதன் மூலமாகப் கேட்கின்றன; பார்க்கின்றன; மதிப்பிடு கின்றன; பாதுகாக்கின்றன; நீட்டுகின்றன; ஓடுகின்றன எனக் கடுமையாகச் சாடுகிறார்.

சுயநலம் உருவாக்குகின்ற தர்க்கவாதங்களானது, சாதாரணமான, அற்பமான பொருள்களுக்கும்கூட அதிசயமான குணங்களைக் கொடுக்கின்றன. இங்கு திருடப்பட்ட 'சுள்ளி விறகு' எனும் சாதாரணமான, அற்பமான பொருளானது, நிலவுடைமையாளரை 'அரசா'கவே மாற்றிவிடுகிறது. எப்படியென்றால், விறகினை எடுப்பதன் மூலமாக ஒரு திருடனுக்கு எதிராக அரசு இதுவரை வைத்திருக்கின்ற உரிமையை இப்போது நில உடமையாளர் பெற்றுவிடுகிறார். அவரே அரசாகவும் ஆகிவிடுகிறார். இதைத்தான், "நிலவுடைமையாளரானவர் 'விறகு திருடனை'ப் பயன்படுத்தி 'அரசை'யே திருடி விடுகிறார்" என மார்க்ஸ் துல்லியமாகக் குறிப்பிடுகிறார்.

சுள்ளி விறகினை விவசாயி எடுத்துச் செல்வதால் அதன் மீதான உரிமையை நிலவுடைமையாளர் இழந்து விடுகிறார். ஆனால் அரசினுடைய சட்டத்தின் மூலமாக, விவசாயி எனும் ஒரு மனிதனின் மீதான உரிமையையே நிலவுடைமையாளர் பெற்று விடுகிறார் என்கிறார் ஹென்றி வோல்கவ். ஒரு முட்டாள்தனமான சட்டத்தின் மூலமாக அரசானது, தன்னுடைய வழக்கமான உரிமைப் பயன்படுத்தும் ஒரு தனிமனிதனை காட்டின் எதிரி யாகவும் குற்றவாளியாகவும் மாற்றுகிறது என்கிறார் ஜான் பெல்லமி ஃபாஸ்ட்டர்.

இதன்மூலமாக, ஏழை, எளிய மக்களுக்கும் இயற்கைக்குமான உறவைத் தனி உடைமையாளர்கள் துண்டித்து விடுகின்றனர் என, மார்க்ஸ் குற்றம் சுமத்துவதோடு, 'விறகு என்பது ரைன்லாந்தைச் சேர்ந்தவருடைய மூட பக்தி' எனத் தனது கட்டுரையை முடிக்கிறார்.

இருப்பினும் மார்க்ஸிற்கு ஒரு உறுத்தல் இருந்தது. அறிவுப்பூர்வமானது எனக் கூறப்படுகின்ற அரசின் சட்டத்தை விமர்சித்து அவர் ஆழமான, புறக்கணிக்க முடியாத வாதங்களை முன்வைத்தார். அந்தவகையில் அது சரிதான் என்றும் அவர் நினைத்தார். ஆனால், அரசானது நாட்டைத் தொழில்மயமாக்கி அனைத்து மக்களையும் முன்னேற்றுவதற்காகத்தான், காடுகளை நிலஉடைமையாளர்களுக்குக் கொடுக்கின்றது. இதில் தவறொன்றும் இல்லை. இது அரசின் சட்டப்படியான, தவிர்க்க முடியாத நிகழ்ச்சிதான். ஆனால், அரசு இப்படி சட்டப்படியாக நடந்துகொள்ளும்போது, ஏழை விவசாயிகளின் பொருளாதார வாழ்வு ஏன் பாதிக்கப் படுகிறது? அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? இவைகளைக் குறித்து கட்டுரையில் தான் முன்வைத்த வாதங்கள், வெளிப்படுத்தத் தவறிவிட்டன, எனும் முடிவிற்கு அவர் வந்தார்.

இந்த இடத்தில் நாம்கூட சிந்திக்கலாம். இந்திய அரசானது நாட்டைத் தொழில்மயமாக்கி முன்னேற்று வதற்காகத்தான் காடுகளை, மலைகளை, கடல்களை, விவசாய விளைநிலங்களை பன்னாட்டு முதலாளிகளிடம் கொடுத்து தொழில் நடத்தச் சொல்வதாக மக்களிடம் சொல்கிறது. ஆனால், மலைவாழ் பழங்குடி இன மக்களும் மீனவர்களும் விவசாயிகளும் தாங்கள் பாதிக்கப்படுவதாக அலறுகிறார்கள். ஏன்? எதை ஆதரிப்பது? நாட்டு முன்னேற்றத்திற்காக எனக் கூறுகின்ற அரசையா? அல்லது பாதிக்கப்படுகிறோம் எனக் கதறும் மக்களையா? உங்களுக்கு ஏதேனும் விடை தெரிகிறதா? அதேபோலத்தான் மார்க்ஸும் அப்போது அதற்கான விடையைத் தேடினார்.

மேலும் அதுவரையிலும் அரசு எனும் நிறுவன மானது, மொத்த சமூகத்திற்கும் நன்மை செய்யும் பண்பினைக் கொண்ட, பொதுவான ஒரு அமைப்பு என்றே மார்க்ஸ் நம்பிக் கொண்டிருந்தார். பணக்காரர்களுக்குத் தருகின்ற பாதுகாப்பு மற்றும் ஆதரவு மற்றும் போலீசின் அமைப்பு முறை ஆகியவை காரணமாகத்தான் அரசானது தனது நற்பண்பினை இழந்துவிட்டது எனவும் அவர் நம்பிக் கொண்டிருந்தார். அன்று மார்க்ஸ் நம்பிக் கொண் டிருந்ததைப் போலத்தான் இன்று நாமும் அரசைக் குறித்து நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், மார்க்ஸ் தனது நம்பிக்கையை விரைவில் தூக்கி எறிந்துவிட்டார். நாம்?


Rheinische Zeitung für Politik, Handel und Gewerbe.
Nr 289 — Köln, Sonntag den 16. Oktober — 1842

ரெய்னிஷ் ஜீய்ட்டுங் நாளிதழ்

தான் இதுவரை செய்துகொண்டிருந்த தத்துவ விவாதங்களின்போது அவருக்குத் தேவைப்படாத, அதேசமயம் மக்களுக்கு உண்டாக்கப்படுகின்ற வேதனை களையும் பிரச்சினைகளையும் முழுமையாகப் புரிந்து கொள்வதற்காகத் தேவைப்படுகிற ஒரு கருவி - ஒரு கல்வி - தம்மிடம் இல்லை என்பதை அப்போதுதான் அவர் உணர்ந்தார். அது, 'அரசியல் பொருளாதாரக் கல்வி' என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

அதன்படி, மனிதர்கள் தனிச் சொத்து வைத்துக் கொள்வதற்கான பொருளாதார உரிமைக்கும் அரசின் கொள்கையான அரசியலுக்கும் இடையில் உள்ள இணைப்பு குறித்து அவர் ஆராயத் தொடங்கினார். அரசானது, தனது பண்பினை இழந்து பணக்காரர்கள் பக்கமாகச் செயல்படவில்லை. மாறாக, அரசின் தோற்றமே, அதன் இயல்பே, பணக்காரர்களின் நலன்களுக்காகச் செயல்படுவதுதான் எனும் விடையை அவர் தேடித் தெரிந்து கொண்டார். நமக்கும் அதுதான் விடை என்பதையும் அவர் தெரிய வைத்தார்.

அவரின் அடுத்த கட்டுரையானது, மோஸேல் நகரில் திராட்சை பயிரிடும் விவசாயிகளுக்கு ஏற்படும் துன்பங்கள் பற்றியும் அரசானது அவர்களுக்கு உதவி செய்வதற்கு விருப்பமில்லாமல் இருப்பது பற்றியும் இருந்தது. விவசாயிகளின் துன்பங்களுக்குக் காரணமாக, பருவகாலங்களையும் அதிகாரிகளுடைய தவறுகளையும் அரசும் மற்றும் பலரும் கூறினர். அவர்களையெல்லாம் கடுமையாகக் கண்டித்தார் மார்க்ஸ்.

அவர் அக்கட்டுரையில், "அரசாங்கத்தின் ஒரு விசயம் குறித்த நிலைப்பாடினைப் பற்றி விசாரித்து ஆராயும்போது அதற்கான சூழ்நிலைமைகளின் புறநிலைத் தன்மையைப் பற்றிச் சிலர் புறக்கணித்து விடுகிறார்கள். அதைச் சரியாகப் பார்க்கத் தவறி விடுகிறார்கள். (நடப்பது) எல்லாம் சம்பந்தப்பட்ட தனிநபர்களின் சொந்த விருப்பு என்பதன் அடிப்படை யிலேயேதான் வியாக்கியானம் செய்யப்படுகிறது. எனினும், தனிநபர்கள் மற்றும் தனிப்பட்ட அதிகாரி களின் செயல்களையும் (சொந்த விருப்புகளையும்) நிர்ணயிக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. சுவாசிக்கும் முறைகளைப்போல அவைகளும் சுயேட்சைத் தன்மை கொண்டவை" என எழுதினார்.

நாமும்கூட, மத்திய அரசு, மாநில அரசு, முதலமைச்சர், பிரதம மந்திரி ஆகியோரின் நோட்டு மாற்றம், ஜி.எஸ்.டி, மான்ய ரத்து போன்ற முடிவு களெல்லாம் அவர்களின் சொந்த சிந்தனையின் முடிவுகள் எனப் பார்த்துவிடக் கூடாது. அவர்களின்


முடிவுகளை நிர்ணயிக்கும் நிலைமைகள் தனியாக இருக்கின்றன. அது என்னவென்று மார்க்ஸைப்போல ஆராய்ந்து அறிய வேண்டும்.


'ரெய்னிஷ் ஜீய்ட்டுங்' பத்திரிகையில் மார்க்ஸின் இந்தக் கட்டுரைத் தொடர் வெளிவந்ததும், எதிர் பார்த்தது போலவே, அரசாங்கத்தின் அடக்குமுறையும் வந்தது. பங்குதாரர்களின் எதிர்ப்பும் வந்தது. அதுவரை முற்போக்கான பத்திரிகை முதலாளிகளாக இருந்தவர்கள் அப்போது பல்டியடித்தனர். சுதியைக் குறைத்திருக்கலாம் என மார்க்ஸிடம் அறிவுரை கூறினர். ஏற்கனவே, அரசாங்கம் இரட்டைத் தணிக்கை முறையைக் கொண்டு வந்து பத்திரிகையைக் கண்காணித்தும் பலனில்லை. பிறகு, மும்முறைத் தணிக்கை முறையைக் கொண்டு வந்து கண்காணிக்கத் தொடங்கியபோதும் பலனில்லை. மார்க்ஸிடம் அரசின் தணிக்கை முறையெனும் 'பருப்பு' வேகவில்லை. ஆகவே, அரசு பத்திரிகையைத் தடை செய்ய முடிவு செய்தது. அதற்கு முன்பாகவே 1843 மார்ச் 18ஆம் தேதியன்று ஆசிரியர் பொறுப்பிலிருந்து மார்க்ஸ் விலகினார். ஆயினும் மார்ச் 31ஆம் தேதியுடன் அந்நாளிதழ் நிறுத்தப்பட்டுவிட்டது.

அதேசமயம், தான் கற்க எண்ணியிருந்த, தனக்கு மிகவும் தேவையானது எனக் கருதியிருந்த 'அரசியல் பொருளாதார'த்தைக் மிகவும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் கற்கத் தொடங்கினார் மார்க்ஸ்.

ஒரு நாட்டின் அரசானது, சட்டப்படிதான் திட்டங்களைத் தீட்டுகிறது. ஆனால், அதன் விளை வானது ஏழை, எளிய மக்களைப் பலியாடுகளாகவும் குற்றவாளிகளாகவும் ஆக்கித் தண்டிக்கின்றது. கல்பாக்கம், நெடுவாசல், கதிராமங்கலம் உள்ளிட்ட நிலப்பரப்பு களிலும் கூடங்குளம் உள்ளிட்ட கடல் பகுதிகளிலும் இவ்வாறுதான் நடந்துகொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம், அரசின் 'தன்மை'தான் என்பதை மார்க்ஸ் புரிந்து கொண்டதைப்போல நாமும் புரிந்துகொள்ள வேண்டும்.


இதை 'அரசியல் பொருளாதாரக் கல்வி'தான் அவருக்கு முழுமையாக விளக்கியது. அக்கல்வியின் மூலமாக உலக மக்களின் துன்பங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது, 'தனிஉடைமை' எனும் சூத்திரம் தான் என்பதை அவர் கண்டடைந்தார். அதைத் தொடர்ந்தார். மார்க்சியம் எனும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தை மனித குலத்திற்குத் தந்தார். இதிலிருந்துதான், அதுவரை மார்க்ஸ் என்பவராக யிருந்தவர் "மார்க்ஸ்" ஆக மாறத் தொடங்கினார். உழைக்கும் மக்களின் பேராசான் ஆனார். ●

# எதிர் வெளியீடு

## சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்




## ஆர்டீமியோ குரூஸ்சின் மரணம்

கார்லோஸ் புயந்தஸ்

தமிழில் : ஸ்ரீதர் ரங்கராஜ்

ரூ : 400




## தடங்கள்

ராபின் டேவிட்சன்

தமிழில் : பத்மஜா நாராயணன்

ரூ : 320

எமது வெளியீடுகள் தமிழகத்தில் அனைத்து முன்னணி புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

எதிர் வெளியீடு

**எதிர் வெளியீடு**
96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.
04259 - 226012 | 99425 11302 | Email : ethirveliyedu@gmail.com
இணையம் வழி வாங்க : www.ethirveliyedu.in

# J.A.C. Departmental Store

Shri A.M.A. Jayaraman

Old No.15/1, New No.43, Gandhi Salai,

Thiruvarangam, Trichy - 620006

Phone No. 0431-2431532

0091-9677379114



வீட்டு உபயோகத்திற்கான

அனைத்து பொருட்களும் கிடைக்கும்

# காவிக்குள் ஒரு சிவப்பு

அத்திவெட்டி வே.சிதம்பரம்

**சு**வாமி விவேகானந்தர் பிறந்து 150-ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இந்த வேளையில் அவரை நம் இளைஞர்களுக்கு சரியான முறையில் அறிமுகப்படுத்த வேண்டிய தேவை நம் முன் எழுந்துள்ளது. விவேகானந்தரின் காவி வேறு இன்றைய காவி வேறு என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இந்திய நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டுக் கிடந்த 19ஆம் நூற்றாண்டில் இந்து மத சீர்திருத்த இயக்கங்களான பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் ஆகியவை தோன்றின. விவேகானந்தர், 1863ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் தேதி கல்கத்தாவில் பிறந்தார். இவரது தந்தை விசுவநாத தத்தர். தாயார் புவனேசுவரி தேவி. விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரன். கல்லூரியில் பி.ஏ. வரை படித்தார். இளமையிலேயே ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு வந்தார். தத்துவ நூல்களை ஆழ்ந்து படித்து வந்தார்.

விவேகானந்தர் தொடக்கத்தில் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்து சமூக சீர்திருத்த எண்ணங்களை வளர்த்து வந்தார். கல்லூரியில் ஒரு நாள் ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வொர்த்தின் (Wordsworth) கவிதையில் வரும் "பரவச நிலை" (Ecstsy) என்ற வார்த்தைக்கு விளக்கமளித்து வந்த பேராசிரியர், பகவான் ராமகிருஷ்ணரைப் பற்றி குறிப்பிட்டார். ராம



கிருஷ்ணரைக் கண்டால் பரவசநிலை என்றால் என்ன என்பது விளங்கும் என்றும் கூறினார். அதுமுதல் விவேகானந்தருக்கு ராமகிருஷ்ணரை சந்திக்க வேண்டுமென்ற ஆர்வம் வளர்ந்து வந்தது. 1881ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விவேகானந்தர் ராமகிருஷ்ணரை முதன்முதலில் சந்தித்தார். தனது வாழ்க்கையின் போக்கே மாறப்போகிறது என்பதை அப்போது விவேகானந்தர் உணரவில்லை. அந்த சந்திப்பின் பிறகு மெல்லமெல்ல ராமகிருஷ்ணரின் சீடரானார். விவேகானந்தரை ராமகிருஷ்ணர் சப்தரிஷிகளில் ஒருவராகவே கருதினார். 1886இல் ராமகிருஷ்ணர் இறந்த பின்னர் விவேகானந்தர் துறவி வாழ்க்கை மேற்கொண்டு பல இடங்களில் சுற்றுப்பயணம் செய்து ராமகிருஷ்ணரின் கருத்துக் களைப் பரப்பி வந்தார். துறவி வாழ்க்கை தொடங்கிய வுடன் தனது இயற்பெயரை துறந்து முதலில் "விவிதிசானந்தர்" என்ற பெயரையும் பின்னர் "சச்சிதானந்தர்" என்ற பெயரையும் சூட்டிக் கொண்டார். இறுதியில் அவர் அமெரிக்காவுக்கு புறப்படுவதற்கு முன்பு தான் விவேகானந்தர் என்ற பெயரை சூட்டிக்கொண்டார்.

1888ஆம் ஆண்டு முதல் நாடு சுற்றத் தொடங் கினார். கன்னியாகுமரியில் சிலகாலம் தங்கி யிருக்கையில் தியானம் செய்வதற்காக கடலில் உள்ள ஒரு பாறைக்கு நீந்திச் சென்று வருவது வழக்கம். அந்தப் பாறையில் இன்று விவேகானந்தர் நினைவு மண்டபம் கட்டப்பட்டு அதில் அவருக்கு சிலையும் வைக்கப்பட்டுள்ளது. விவேகானந்தர் அமெரிக்கா சென்று சிகாகோ நகரில் சொற் பொழிவு ஆற்றும் காலம் வரை அவரை அறிந் தோர் மிகச் சிலரே. அமெரிக்கா செல்வதற்கு பலரிடம் பொருளுதவி பெற்று மிகவும் சிரமப் பட்டு சென்றார். அமெரிக்காவில் தங்குவதற்குக் கூட வசதியின்றி எங்கெங்கோ சுற்றி அலைந்து, கூட்ஸ் வண்டியில் இரவிலே தூங்கி, உலக மதங்களின் மாநாடு நடைபெறும் இடத்திற்கு சென்றார். இவருக்கு, மாநாட்டில் கலந்து கொள்ள முதலில் அனுமதி மறுத்துவிட்டனர். பின்னர் ஒரு அமெரிக்க பேராசிரியரின் உதவியால் மாநாட்டில் பேசும் வாய்ப்பைப் பெற்றார்.

1893ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி விவேகானந்தரை உலகம் அறிந்து கொண்டது. மாநாட்டில் எல்லோரும் சீமான்களே! சீமாட்டி களே! (Ladies and Gentlemen) என்று அழைத்துப் பேசியபொழுது, விவேகானந்தர், சகோதரர்களே சகோதரிகளே (Brothers and Sisters) என்று அழைத்து தனது பேச்சைத் தொடங்கினார். இந்த வார்த்தை களைக் கேட்டவுடன் கூட்டத்தினர் பெருமகிழ்ச்சி காட்டி ஆரவாரம் பொங்க கை தட்டி வரவேற்றனர். தொடர்ந்து விவேகானந்தர் "உலகத்திலேயே மிக தொன்மை வாய்ந்த சந்நியாசிகளின் சார்பில் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன், மதங்களுக்கு எல்லாம் தாயான மதத்தின் சார்பில் நன்றி தெரி விக்கிறேன்; எல்லா வகுப்புகளையும் பிரிவுகளையும் சேர்ந்த கோடானு கோடி இந்துக்களின் சார்பில் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்று கூறியது அவரை ஒரே நொடியில் புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது. இந்து, பௌத்த, சமண மதங்களின் சிறப்புகளை தொடர்ந்து எடுத்துக் கூறினார். மேலும் முக்கியமான ஒரு கருத்தையும் முன் வைத்தார். "இந்திய மக்களுக்கு இன்றைய தேவை மதங்கள் அல்ல, உணவு வேண்டும் அவர்களுக்கு, நல்ல வாழ்வு வேண்டும்." அவரை புதிய நோக்கில் புரிந்துகொள்ள இது வழி வகுத்தது. மாநாடு முடியும் வரை அனைவரும் விரும்பிக் கேட்கும் பேச்சாளராக விவேகானந்தர் விளங்கினார். அமெரிக்கர்கள் அவரை போட்டி போட்டுக் கொண்டு தமது வீடுகளுக்கு அழைத்து விருந்தளித்து சிறப்புச் செய்தனர்.

அமெரிக்காவில் புகழ்மிக்க பல்கலைக் கழக மாக விளங்கும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் விவேகானந்தர் உரை நிகழ்த்தினார். இவரது சிறப்பறிந்து இந்தப் பல்கலைக்கழகம் இவருக்கு கீழைநாட்டு தத்துவப் பேராசிரியர் பதவி வழங்க முன்வந்தது. கொலம்பியா பல்கலைக்கழகம் இவருக்கு சமஸ்கிருத மொழிப்பேராசிரியர் பதவி வழங்க முன் வந்தது. பல அமெரிக்கர்கள் இவரது பக்தர்களானார்கள். ஆனால் அமெரிக்காவிலேயே இவர் புகழ் மீது பொறாமை கொண்ட பிரம்ம சமாஜத்தினரும், தியோசிபிகல் சொசைட்டியை சேர்ந்தவர்களும் அங்குள்ள கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து கொண்டு விவேகானந்தரை போலி சந்நியாசி என்று அவதூறு செய்தனர் என்பது விவேகானந்தர் சென்னை நண்பர்களுக்கு எழுதிய கடிதம் மூலம் தெரிய வருகிறது. இத்தகைய எதிர்ப்புகள் சூரியனைக் கண்ட பனி போல விலகி யோடியது. விவேகானந்தரை அமெரிக்க மக்கள் சரியாகப் புரிந்து கொண்டனர்.

அமெரிக்கா சென்று வெற்றி வீரராக இந்தியா திரும்பிய சுவாமி விவேகானந்தரை வரவேற்க கொழும்பு துறைமுகத்திற்கே சென்றுவிட்டனர். இலங்கையில் அவரை மிகச்சிறப்பாக, உற்சாகம் பொங்க வரவேற்றனர். 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதி ராமேசுவரம் வந்து மதுரை, திருச்சி, கும்பகோணம் வழியாக சென்னை வந்தடைந்தார். அவர் சென்னையில் ஆறு உரைகள் நிகழ்த்தினார். சென்னையில் அவர் தங்கியிருந்த மாளிகை இன்று அவரது நினைவாக மெரீனா

கடற்கரையில் “விவேகானந்தர் இல்லம்” என்ற பெயரில் விளங்கிவருகிறது. அவர் இந்திய மக்களுக்கு புதிய சிந்தனையை ஊட்டக்கூடிய கருத்துக்களை இந்து தத்துவத்தோடு கலந்து வழங்கினார்.

சுவாமி விவேகானந்தரை பெரும்பாலோர் ஓர் இந்து மதத்துறவி என்றே அறிந்துள்ளனர். ஆனால் அவர் அடிப்படையில் ஒரு தேசியவாதி. அதற்கு மேலும் அவர் தன்னை ஒரு சோசலிஸ்ட் என்று அழைத்துக்கொண்டார். சாதி ஏற்றத்தாழ்வு நீங்கவும், பெண்கள் சம உரிமை பெற்று வாழவும் பாடுபட்ட ஒரு சமுதாயத்துறவி அவர்.

உழைப்பவர்களை மிக உயர்வாக மதித்தவர் விவேகானந்தர். நாட்டின் செல்வத்தை உருவாக்கு பவர்கள் அவர்களே. “நமது தேசம் குடிசையில் இருக்கிறது, குடிசைகளில் வாழும் மக்களே நமது நாட்டின் உண்மையான மக்களாவார்கள்” என்று கூறினார். மேலும் அவர் உழைப்பாளி மக்களை நோக்கி “இந்தியாவின் உழைப்பாளி மக்களே! எல்லாக் காலத்திலும் பிறர் காலடியில் மிதியுண்டு அவதிப்படும் உங்களை நான் வணங்குகிறேன்” என்று ஆழ்ந்த தன் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தினார். இந்தியாவில் எப்படிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டும் என்ற தன் உள்ளக் கிடக்கையை “எவருக்கும் தனி உரிமையில்லை, எல்லா மக்களும் வாழ்க்கையில் முன்னேற ஒரே விதமான வாய்ப்பு இப்படிப்பட்ட சமுதாயம் தான் நமக்கு வேண்டும்” என்று சுருக்கமாக ஆனால் ஆழமான பொருள் கொண்ட வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்.

இந்தியாவில் அமையப்போகும் ஆட்சி முறை பற்றி, அவர் “மக்களால் நடத்தப்படும் புதிய ஆட்சி முறை ஒன்று இந்தியாவில் வரப்போகிறது என்பதற்கு அறிகுறிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அந்தக் குடியரசு ஆட்சி முறையை சோசலிசம் என்ற அரசியல் என்றோ அல்லது வேறு ஏதோ ஒரு வகையில் அமைந்த மக்களாட்சி என்றோ நீங்கள் எந்தப் பெயரால் வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள்” என்று தீர்க்க தரிசனத் துடன் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய புதிய ஆட்சி எப்படி ஏற்படப்போகிறது. யார் இதை செய்யப் போகிறார்கள் என்பதையும் விவேகானந்தர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். “தங்கள் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்று மக்கள் கேட்கப்போவது நிச்சயம். வேலைப்பளு குறைய வேண்டுமென்றும், கொடுமையும் யுத்தமும் ஒழிய வேண்டுமென்றும் மக்கள் வலியுறுத்து வார்கள்.” மக்கள் தங்கள் கோரிக்கைகளை முன் வைக்க அவர்கள் கல்வியறிவும் சமுதாய விழிப்பு உணர்ச்சியும் பெறவேண்டும் என்பதை “முதலில் பொதுமக்களுக்கு கல்வியைக் கொடுங்கள், இருக் கின்ற நிலைமை என்ன என்பதைப் பொது மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளும்படி செய்யுங்கள்” என்று செய்யவேண்டிய முதற்கடமை என்ன என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

சாதி இந்தியச் சமுதாயத்தின் கொடிய அம்சங் களில் ஒன்று என்பதை விவேகானந்தர் நன்கு உணர்ந்து, சாதி ஏற்றத்தாழ்வு ஒழிய வேண்டு மென்று வலியுறுத்தி வந்தார். “நமது பெரிய ஆச்சாரியார்கள் எல்லோரும் சாதி பேதத்தை ஒழிக்க எவ்வளவோ முயன்றிருக்கிறார்கள். புத்த மதம் முதற்கொண்டு, அதற்குப் பின் தோன்றிய மதப்பிரிவினரும் சாதி வேற்றுமையை எதிர்த்தே பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் இந்த முயற்சி ஒவ்வொரு தடவையும் சாதியை உறுதிப்படுத்தியதே தவிர வேறு பயனில்லை.” இந்தியாவின் அரசியல் ஸ்தாபனங்களிலிருந்து வளர்ச்சி பெற்றதே சாதியாகும் என்று அவர், சாதி ஒழிப்பு முயற்சி, அதன் தோல்வி, சாதிகள் தொடர் வதற்கான காரணம் ஆகியவற்றைத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

தாழ்ந்த சாதியினரை உயர்சாதியினர் மிக மோசமாக நடத்தியதால் தான் அவர்கள் மதம் மாறினார்கள் என்ற உண்மையை சுவாமி விவேகானந்தர் தெளிவாக்கியுள்ளார்.

“இந்தியாவிலேயே புரோகிதருடைய ஆதிக்கத் திற்கு மிகவும் உட்பட்டு இருக்கும் பகுதி திருவாங்கூர் தான், நிலத்தின் ஒவ்வொரு சிறிய பகுதியும் கூடப் பிராமணர்களுக்கே சொந்தமாக இருக்கிறது. இந்தத் திருவாங்கூரில் வாழும் மக்களில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டனர். இந்துக்கள் அனுதாபத்துடன் நடக்காததன் விளைவாகத் தமிழ்நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான பறை யர்கள் கிறிஸ்தவர்களாக மாறிவருகிறார்கள். இந்த நிலை பசிக் கொடுமையினால் மட்டும் ஏற்பட்டு விடவில்லை. இந்துக்களாகிய நம்மிட மிருந்து எந்தவிதத்திலும் அவர்களுக்கு அனுதாபம் கிடைக்காமலே போனதனால்தான் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது.

“இந்தியாவின் ஏழை மக்களிடையே இந்த அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் முஸ்லீம்கள் இருப்பதற்கு என்ன காரணம்? கத்தி முனையில் பயமுறுத்தப்பட்டு அவர்கள் மதமாற்றம் செய்யப் பட்டார்கள் என்று சொல்வது தவறாகும். ஜமீன் தாரர்களிடமிருந்தும், புரோகிதர்களிடமிருந்தும் விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வாழ்வதற்காகத்

தான் அவர்கள் முஸ்லீம்களாக மதம் மாறினார்கள்.'' இக்கூற்று இன்றைய காலத்திலும் எவ்வளவு பொறுத்த மாக உள்ளது என்பதை அறியமுடிகிறது.

சமுதாயத்தில் பெண்கள் மிக மோசமாக நடத்தப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமை மாறவேண்டும் என்று பாடுபட்டவர் சுவாமி விவேகானந்தர். அவர் கூறுகிறார் ''எல்லா நாடு களுக்குள்ளும் நமது நாடு பலவீனமாகவும் பின் தங்கியும் இருப்பதற்கு என்ன காரணம்? பெண்ணினம் நம் நாட்டில் அவமானம் செய்யப்படுவதுதான் அதற்குக் காரணம். கடினமான விதிகளினால் பெண் களைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்மிருதி முதலிய நீதி நூல்களை எழுதி ஆடவர், பெண்களை இயந்திரங் களாக ஆக்கிவிட்டார்கள். நமது நாட்டுப் பெண் களைப் பாருங்கள், பத்து வயதிலேயே குழந்தைப் பெற்றுத் தாய்மார் ஆகிவிடுகிறார்கள். ஐயோ கடவுளே! இப்போது இவற்றை எல்லாம் நான் உணர்கிறேன்! நாமே பெரும் பாவிகள், நரகத்தின் வாயில்கள் என்றெல்லாம் அழைத்ததுதான், நம் நாடு தாழ்ந்து அதோ கதியை அடைந்திருப்பதற்குக் காரணம்'' என்று சுவாமிகள் கூறி நூறு ஆண்டு களுக்குப் பிறகும் நாம் அப்படியேதான் இருந்து வருகிறோம்.

சுவாமி விவேகானந்தர் வெறும் பிரசாரம் மட்டும் செய்து வந்தவரல்ல, செயல்வீரர். 1897ஆம் ஆண்டு பஞ்சம் ஏற்பட்ட போது முர்ஷிதாபாத் மாவட்டத்தில் பஞ்ச நிவாரணப் பணிகளை மேற் கொண்டார். கல்கத்தாவில் பிளேக் நோய் பரவிய போது அதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொண்டார். கல்விக்கண் திறக்க நாடெங்கும் பள்ளிகளும், கல்லூரிகளும் தொடங்கினார். அவர் கூறுகிறார், ''நாம் கிளிப்பிள்ளைகளைப் போல் பேசுபவர் களாகி விட்டோம். பேசுவதும் பேசியபடி செயலில் ஒன்றும் நடத்தாமல் இருப்பதுமே நமது வழக்க மாய் போய்விட்டது'' சிந்தனையும் செயலும் ஒன்றுபடவேண்டும் என்பதை இன்று கூட நாம் கடைபிடிக்கிறோமா என்றால் இல்லை என்று தான் சொல்லவேண்டும்.


விவேகானந்தர் வேதாந்தத்தில் அத்வைத தத்துவத்தை தனது கண்ணோட்டமாகக் கொண் டிருந்தார். எல்லாவற்றிலும் இறைவன் இருக்கிறான். கடவுளை தனியே பிரித்தறிய முடியாது என்பதே அத்வைத தத்துவம். ஆதி சங்கரர் உருவாக்கிய தத்துவம் இது. விவேகானந்தர் எல்லா உயிர் களிடமும் அன்புகொண்டார், எனினும் மனிதனையே உயர்வாகக் கருதினார். ''உலகத்திலிருக்கும் செல்வங் களிலெல்லாம் மிகவும் உயர்ந்த செல்வம் மனிதன் தான்'' என்றார் அவர். மற்ற மதங்களை அவர் மிகவும் மதித்தவர். அவர் ஒரு முஸ்லீம் நண்பருக்கு 1898 ஜூன் 10ஆம் தேதி எழுதிய கடிதத்தில், ''நம்முடைய தாய்நாட்டிற்கு இந்து, இஸ்லாம் என்ற இருபெரும் தத்துவங்களின் சேர்க்கைதான் ஒரே ஒரு நம்பிக்கையாகும். வேதாந்தம் மூளை, இஸ்லாம் உடல்'' என்ற அவர் மிகத்தெளிவாக தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

விவேகானந்தர், தனது கண்ணோட்டத்தில் சர்வதேசவாதியாக விளங்கினார். மேற்குநாட்டு பயணங்களில் பாதிப்புகளைப் பெற்றார், இந்தியாவின் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கினார், வாழ்க்கைப் பிரச்சினைகளை அணுகுவதில் நவீன சிந்தனையாளராக விளங்கினார் என்று அவரைப் பற்றிய தனது மதிப்பீடுகளை பதிவு செய்துள்ளார் ஜவஹர்லால் நேரு அவர்கள். விவேகானந்தரின் சீடர் களில் மிக முக்கியமானவர் சகோதரி நிவேதிதை. இவரது இயற்பெயர் மார்க்கரெட் நோபிள். இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். நமது மகாகவி பாரதியார் நிவேதிதையை மிகவும் மதித்துப் போற்றியவர். பாரதியார் விவேகானந்தரைப்பற்றி தனது 'இந்தியா' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''சுவாமி விவேகானந்தர் முதன் முதல் வேதாந்தத்தை அன்னிய தேசத்தில் பரப்ப முயற்சி கொண்டு உலகம் முழுவதும் உபந்நியாசம் செய்து வந்ததையும் யாவரும் அறிவர். இவர் தெய்வத்தன்மை வாய்ந்தவரெனச் சொல்லலாம். தனது ஒளியைக் காட்டி விட்டு பால்யத்திலேயே வீடடைந்தார்.'' 1902ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04ஆம் தேதி தனது 39ஆம் வயதில் விவேகானந்தர், காலமானார். பாரதியார் இறக்கும் போது அவருக்கும் வயது 39. என்ன ஒற்றுமை! விவேகானந்தரின் பணி தமிழ்நாட்டிலே மிக அதிகமாகவே இருந்துள்ளது. இது பற்றி பெ.சு. மணி அவர்கள் தனது 'இராமகிருஷ்ணர் இயக்கமும், தமிழ்நாடும்' என்ற நூலில் விரிவாக எழுதி உள்ளார். விவேகானந்தரின் செயல்பாடுகளில் கல்கத்தாவிற்கு அடுத்து சென்னையே முக்கியமாக விளங்கியுள்ளது.

விவேகானந்தர் மக்களுக்கு வழங்கிய செய்தி: ''எழுந்து நில்; தைரியமாக இரு; வலிமையுடன் இரு; பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள்; உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை அறிந்துகொள்; எனது வீர இளைஞர் களே; உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே; செயல், செயல்புரியத் தொடங்குங்கள். தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தை கிளப்பு வதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்'' இந்தச் செய்தி நம் ஒவ்வொருவருடைய செவிகளில் எப் பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ●


# யுனிவர்செல் பப்ளிஷர்ஸ்


நெ.2/3, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 17









# கேள்வியும் நானே பதிலும் நானே



மதுரையில் இந்திய மருத்துவக் கழக கட்டடத்தில்
16-12-2017 அன்று வெ.இறையன்பு அவர்களின்
'கேள்வியும் நானே பதிலும் நானே' நூலை முன்வைத்து
கேள்வி பதில் மற்றும் பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.
இந்நிகழ்ச்சிக்கு ந.முருகேச பாண்டியன் அவர்கள் தலைமை வகித்தார்.
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர்
சண்முகம் சரவணன் அவர்கள் முன்னிலை வகிக்க
ஞா.சந்திரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.
ரவிசுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றினார்.
ஆத்மார்த்தி வாழ்த்துரை வழங்கினார்.
வெ.இறையன்பு அவர்கள் ஏற்புரை உடன் பார்வையாளர்களின்
கேள்விகளுக்கு சிறப்பாகப் பதில்களையும் அளித்தார்.
நிறைவாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி அவர்களின்
நன்றியுரை உடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

# கண்ணப்பன் பதிப்பகம்

4/20, திருவள்ளுவர் தெரு,

ஈக்காடுதாங்கல், சென்னை-600 032

தொலைபேசி எண் : 044-22250905 / 9840087219

**எங்கள் புதிய வெளியீடுகளில் சில**

| | | |
|---|---|---|
| இலக்கண விளக்கம் ( ஆறு தொகுதிகள்) | - | 580 |
| அறிவியல் உலகம் ஓர் அறிமுகம் (1 - 8) | - | 600 |
| விக்கிரமாதித்தன் கதைகள் | - | 400 |
| உயிர் காக்கும் இயற்கை உணவுகள் | - | 200 |
| பஞ்சதந்திரக் கதைகள் | - | 250 |
| பீர்பல் கதைகள் | - | 160 |
| நலம் தரும் நாட்டு மருத்துவம் | - | 170 |
| 1001 இரவுகள் | - | 350 |
| ஜென் கதைகள் | - | 200 |
| இந்திய விடுதலை வரலாறு | - | 150 |
| மூலிகைகளின் மருத்துவ குணங்கள் | - | 130 |
| பக்கம் ஒரு படிப்பினை | - | 100 |
| அறிந்ததும் அறியாததும் | - | 100 |
| அடால்ஃப் ஹிட்லர் | - | 100 |
| புரட்சியாளர் சேகுவேரா | - | 100 |
| பெண்களுக்காக | - | 200 |
| ஏவுகணை நாயகன் அப்துல் கலாம் | - | 70 |



என்.சி.பி.எச். வெளியீடான ‘தனுஷ்கோடி ராமசாமியின் படைப்பாக்கத்திறன்’ நூல் அறிமுகக் கூட்டம் 24-12-2017 அன்று சாத்தூரில் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் எழுத்தாளர் பொன்னீலன், நூலாசிரியர் முனைவர் பா.அகிலா, பேராசிரியர் நைனார், டாக்டர் அறம் மற்றும் என்.சி.பி.எச். மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, என்.சி.பி.எச். மதுரை மேலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



2018 ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தையொட்டி
மதுரை என்.சி.பி.எச். விற்பனை நிலையத்தில் ‘புத்தகத்தோடு கொண்டாடுவோம்’
எனும் முழக்கத்தோடு 31-12-2017 அன்று விடிய விடிய நடைபெற்ற சிறப்புப் புத்தக விற்பனை.



# வரலாற்றை உருப்படுத்திய ஒரு சொற்பொழிவு

‘மதிப்பு-விலை-லாபம்’ என்னும் மார்க்சின் சிறுநூல்

க. காமராாசன்

**முதலாளியம் பற்றிய மார்க்சின் இரண்டு சிறுநூல்கள்**

“கூலியுழைப்பும் மூலதனமும்”, “கூலி, விலை, லாபம்” என்ற தலைப்புகளில் வெளியாகியுள்ள மார்க்சின் இரண்டு சிறுநூல்களும் தொழிலாளர்களை நோக்கி, இரண்டு முக்கியமான சந்தர்ப்பங்களில், அவர் எழுதிய இரு பிரசுரங்கள் ஆகும். “கூலியுழைப்பும் மூலதனமும்” சிறுநூலை 1849 ஆம் ஆண்டில், ஒரு புரட்சிக்கான எழுச்சியை வழிநடத்திக் கொண்டிருந்த வேளையில், தாம் ஆசிரியராக இருந்து நடத்திய புதிய ரைன்லாந்து நாளிதழில் தலையங்கத் தொடர்க் கட்டுரையாய் மார்க்ஸ் எழுதினார். இது மார்க்ஸ்-எங்கெல்ஸ்

வாழ்நாளிலேயே பன்முறை வெளியிடப்பட்டது. "கூலி, விலை, லாபம்" சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் அதன் கொள்கைநிலைகளை உருப்படுத்தும் வகையில் மார்க்ஸ் ஆங்கிலத்தில் எழுதிய வாதச் சொற்பொழிவு ஆகும். இது மார்க்ஸ்-எங்கெல்ஸ் இறப்புக்குப் பின்னர் 1898ஆம் ஆண்டில்தான் வெளிவந்தது. இவ்விரண்டு சிறுநூல்களையும் இதுவரை காலமும் பொதுவுடைமை இயக்கங்கள் வெகுமக்கள் பிரசுரமாய் வெளியிட்டு வருகின்றன.

இவ்விரண்டு பிரசுரங்களின் பேசுபொருளும் ஒன்றுதான். ஆயினும் இருவேறு சந்தர்ப்பங்களில், இருவேறு வகையாய் எழுதப்பட்டுள்ளன. ஆனால் தமிழில் இப்பிரசுரங்களை ஒன்றெனக் கருதும் மனப்போக்கு நிலவுகின்றதோ என்ற ஐயம் பின்வரும் குறிப்புகளால் தோன்றுகிறது. "மார்க்ஸ், சாதாரண தொழிலாளர்களின் புரிதலுக்காக 1849ல் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. 165 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதுதான் என்றாலும் இன்றைக்கும் படிக்கும் எவருக்கும் புதிய தெளிவைத் தரும் ஒரு செம்பனுவல்" என்று இப்போது இந்நூலை வெளியிட்டுள்ள இடது சாரிப் பதிப்பகத்தின் நூல் பற்றிய இணையதளக் குறிப்பு கூறுகின்றது. மார்செல்லோ முஸ்ட்டோ எழுதிய "சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் வரலாறும் மரபும்" நூலின் தமிழ் மொழியாக்கத்தில் 'மதிப்பு, விலை, இலாபம்' என்ற சொற்பொழிவைப் பற்றி மொழி பெயர்ப்பாளர் எழுதிய அடிக்குறிப்பு, "இது பின்னர் எங்கெல்ஸால் திருத்தங்கள் செய்யப்பட்டு அவரது அறிமுகவுரையுடன், 'கூலி, விலை, இலாபம்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டது" என்பதாகும் (2015: 33). இவ்விரண்டு குறிப்புகளும் "கூலியுழைப்பும் மூலதனமும்" நூலைப் பற்றியதே. ஆனால் "கூலி, விலை, லாபம்" நூலுக்கு எழுதப்பட்டுள்ளன. இதனால் இவ்விரண்டு நூல்களையும் ஒன்றெனக் கருதும் மனப்போக்கு உள்ளது வெளிப்படுகின்றது.

எவ்வாறாயினும், மார்க்சின் "கூலி, விலை, லாபம்" சிறுநூல் மிக முக்கியமான நூல்; தமிழில் பன்முறை திரும்பத் திரும்ப வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் கதை சர்தேசத் தொழிலாளர் சங்கத்தின் தோற்றத்தி லிருந்து தொடங்குகிறது.

### சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தோற்றம்

நவீன பொதுவுடைமை இயக்க வரலாற்றில், கம்யூனிஸ்டு கழகமும் சர்வதேசத் தொழிலாளர் சங்கமும் மார்க்ஸ்-எங்கெல்ஸ் எழுத்துப் பணிகளோடு பின்னிப் பிணைந்தவை. சர்வதேசத் தொழிலாளர் சங்கம் சுருக்கமாக முதலாம் "அகிலம்" என்று தமிழில் அழைக்கப்படுகின்றது. சர்வதேசத் தொழிலாளர் சங்கம், 1864 செப்டம்பர் 28-ல் லண்டன் செயிண்ட் மார்ட்டின் அரங்கத்தில் நடந்த கூட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

1850களுக்குப் பின்னான பத்தாண்டுகள் அமைதிக்குப் பின், 1860களில் மீண்டும் தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டங்கள் எங்கும் எழத் தொடங்கின. அப்போது ஐரோப்பாக் கண்டத்து முதலாளிகள், தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டங் களை உடைப்பதற்கு அக்கம்பக்கத்து நாடுகளின் தொழிலாளர்களைப் பயன்படுத்தினர். இதை எப்படி யாவது தடுத்துவிட வேண்டும் என்ற முனைப்பு, தொழிற் சங்க நடவடிக்கை பெருமளவுக்கு வெற்றிகரமாக மேற் கொண்ட இங்கிலாந்து தொழிற்சங்கத் தலைவர்களிடம் 1863ஆம் ஆண்டு வாக்கில் முளைவிட்டது. அதுமுதல் அவர்கள் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும் தமது நலன்களை முன்னிறுத்தி, ஒத்த முடிவு மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்கு அனைத்து தொழிலாளர்களிடையே முறையான தகவல் தொடர்பு இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தனர். இதற்காக இங்கிலாந்து தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டிய கூட்டமே, 1864 செப்டம்பர் 28ஆம் தேதி நடந்த கூட்டம் ஆகும். அக்காலத்தில் ஒருசில தொழிலாளர் தலைவர்களால், தொழிலாளர்களின் நலன் விரும்பியாகவும் அசாதாரண அறிவாளியாகவும் மார்க்ஸ் கருதப்பட்டார். அத் தொழிலாளர் தலைவர்களின் அழைப்பின் பேரில், அக்கூட்டத்தில் சாதாரணமாகக் கலந்துகொண்டார் மார்க்ஸ். இக்கூட்டத்தில் சங்கத்தைத் தோற்றுவித்தனர். அதை வளர்த்தெடுப்பதற்கு 34 பேர் கொண்ட ஒரு நிலைக்குழுவைத் தேர்ந்தெடுத்தனர். அந்த 34 பேர்களில் ஒருவர் மார்க்ஸ்.

பொதுவாக, சோவியத் வரலாற்று ஆசிரியர்கள், சங்கத்தைத் தோற்றுவித்து தலைமை வகித்தவர் மார்க்ஸ் என வருணிக்கின்றனர். ஆனால் மார்செல்லோ முஸ்ட்டோ முதலான பல மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள், அகிலத்தை மார்க்ஸ் தோற்றுவிக்கவில்லை என்றாலும், அதை உருப்படுத்தி, வழிநடத்திச் சென்றவர் என்று வாதிடுகின்றனர். இது உண்மையே என்பதை மார்க்ஸ்-எங்கெல்ஸ் அக்கால எழுத்துகளும் உணர்த்து கின்றன. இப்பணியில், 1870-ல் தனது தொழிற்சாலை நிர்வகிக்கும் பணியிலிருந்து திரும்பிய எங்கெல்சும் இணைந்துகொண்டார்.

### சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உருவாக்கமும் மார்க்சும்

இருபது ஆண்டுகளாக மேற்கொண்ட முதலாளியம் பற்றிய ஆராய்ச்சி வேலைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1863 முதல் 1867 வரையான ஆண்டுகளில்

மூலதனம் நூலை இறுதிப்படுத்துவதற்கும், முதல் தொகுதியை அச்சுக்கு அனுப்புவதற்கும், அச்சுத் தாள்களைத் திருத்துவதற்கும் நாள்தோறும் பலமணி நேரம் கடுமையாக உழைத்துவந்தார். அதனால் அவரது உடல்நலம் அடிக்கடி கெட்டுப் போனது. உடல்நலம் பெற, கட்டாயமாக ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. இதற்கிடையில் 1863ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி எங்கெல்சின் இணையர் மேரி பர்னெஸ் இயற்கை எய்தினார்; எங்கெல்ஸ் ஆறாத் துக்கங்கொண்டார். அதனால் மார்க்சும் மனஅளவில் சோர்வுற்றிருந்தார்.

வேலைப்பளுவாலும் உடல்-மன நலிவுகளாலும் சோர்வுற்றிருந்த இந்த நேரத்தில்தான், சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தைத் தொடங்குவதற்கான மேற்கண்ட அந்தக் கூட்டத்தில் மார்க்ஸ் கலந்துகொண்டார்; நிலைக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், ஏற்கனவே முதலாளிய சமூக அமைப்பின் புதிய நெருக்கடியை உணர்ந்த மார்க்ஸ் அக்காலத்தில் தொழிலாளர்களின் சர்வதேச அமைப்பு ஒன்று தேவை என்று எண்ணம்கொண்டிருந்தார். அந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சங்கத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் ஆர்வமுடன் பங்கேற்றார்; சங்கத்தின் கொள்கைகளை வரையறை செய்தார்; பல கோஷ்டகளை ஒத்திசைவுப்படுத்தி சங்கத்தை உருப் படுத்தினார்; நிலைக்குழு பொதுக் குழுவாக மாறிய போது, அதில் தலைமைப் பொறுப் பேற்று வழி நடத்தினார். சங்கத்தின் மிகப் பெரும்பாலான அறிக்கைகளை மார்கஸ்தான் எழுதினார்.

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் பல விதமான அரசியல் கோஷ்டிகள் இருந்தன. சங்கத்தை உருவாக்க முன்கையெடுத்த இங்கிலாந்து தொழிற்சங்கத் தலைவர்கள், கூலி உயர்வுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அப்பால் ஒரு அடிகூட முன்னெடுத்து வைக்க விரும்பாதவர்கள். சங்கத்தில் முதன்மையாகப் பங்கேற்ற புரூதோன் வழியைப் பின்பற்றிய பிரெஞ்சுக்காரர்களும், அவர்களுடன் உடன் பயணித்தவர்களும் கூலி உயர்வுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை; அரசு அமைப்பையே முற்றிலும் இல்லாமல் ஒழித்து, அந்த இடத்தில் மக்களின் கூட்டுறவுச் சங்கங்கள் இடம்பெற வைக்க வேண்டும் என்பதற்கான முயற்சியைத் தவிர வேறு எதனையும் மேற்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தி வந்தனர். மறுபுறத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் விருப்பமுடன் மேற்கொள்ளாமல், சீர்திருத்தங்கள் வகைப்பட்ட அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்திய அரசியல் நடவடிக்கைகளை நாட்டு எல்லைக்குள் மட்டுமே மேற்கொள்ள விரும்பிய லஸ்ஸால் வழியைப் பின்பற்றியவர்கள் இருந்தனர். அப்புறம் கொஞ்சம், ஒன்றுபட்ட இத்தாலியை உருவாக்க விரும்பிய, அரசுடைமையையே சோசலிசமாக வருணித்த மாஜினி வழிக்காரர்களும், அவ்வகைப்பட்ட தேசியவாதிகளும் சங்கத்தில் தமது சொந்த நலன்களின் பொருட்டு பங்கேற்றனர்.

இந்தக் கோஷ்டிகளில் ஒரு சிறுபகுதியினரே மார்க்சும், அவரைப் பின்பற்றியவர்களும். ஆனால் கோஷ்டிவாதப் பண்புகள் சிறிதுமில்லாமல், எல்லாக் கோஷ்டிகளையும் தமது மாபெரும் அறிவுத் திறத்தாலும் தலைமைப் பண்பாலும் ஒத்திசைவுப்படுத்தி மார்க்ஸ் வழிநடத்திச் சென்றார். பொதுவுடைமை இயக்கத்தில் பல்வேறு கோஷ்டிகளுள் ஒத்திசைவு ஏற்படுத்தி, இயக்கத்தை வழிநடத்திச் சென்ற ஒரு மாபெரும் மிகுதிறனுடைய அரசியல் தலைவர் மார்க்ஸ். அதை இக்கால அவர் வாழ்க்கை வரலாற்றைக் கற்பதன் மூலம் அறிய இயலும்.

மேற்கண்டவாறு, சங்கம் தொடக்கத்திலேயே எண்ணற்ற கோஷ்டிகளின் சண்டைக் களமாக விளங்கியது; எந்த விசயத்தைத் தொட்டாலும் பிளவுகளுக்கான ஆரம்பப் புள்ளியாக ஆகியது. ஆனால் கண்டத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஒருவரையொருவர் ஆதரித்து நிற்க வேண்டும் என்ற சங்கம் தொடங்கப்பட்டதற்கான நோக்கத்தால், எண்ணற்ற தொழிற்சங்கங்கள் அகிலத்துடன் இணையத் தொடங்கின. இந்த நோக்கமே அகிலம் தொடங்கி ஆறு மாதத்திற்குள் விவாதப் பொருளாக ஆனது.

### சர்வதேசச் சங்கத்தை உருப்படுத்திய சொற்பொழிவு

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுவில் 1865ஆம் ஆண்டும் ஏப்ரல் 4 ஆம் தேதி ஜான் வெஸ்டன் என்ற இங்கிலாந்து தொழிலாளி பின்வரும் வாதத்தை முன்வைத்தார். 'கூலி உயர்வுக்கான வேலை நிறுத்தப் போராட்டங்கள் பயனற்றவை; கூலி உயர்வு பொருட்களின் விலை உயர்வுக்கு இட்டுச் செல்கிறது; ஆகவே கூலி உயர்வால் தொழிலாளர் வாழ்க்கை நிலைமை உயராது; முதலாளிய போட்டி உற்பத்தி முறையைக் கூட்டுறவு உற்பத்தி முறையால் பதிலீடு செய்வதால் மட்டுமே கூலி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முடியும். அதனால் கூலி உயர்வுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கைவிட்டு, முதலாளிய உற்பத்தி முறையை மாற்றும் கூட்டுறவு இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்'. இந்த வாதம் புரூதோன் வழிக்காரர்கள், லஸ்ஸால் வழிக்காரர்கள் ஆகியோரின் ஆதரவையும் பெற்றது. ஜான் வெஸ்டன் இங்கிலாந்துடைய கூலி உயர்வுக்கு அப்பால் செல்ல விரும்பாத தொழிற்சங்கவாதத்தின் மீது கடுஞ்சினம் கொண்டிருந்தார் எனத் தோன்றுகிறது.


இந்த வாதத்திற்கு எதிராக, 1865ஆம் ஆண்டு ஜூன் 20, 27ஆம் தேதிகளில் அகிலத்தின் மையமான நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதற்கும் காப்பதற்கும், மார்க்ஸ் ஆங்கிலத்தில் வாதச் சொற்பொழிவைப் பொதுக் குழுவில் நிகழ்த்தினார். முதலில் ஜான் வெஸ்டனின் நியாயமான கடுஞ்சினத்தையும், அதை வெளிப்படுத்திய மனத்துணிவையும் மார்க்ஸ் பாராட்டினார். ஆனால் மதிப்பு, விலை, லாபம் பற்றிய வெஸ்டனுடைய தவறான கருத்துகளை மறுதலித்தார். ‘மூலதனம்’ பற்றிய தமது நீண்ட கால ஆராய்ச்சிகளின் விளைவாக வந்தடைந்த முடிவுகளை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்.

கூலி உயர்வால் பொருட்களின் விலை உயராது, முதலாளிகளின் லாபத்தின் ஒரு பகுதியே குறையும். ஏனென்றால், எல்லாப் பண்டங்களின் மதிப்பும் அதை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப்புச் சக்தி நேரத்தால் அளவிடப்படுகிறது. ஆனால் முதலாளி முழு உழைப்புச் சக்தி நேரத்திற்கும் உரிய மதிப்பை வழங்காமல் ஒரு பகுதி நேரத்தைத் தன்னுடையதாக ஆக்கிக் கொள்கிறார். இதுவே லாபம். அடிமைத் தனத்திலும், பண்ணையடிமைத்தனத்திலும் எஜமானர்களுக்கு உழைப்பது வெளிப்படையாகத் தெரிவது போல, கூலியடிமைத்தனத்தில் தெரிவதில்லை. தொழிலாளி தன் உழைப்புச் சக்தி ஒரு பண்டமாக முதலாளிக்கு விற்க இருக்கும் சுதந்திரத்தால், தொழிலாளி முழு நேரமும் தனக்காகவே உழைக்கின்றார் என்ற மாயத் தோற்றம் ஏற்படுகின்றது. உழைப்புச் சக்தி என்ற பண்டமும்கூட மற்ற பண்டங்களைப் போல, சமூக உழைப்புச் சக்தி நேரத்தால், அதாவது தொழிலாளி வர்க்கத்தின் சந்ததி பெருக்கத்திற்குத் தேவைப்படும் சமூக உழைப்பு நேரத்தாலும், வாழ்க்கைச் சாதனங்கள் உற்பத்திச் செய்வதற்கான சமூக உழைப்புச் சக்தி நேரத்தாலும் அளவிடப்படுகின்றது. வாங்குவோன், விற்போன் என்ற நிலையில் முதலாளி - தொழிலாளி இடையில் நடைபெறும் போராட்டம் சந்தை விதிகளால் இயக்கப்படுகின்றது. சந்தை விரிவுகள் தொழிலாளிகளைப் பெருக்குக்கின்றன; சந்தை நெருக்கடிகள் தொழிலாளர்களை அழிவுநிலைக்குத் தள்ளுகின்றன. ஆகவே கூலி உயர்வுப் போராட்டங்களை நடத்தி, அதில் கிடைக்கும் பலன்களைப் பயன்படுத்திக் கொண்டே, முதலாளியத் தனியுடைமை உற்பத்திமுறையை அழிப்பதற்கு, உழைக்கும் மக்களை ஆளும் நிலைக்கு உயர்த்தி, மக்கள்திரளின் கூட்டுடைமை உற்பத்திமுறையை இருப்புக்குக் கொண்டுவருவதே தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கான வழி என்பதை மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் எளிமையாகவும் மார்க்ஸ் எடுத்துரைத்தார். பல்வேறு கோஷ்டிகளில் இருந்தவர்கள் இந்த வாதத்தில் இருந்த நியாயத்தைப் புரிந்துகொண்டு மார்க்சுடைய கொள்கை முடிவுகளுக்கு இணங்கினர்.

இந்தச் சொற்பொழிவின் மூலம் சர்வதேசத் தொழிலாளர் சங்கப் பதாகையில் “நியாயமான வேலை நேரத்துக்கு நியாயமான கூலி” என்ற முழக்கத்துக்குப் பதிலாக “கூலி அமைப்பு முறை ஒழிக” என்ற முழக்கத்தைப் பதித்தார். இவ்வாறுதான் பல்வேறு கோஷ்டிகளையும் ஒத்திசைவுபடுத்தி, சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் வரலாற்றை மார்க்ஸ் உருப்படுத்தினார். சங்கத்தில் ஒவ்வொரு விவாதமும் மேற்கிளம்பியபோது, அவர்களைத் தன் தெளிவான கருத்துகளின் வாயிலாக வெற்றி கொண்டு, மார்க்ஸ் முன்னோக்கி வழிநடத்தினார்.

**எங்கெல்ஸ் கைக்கு அகப்படாதச் சொற்பொழிவு**

இந்த வாதச் சொற்பொழிவு பற்றி 1865ஆம் ஆண்டு மே 20ஆம் தேதி எங்கெல்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவருடன் விவாதிக்கின்றார். 1865 ஜூன் 24ஆம் தேதி எங்கெல்சுக்கு எழுதிய கடிதத்தில் ‘இச் சொற்பொழிவு இரண்டு பாரம் அளவு கொண்டது, தொழிலாளி வர்க்க இலட்சியத்தைத் தெளிவாக எடுத்துரைப்பதால், அகிலத்தின் தலைவர்கள் அச்சிட



விரும்புகிறார்கள்' என்று கூறியுள்ளார். ஆனால் இது மார்க்ஸ் காலத்தில் நூலாக வெளிவரவில்லை.

மார்க்ஸ் இறந்த பிறகு தமது நூல் வேலைகளை எல்லாம் எங்கெல்ஸ் ஒதுக்கி வைத்துவிட்டார்; மார்க்ஸ் விட்டுச் சென்ற மூலதனம் நூல் கையெழுத்துப் படிகளைப் புத்தகம் ஆக்குதலையும், பொதுவுடைமை இயக்கத்தின் தேவைகளுக்கேற்ப மார்க்ஸ் எழுத்துகளை மீள வெளியிடுதலையும், பல உலக மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுதலையும் எங்கெல்ஸ் தம் மீதமிருந்த வாழ்நாள் பணியாகக் கொண்டிருந்தார். ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சி பெரும் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த 1891ஆம் ஆண்டு வாக்கில் எங்கெல்ஸ், முதலாளியம் குறித்து தொழிலாளர் களுக்கான ஒரு பிரசுரம் கொண்டுவர எண்ணினார். அப்பிரசுரம் மூலதனம் நூலில் வெளிப்படுத்தியுள்ள மார்க்சின் தெளிவான ஆய்வுகளை உட்கொண்டிருக்க வேண்டும் என விரும்பினார். 1865ஆம் ஆண்டு அகிலத்தில் மார்க்ஸ் ஆற்றிய வாதச் சொற்பொழிவு இத்தன்மையானதே. ஆனால் வெளியிடப்படாத இச்சிறுநூலை எங்கெல்ஸ் வெளிக்கொண்டு வரவில்லை. மாறாக, 1849ஆம் ஆண்டு முதல் பன்முறை வெளியான "கூலியுழைப்பும் மூலதனமும்" நூலையே முழுமையாகத் திருத்தம் செய்து, 'மார்க்ஸ் இன்றிருந்தால் எப்படி எழுதியிருப்பாரோ, அப்படி கொண்டுவந்துள்ளதாக' கூறுகின்றார். 1891ஆம் ஆண்டில், 26 ஆண்டுகளுக்கு முன்பு மார்க்ஸ் எழுதிய 'மதிப்பு விலை லாபம்' கையெழுத்துப் படியை எங்கெல்சால் கண்டுபிடிக்க முடியவில்லை; அல்லது மறந்துவிட்டார் எனத் தோன்றுகிறது.

"1865 ஜூன் 20, செவ்வாய்க் கிழமை பொதுக் குழுவில் ஆற்றிய சொற்பொழிவு" என்ற வாசகத்துடன் தொடங்கும் ஆங்கில மொழியில் எழுதிய மார்க்சின் கையெழுத்துப் படியை, எங்கெல்ஸ் மறைவுக்குப் பின், மார்க்சுடைய கடைசி மகள் எலியனோர் கண்டெடுத்தார். இது 1898ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் ஆங்கில மொழியிலும் ஜெர்மன் மொழியிலும் வெளியிடப் பட்டது. கையெழுத்துப் படியில் நூலுக்குத் தலைப் பில்லை; 14 உட்பகுதிகளாக எண்ணிட்டுப் பிரிக்கப் பட்டு இருந்தது. அதில் முதல் ஆறு உட்பிரிவுகளுக்கும் தலைப்பில்லை. "மதிப்பு விலை லாபம்" என்று தலைப் பிட்டு, முதல் ஆறு உட்பிரிவுகளுக்கும் தலைப்பிட்டு, எலியனோரின் கணவர் எட்வார்த் எழுதிய சிறு அறிமுகக் குறிப்புடன் எலியனோர் இச்சிறுநூலை வெளிக்கொண்டுவந்தார். இச்சிறுநூலுக்கு ஜெர்மன் மொழிபெயர்ப்பாளர் "கூலி விலை லாபம்" என்று தலைப்பிட்டார். இந்த ஜெர்மன் மொழித் தலைப்பே சோவியத் பதிப்புகளிலும் இடம்பெற்றது. ஆயினும் MECW 20 தொகுதியில் எலியனோர் கொடுத்த தலைப்பே பொருத்தமாக உள்ளது என்பதால், அவர் பதிப்பித்த ஆங்கிலப் பதிப்பைப் பின்பற்றிப் பதிப்பித்துள்ளனர்.

### தமிழ் மொழியாக்கங்களும் நூல் வெளியீடுகளும்

"கூலி, விலை, லாபம்" என்ற தலைப்பில் 1956ஆம் ஆண்டில் இச்சிறுநூலை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டது. மொழிபெயர்ப்பாளர் தமிழகப் பொதுவுடைமை இயக்கத் தலைவர்களில் ஒருவரான என். சங்கரய்யா. இம்மொழியாக்கம் காணக் கிடைக்க வில்லை. தமிழில் சொந்தமாக மார்க்சிய நூல்களை மொழிபெயர்த்து வெளியிடும்போதே இச்சிறுநூலும் வெளிவந்துள்ளது என்பது கவனத்திற்குரியது. இச் சிறுநூலை இதே தலைப்பில் 1970ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை ஐந்து முறை தனிப்புத்தகமாக முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. மொழி பெயர்ப்பாளர் பெயர் குறிப்பிடப்படவில்லை. வெளியான ஆண்டு இல்லாமல் வெளிவந்த புத்தகத்தின் முகப்புப் பக்கத்தில் 'புரோகிரஸ் பதிப்பகம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 'அயல்மொழிப் பதிப்பகம்' என்ற பெயர் பயன்பாட்டிற்கும் 'முன்னேற்றப் பதிப்பகம்' என்ற பெயர் பயன்பாட்டிற்கும் இடையிலுள்ள காலத்தின் பெயர் பயன்பாடு ஆகும்; அனேகமாக 1960கள் இறுதிப் பகுதியிலும் 1970களின் ஆரம்பப் பகுதியிலும் பயன்படுத்தப்பட்டது.

இம்மொழியாக்கம் அப்படியே 1985ஆம் ஆண்டு வெளிவந்த மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் தொகுதி 5லும் இடம்பெற்றுள்ளது. இம்மொழியாக்கத்தில் 'சப்ளை' போன்ற சில பொருளாதாரக் கலைச்சொற்கள் அப்படியே ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. 'டிமாண்ட்' என்ற சொல்லுக்கு 'கிராக்கி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேறுசில மார்க்சிய நூல்களில் இச்சொற்களுக்கு 'வழங்கல்', 'வேண்டல்' என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படும் 'அளிப்பு', 'தேவை' என்ற சொற்கள் பொருத்தமானவை, இயல்பானவை எனத் தோன்றுகிறது. இப்போது ஒரு 'புதிய மொழி யாக்கம்' ஒன்றும் சந்தையில் கிடைக் கின்றது. அதில் பழைய மொழியாக்கமே 'திருத்த'ப்பட்டு, 'புதிய மொழி யாக்கம்' ஆகியுள்ளது.

### நூல் பரவலும் பல்வேறு மார்க்சியப் புரிதல் போக்குகளும்

இச்சிறுநூல் 1956 முதல் 1990 வரை தொடர்ச்சி யாகவும், அதற்குப் பின் இரு பத்தாண்டுகள் இடை வெளிக்குப் பின்னும் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்பட்டு வருகின்றது. இந்த வெளியீட்டு எண்ணிக்கையே இச்சிறுநூல் தமிழ் மார்க்சிய வாசிப்பில் மிகப் பெரிய அளவில் புழங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

சேலம் பழைய புத்தகக் கடை ஒன்றிலிருந்து 2005ஆம் ஆண்டு வாக்கில் வாங்கிய இப்புத்தகப் படியொன்றில், ‘சி. முருகேசன், தொழிலாளர் ஆசிரியர், தென்னக ரெயில்வே, சேலம் JN’ என்று முகப்புப் பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது. இதே வாசகம் அட்டையில் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து பின்வரும் சில எண்ணங்கள் தோன்று கின்றன. இப்புத்தகம் தொழிற்சங்க இயக்கத்தில்தான் அதிக அளவில் புழங்கியுள்ளது. கூலி உயர்வுப் போராட்டத்திற்கான வழிகாட்டியாகக் கருதியுள்ளனர். இச்சிறுநூலில் முதலாளிய உற்பத்தி முறையின் சுற்றோட்டத்தில் கூலி உயர்வுப் போராட்டம் தவிர்க்க இயலாமல் எழுகிறது; அது நியாயமானது; அவசிய மானது; அதன் மூலம் கிடைக்கும் வாழ்க்கை நிலைமை மேம்பாடுகளால் தொழிலாளி வர்க்கம் தமது விலங்கு வாழ்நிலையை, கூலி அடிமை வாழ்நிலையை உணர்ந்து முதலாளிய உற்பத்திமுறையை அழிப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று மார்க்ஸ் வாதிடுகின்றார். இந்தியச் சூழலில் பொதுவுடைமை இயக்கங்கள் சார்ந்த தொழிற்சங்க இயக்கமோ, இச்சிறுநூலில் மார்க்ஸ் முன்வைக்கும் வாதத்தின் இரண்டாம் பகுதியை, கூலி அடிமைமுறை ஒழிப்பைக் கவனத்தில் கொள்ளவில்லை; புரட்சி வாதமோ முன் பகுதியை, வர்க்க ஒற்றுமையை ஆக்கும் கூலி உயர்வுப் போராட்டக் களங்களைக் கவனத்தில் எடுக்கவில்லை. அதனால்தான் மார்க்சியச் சிந்திப்பு வரலாற்றில் மிக முக்கியமான இடம்கொண்ட இந்நூல் தொழிற்சங்கப் போராட்டத்திற்கான நியாயத்தை வழங்கும் கருவியாக மட்டும் சுருக்கி நோக்கப்பட்டது.

இச்சிறுநூலை ‘மூலதனம்’ என்ற பெருநூலுக்கான நுழைவாயில் என்று சொல்லலாம். தமிழ் மரபில் நின்று சொல்வதானால் ‘குட்டி மூலதனம்’ என்று சொல்லலாம். ஏனென்றால் ‘மூலதனம்’ நூலில் மேற்கொண்ட ஆய்வுகளை அவ்வளவு செறிவாகவும், இயக்க இயல் பாங்கோடும், ‘மதிப்பு விலை லாபம்’ என்ற வாதச் சொற் பொழிவாக எழுதியுள்ளார். மூலதனச் சுற்றோட்டம் மனித உணர்நிலைக்கு அப்பாற்பட்ட இயக்க ஒழுங்கு விதிமுறைகளை கொண்டது. எனினும் அச்சுற்றோட்டம் தோற்றுவிக்கும் முதலாளிகளுக்கு எதிரான தொழி லாளிகளின் போராட்டங்களும், அப்போராட்டங்களின் விளைவாகத் தோன்றும் தொழிலாளி ஒற்றுமை என்ற உணர்நிலையும், கூலி அடிமைத்தனத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் முயற்சி எல்லா அடிமைத்தன வடிவங்களையும் ஒழிப்பதற்கான போராட்டத்தோடு இணைந்தது என்ற புரிதலும், இப்புரிதலோடு பொது வுடைமை இயக்கத்தை வளர்த்துச் செல்வதற்கான வர்க்க முனைப்புகளும், மனிதமுயற்சிகளுமே வரலாற்றுப் போக்கை நகர்த்திச் செல்கின்றன என்று இச்சிறுநூலில் மார்க்ஸ் எடுத்துக்காட்டி இருப்பதைக் காணமுடியும். ஒரேவேளையில் இச்சிறுநூல் அப்படி வரலாற்றை நகர்த்திய, அதாவது சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தை முன்னகர்த்திய மனித முயற்சி ஒன்றின் வெளிப்பாடாகவும் விளங்குகிறது.

ஆனால் மார்க்சிய எழுத்துக்களை, அவற்றுக்குரிய வரலாற்றோடு ஆழமாகக் கற்காமல், மேலோட்டமாக மேற்கோள்கள் திரட்டுவதற்கான ஒரு மார்க்சிய வாசிப்பும் உள்ளது. மார்க்சியத் தத்துவம் சமூக விதிகளைக் கண்டு சொல்லியுள்ளது என்றும், விதிகளை வரிசைப்படுத்தி எடுத்துக் கூறி, இச் சமூகவிதிகளை பொருளாதார விதிகளே தீர்மானிக்கின்றன என்று வாதிட்டுக் கொண்டு, பருண்மையான சூழல்கள் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல், மார்க்சியத்தை வெறும் வாய்ப்பாடுகளாகச் சுருக்குகின்ற போக்கினரும்கூட தமிழ்ச் சூழலில் உண்டு. அவர்கள் மார்க்சிய எழுத்துகள் அனைத்தும் வரலாற்றில் உணர் நிலையோடு வினை புரிந்தவை, வரலாற்றில் மனித ஊடு செயல்களின் விளைபொருள் என்பதையே மறந்து விடுகின்றனர். இந்தப் போக்கிலான வாசிப்பு முறையாலும் கூட, இச் சிறுநூலின் முக்கியத்துவத்தை இதுவரை காலமும் கவனத்தில் கொள்ளப்படவில்லை; எடுத்துக் கூறப்பட வில்லை. இச்சிறுநூலை, அதன் வரலாற்றோடு இணைத்து ஆழமாகக் கற்பது இவ்வாறான புரிதல் மாற வழி சமைக்கும்; மார்க்சியத்தை ஆழமாகப் புரிந்து கொள்ள வழிவகுக்கும். ‘மக்கள் வரலாற்றைப் படை கின்றார்கள்’ என்று லெனினும் மாவோவும் வலி யுறுத்தியது ஏதோ மேலோட்டமான வாசகம் அல்ல. அது மார்க்சியத்தின் உயிர்நாடி. ●

## அறிவிப்பு

2018 ஜனவரியிலிருந்து ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’ இதழ்
ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்திற்குள்
வாசகர்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆகவே கட்டுரையாளர்கள் தங்களது படைப்புகளை
20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

– பொறுப்பாசிரியர்

# புதிய ஆராய்ச்சி

## இதழ் 8 (ஜூலை - டிசம்பர் 2017)




**தற்போது விற்பனையில்...**

நா.வா. நூற்றாண்டு சிறப்பிதழாக...

**விலை: ₹ 200/-**

**நா.வானமாமலையின் மாணவர்கள் நடத்தும்**
**தமிழின் மிகச் சிறந்த ஆய்விதழ்**

**'புதிய ஆராய்ச்சி'**

**எ.சுப்பராயலு, பெ.மாதையன், ர.பூங்குன்றன், எஸ்.தோதாத்ரி, செந்தீ நடராசன், ந.முத்துமோகன், வீ.அரசு, ந.அதியமான், ஞா.ஸ்டீபன், சி.மகேசுவரன், மு.அறிவழகன், மா.பரமசிவன், கோ.சசிகலா, இராஜேஷ் வெங்கடசுப்பிரமணியன்**
ஆகியோரின் பங்களிப்புடன்...

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**என்.சி.பி.எச். கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990, 4210990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் 'பாரதி விழா'




மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் ஈரோடு நகரில் ஆண்டுதோறும் பாரதி பிறந்தநாளாகிய டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி மாநிலம் தழுவிய முறையில் 'பாரதி விழா' நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் 'பாரதி விழா' 11.12.2017 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஈரோடு - கொங்கு கலையரங்கில் நடைபெற்றது. பேரவை நடத்துகிற பாரதி விழாவில் ஆண்டுதோறும் மூன்று முக்கிய அம்சங்கள் இடம் பெறுகின்றன:

1) பாரதி 1921 ஆம் ஆண்டு இறுதியாக உரை நிகழ்த்திய ஈரோடு - கருங்கல்பாளையம் நூலகத்திலிருந்து பாரதி விழா நடைபெறும் அரங்கம் வரை, பாரதியின் ஈரோடு வருகையை நினைவுகூரும் பொருட்டும் அவ்வருகையின் போது அவர் நிகழ்த்திய 'மனிதருக்கு மரணமில்லை, 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற தலைப்புகளிலான இறுதிப் பேருரைகளை நினைவுகூரும் விதத்திலும் 'பாரதி ஜோதி' ஏந்திய வண்ணம் பேரவையின் தன்னார்வலர்களாக விளங்கும் 100க்கும் மேறப்ட்ட கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் அணிவகுப்பு...

2) தமிழகத்தின் தலைசிறந்த ஆளுமை ஒருவருக்கு ''பாரதி விருது' வழங்குதல்...

3) காலமாகிவிட்ட நாட்டுக்குழைத்த நல்லோர் ஒருவரின் திருவுருவப்படத் திறப்பு...

மாலை 4.30 மணிக்கு 'பாரதி ஜோதி' கருங்கல்பாளையம் நூலகத்தில் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர் வி. ஜீவகுமாரன் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. இவரின் உரைக்குப் பின்பு அணிவகுப்பு தொடங்கியது. இந்த ஆண்டின் 'பாரதி விருது' தமிழறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர், கல்வியாளர் - சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் பொற்கோ அவர்களால் விழா மேடையில் வழங்கப்பட்டது.

கவிஞர் தமிழ்ஒளியின் திருவுருவப்படத்தை பொதுவுடைமை இயக்கத் தலைவர் திரு. ஆர்.நல்லகண்ணு அவர்கள் திறந்து வைத்தார். முன்னதாக மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் விழா அறிமுகவுரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிக்கு தேசிய நலவிழிப்புணர்வு இயக்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ எஸ்.கே.எம். மயிலானந்தன் அவர்கள் தலைமையேற்றார்.பேரவையின் செயலாளர் ந. அன்பரசு வரவேற்புரையாற்றினார். நிறைவாக பொருளாளர் க. அழகன் நன்றியுரையாற்றினார்.

சிறப்பு விருந்தினர்களின் உரைகள், எழுச்சியுடன் பங்கேற்ற பார்வையாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாக அமைந்தது. மிகச்சரியாக மாலை 6 மணிக்குத் தொடங்கிய கூட்டம், முன் கூட்டியே அறிவித்திருந்தவாறு இரவு 8.30 மணிக்கு நிறைவு பெற்றது.

விழா அரங்கில், பேரவையின் சார்பில் 'பாரதி விழா சிறப்பு நூலரங்கம்' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவிஞர் தமிழ்ஒளி, சிலம்பொலி சு. செல்லப்பன், பொற்கோ, ஆர். நல்லகண்ணு ஆகியோரின் நூல்களோடு மொழி, இலக்கியம், கவிதை மற்றும் தமிழாய்வு சார்ந்த ஏராளமான நூல்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.



20-12-2017 அன்று நாகர்கோவில் வருவாய்த் துறை அலுவலகச் சங்கக் கட்டடத்தில் என்.பி.டி. மற்றும் என்சிபிஎச் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை எழுத்தாளர் பொன்னீலன் திறந்து வைத்தார். அ.கா.பெருமாள். செந்தீ நடராசன், சி.சொக்கலிங்கம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.இசக்கிமுத்து, ஆய்வாளர் மார்ட்டின் மற்றும் திருநெல்வேலி என்.சி.பி.எச். மேலாளர் கு.பாலசுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# இறையன்பு என்ற பன்முக ஆளுமை

ரவிசுப்பிரமணியன்



**தொ**ன்னூறுகளின் துவக்கத்தில் இறையன்பு அவர்களை நேரில் அறியாமலேயே அவரது முதல் கவிதைத் தொகுதி மூலம் நான் அவரை அறிந்திருந்தேன். அப்போது நான் கும்பகோணத்தில் இருந்தேன். அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு ஒரு கடிதத்தோடு என் முதல் கவிதைப் புத்தகத்தை அவருக்கு அனுப்பினேன்.

பதிலாக அவர் 'பூபாளத்துக்கொரு புல்லாங்குழல்' என்ற அவரது கவிதைத் தொகுதியை எனக்கு அனுப்பி வைத்தார். அப்போது துவங்கிய நட்பு, அதன் பின் அவர் சென்னைக்கு பணிக்கு வந்தபோது அவரை நேரில் சந்தித்தேன். கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கும் மேலான இழை அறாத நட்பு.

பல பதவிகளைப் பல பெருமைகளை அடைந்திருக்கும் இறையன்பு அவர்கள் ஒரு அப்பழுக்கற்ற நேர்மையான அரசு அதிகாரி. என் வாழ்வில் எத்தனையோ உயர் அதிகாரிகளிடம் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய இவரைப் போன்ற சிலரை வெகு அபூர்வமாகத்தான் கண்டிருக்கிறேன். பொதுவாக நான் யாரையும் அதீதமாகப் புகழ்வதில்லை. ஆனாலும் இவர் விஷயத்தில் உண்மையைச் சொல்லும்போது உங்களுக்கு அப்படி தோன்றலாம்.

இவரைச் சந்திக்கும் போதெல்லாம் நான் வியப்பது அவரது படிப்பு. இவ்வளவு வேலைப் பளுவுடன் இருக்கும் இவர் எந்த நேரத்தில் இவ்வளவு படிக்கிறார் என்ற கேள்வி எனக்குள் எழும். ஒவ்வொரு முறையும் அவரைச் சந்தித்து திரும்பும்போதும் ஒரு நூலகம் சென்று சில நூல்களை படித்த உணர்வு எனக்கு ஏற்படுவதுண்டு. உலகளாவிய அளவில் வந்துள்ள சிறந்த புத்தகங்களை எல்லாம் இவர் தேடித்தேடி வாங்கி வாசித்தபடி இருப்பார். அந்த அளவு படித்ததையும் நண்பர்களிடம் பகிர்ந்துகொள்வார். அதே சமயம் படித்ததை எல்லாம் கொட்டாமல் வந்திருப்பவரின் விருப்பமும் தேவையும் அறிந்து அவற்றைப் பகிர்ந்துகொள்வார். அதுதான் அதில் சிறப்பு. வாழ்க்கைக்கும் வார்த்தைக்கும் இடைவெளி இல்லாத மனிதர்களில் இறையன்புவும் ஒருவர். தன் எழுத்துக்களில் அவர் என்ன சொன்னாரோ அதைத்தான் வாழ்கிறார். என்ன வாழ்கிறாரோ அதைத்தான் தன் எழுத்துக்களில் சொல்கிறார்.

"மேன்மையான மனிதர்களையும், கம்பீரமான சூழலையும் சுயநலமற்ற கடும் உழைப்பாளிகளையும் படைத்துக் காட்டுவதும்; அவற்றை வாசிப்பவர்கள் மனதில் தாங்களும் அதைப்போல் ஓரளவேனும் மாற வேண்டும் என்கிற உத்வேகத்தை ஏற்படுத்துவதும்; சமூகத்தில் இன்னும் கறைபடாமல் இயங்கிக் கொண்டிருக்கின்ற மகத்துவம் பெற்ற கண்ணியவான்களைக் குறியீடுகளாக்கி, அவற்றின் மூலம் வாழ்வில் நம்பிக்கை ஏற்படச் செய்வதும்; ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் இருக்கின்ற அழுக்குகளை அகற்றிவிட்டு லட்சியத்தை உருவாக்கிக்கொண்டு தீவிரமாக நடைபோட வைப்பதும்; ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் தெய்வீக உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்வதும்தான் என்னுடைய இலக்கியப் பயணத்தின் நோக்கம்." என்று தன் எழுத்தின் நோக்கம் பற்றி பிரகடனம் செய்துள்ள அவர் அதற்குத் தக்கவே வாழ்கிறார் என்பதைக் கண்கூடாகக் காண்கிறேன். ஆனால் எழுத்தாளர்கள் இப்படி பிரகடனம் செய்து விட்டு எழுதிவிட முடியுமா என்றொரு கேள்வியும் எனக்கு உண்டு. அப்படி எழுதும் எழுத்துக்கள் போதனைத் தன்மை மிகுந்ததாயும் பிரச்சார நெடி உள்ளதாகவும் அமைய வாய்ப்புக்கள் அதிகம். படைப்பிலக்கியத்துக்கு அது பொருந்துமா என்ற சந்தேகம் எனக்குண்டு. எழுத்தாளர் ஜெயகாந்தனிடம் பேசும்போது "நீங்கள் எழுதியுள்ளதில் சில பிரச்சாரத்தன்மை உடையதாகவும் மேடைப்பேச்சின் தொனியுள்ளதாகவும் உள்ளதே" என்று கேட்டேன். அதற்கு அவர் இப்படி பதில் சொன்னார். "பிரச்சாரம் இல்லாத இலக்கியமே கிடையாது. பிரச்சாரங்களும் இலக்கியமாவதுண்டு. இலக்கியங்களும் பிரச்சாரமாவதுண்டு. முன்னது சிறப்பு பின்னது வீழ்ச்சி. ஏசுநாதரும் ராமகிருஷ்ண பரமஹம்சரும் உபநிஷத்துக் கதையைச் சொன்னவர்களும் தங்கள் பிரச்சாரத்தையே இலக்கியமாக்கியத்தை நம்மால் பார்க்கமுடிகிறது. ஆழ்ந்த ஞானம் என்பது இலக்கியத்துக்கு புறம்பானதல்ல. இசை மேதை பீதோவானும் தியாகய்யரும்கூட பிரச்சாரம் செய்தார்கள் என்பது அடைப்படை உண்மைதான். எனினும் அந்த அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் எழுப்பிய கலைமாளிகைகள் மகத்தானவை. ஆனால் இந்தக் கேள்வி ஏன் வருகிறது. கலைஞன் அல்லாதவன் பிரச்சாரம் செய்வதனால் வருகிறது. அந்தப் பிரச்சாரத்தையே அவர்கள் கலை என்று வற்புறுத்துவதால் வருகிறது" என்றார். "நீங்கள் சொல்வது ஒரு பகுதி சரி. ஆனால் இதை முழுமையாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே ஜே.கே." என்றேன். "எல்லாரும் எல்லாத்தையும் ஏத்துக்கணும்ன்னு அவசியம் ஏதுமில்லை" என்றார்.

எவ்வளவோ சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் இவரது அடக்கம் வியக்கத்தக்கது. நாம் பின்பற்ற வேண்டியது. அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். கவிஞர் முத்துலிங்கத்தின் மகள் திருமண வரவேற்பில் கலந்துகொள்ள இவர் வருகிறார். மணமக்களைக் காண எல்லோரும் வரிசையில் காத்திருக்கிறோம். சிலர் குறுக்கு வழியாக வந்து வேகமாக மணமக்களைப் பார்த்துச் செல்கின்றனர். தான் ஒரு ஒரு ஐ.ஏ.எஸ்., அதிகாரி என்ற தன்முனைப்பு சிறிதும் இன்றி இவர் நீண்ட வரிசையில் கடைசி நபராக காத்திருக்கிறார். இவர் நிற்பதைக் கண்டு சிலர் வழி விடுகின்றனர். அவரோ வேண்டாம் என்று கையசைத்து அப்படியே வரிசையில் நின்று வருகிறார். இலக்கிய கூட்டங்களில் கலந்துகொள்ள வரும்போதுகூட கடைசியில் ஓரமாய் தனியாளாய் நின்றுகொண்டு கூட்டத்தை கவனிப்பார். எங்கும் எதிலும் தன்னை துருத்திக்கொண்டு முன்

நிறுத்திக்கொள்ளும் பழக்கத்தை நான் இவரிடம் கண்டதில்லை.

இவர் அலுவலகத்துக்கு யார் போனாலும் எப்படி முதலில் தேநீரோ, காப்பியோ கொடுத்து உபசரிக் கிறாரோ அப்படி அவர்கள் விடைபெறும்போது இன் முகத்தோடு கைகுலுக்கி வாசல்கதவுவரை வந்து நின்று வழி அனுப்புவார். இந்தப் பழக்கத்தை நான் எழுத்தாளர் எம்.வி.வி. அவர்களிடம் கண்டிருக்கிறேன். அவர் வாசல் வரை வந்து நின்று வழியனுப்புவதோடு தெருவோரம் அவர்கள் உருவம் மறையும்வரை நின்று பார்த்துக் கொண்டேயிருப்பார். சில சமயம் ஒரே நாளில் இரண்டு மூன்று முறை நான் அவர் வீட்டுக்கு செல்ல நேர்ந்த துண்டு. ஒவ்வொரு முறையும் சலிக்காமல் அதைச் செய்வார். அத்தகைய பண்பை நான் அவருக்குப் பிறகு இறையன்பு அவர்களிடம்தான் கண்டேன். கரிச்சான் குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம், தேனுகா, தஞ்சை பிரகாஷ், கவிஞர் மீரா, வண்ணதாசன், வண்ணநிலவன், கலா ப்ரியா, சுந்தர ராமசாமி போன்ற பல எழுத்தாளர்களிடம் நான் கண்டது பழகுதலில் எளிமை. இவர்கள் யாரும் ஒரு உயரத்தில் அமர்ந்துகொண்டு கீழ் நோக்கிப் பார்த்துப் பிறரிடம் பேசியதில்லை. அத்தகு எளிமையும் இனிமையும் இறையன்புவோடு பழகும்போதும் எனக்கு ஏற்பட்டதுண்டு.

இவர் படைப்புகளில் என்னை வெகுவாக கவர்ந்தது இவர் எழுதிய "ஆத்தங்கரையோரம்" என்ற நாவல்தான். நர்மதை ஆற்றின் கரையோர மக்களை 1988ல் இவர் சந்திக்கிறார். ஓர் ஆய்வுக்காக அங்கு சென்ற இவர் நர்மதை ஆற்றங்கரையில் வாழ்ந்த பழங்குடி இனமக்கள் நர்மதை அணை கட்டுவதன் பொருட்டு அப்புறப்படுத்தப்பட்ட காட்சிகளை நேரில் கண்டு மனம் வெதும்பி கண்கலங்குகிறார். அக்ரானி, அக்கல்குவா, செந்தூர் ஆகிய கிராம மக்களோடு தங்கி அவர்கள் தரும் உணவையும் உண்கிறார். அந்தப் பகுதி மக்களோடு பழகி அவர்கள் துயரங்களைக் கண்ட இவர் அதை அருமையான நாவலாக எழுதியுள்ளார். அந்தக் காலத்தில் கோயில் கட்டுவதற்குக்கூடக் கர்ப்பிணிப் பெண்களையே பலியிட்டதாக வரலாறு கூறுகிறது. அணை கட்டுவதற்கும் அதே மனித பலி நிகழ்கிறது. மனிதர்கள் மனிதன்மை உடையவர்களாக இல்லை. அரசு அதிகாரிகள் பலர் இரக்கமற்றவர்களாக இருக்கிறார்கள் என்றெல்லாம் நாவல் பல செய்திகளை இலக்கிய நறுமணத்தோடும் சக மனிதர்கள் மேல் கொண்ட அன்போடும் விவரிக்கிறது. அந்த நாவலை இதுவரை நீங்கள் படிக்காமல் இருந்தால் ஒரு முறை வாசிக்க வேண்டும். அணை கட்ட ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களிலேயே பல கிராமங்கள் நீரில் மூழ்குகின்றன. அந்தக் கிராம மக்களுக்கு ஆதரவாக அரசாங்கத்தின் பரிவோ, எதிர்க்கட்சிகளின் அனுதாபமோ எதுவும் நிகழவில்லை. அரசு அதிகாரியாக இவர் இருந்தும் துணிச்சலாகப் பலவற்றை அதில் எழுதிக்காட்டியுள்ளார். இந்த நாவலுக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன் சிறப்பான தொரு அணிந்துரை எழுதியுள்ளார். இதைவிட வேறென்ன வேண்டும் அந்த நாவலின் சிறப்பைச் சொல்வதற்கு. அந்த நாவலின் பாத்திரங்களின் மேன்மைகளைப் பற்றி அதில் ஜெயகாந்தன் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

கேள்வியும் நானே பதிலும் நானே என்ற இவரது புத்தகத்தில் "எது நல்ல படைப்பு" என்ற கேள்விக்கு இவர் ஒரு பதில் அளித்துள்ளார். "வாசித்து முடித்ததும் இதயத்தைவிட்டு நீங்காமலிருப்பது. நம் வாழ்வில் மேன்மையைச் சேர்ப்பது. நம்மிடம் இருக்கும் கருணை, அன்பு, கம்பீரம், நேர்மை, பெருந்தன்மை, உற்சாகம், உழைப்பு போன்றவற்றை ஒரு அங்குலமாவது உயர்த்து வதே நல்ல படைப்பு." இந்தப் பதிலை நான் இவரது ஆத்தங்கரையோரம் நாவலோடு பொருத்திப் பார்த்துக் கொள்கிறேன். இவரின் இந்த கூற்றே அந்த நாவலுக்கு கச்சிதமாகப் பொருந்திப் போகிறது. இதயம் பேசுகிறது இதழில் தொடராக வந்து அதன் பின் நாவலாக உருப் பெற்ற இந்த நாவல் இப்போது நாம் அதிகம் பேசுகிற சுற்றுச்சூழல் பற்றிய கருத்தாக்கங்களை அப்போதே முன் வைத்துள்ளது. பழங்குடியினரின் வாழ்க்கை முறைகளை விவரிக்கும் இந்த நாவலுக்கு திருப்பூர் தமிழ்ச் சங்க விருது கிடைத்துள்ளது. ஆனால் இந்த ஒரு நாவலுக்காகவே இறையன்பு அவர்களுக்கு சாகித்ய அகாடமி பரிசு தரப்பட்டிருக்க வேண்டும் என்பது என் தாழ்மையான அபிப்ராயம்.

தகுதி வாய்ந்த பல மனிதர்களுக்கு இவர் உதவி செய்ததை நான் நேரிடையாக அறிவேன். என் வழி யாகவும் சிலருக்குச் சில உதவிகள் கிடைத்திருக்கின்றன. எழுத்தாளர்கள் பலருக்கும் நேரிடையாகவும் மறைமுக மாகவும் அவர் உதவி செய்துவந்துள்ளார். இன்றும் செய்து கொண்டுமிருக்கிறார். ஆனால் உதவி பெற்ற பிறகு அவர்கள் நடந்துகொள்ளும்விதம் வினோத மாகவும் சில சமயம் வலி மிகுந்ததாகவும் இருக்கும். ஆனால் இவர் அதையெல்லாம் ஒரு போதும் பொருட் படுத்தியதில்லை. உதவி செய்த பின் அதை மறந்துவிட வேண்டும் என்பதுதான் அவரின் மேன்மையான கொள்கை. மனம் பொறுக்காமல் ஒரு முறை நான் இவரிடம் இது பற்றிக் கேட்டேன். 'என்ன சார் இப்படி நடந்து கொள்கிறார்களே' என்று. 'விடுங்க பாஸ் என்ன தான் படைப்பாளியாக இருந்தாலும் அவர்களும் மனிதர்கள் தானே சாதாரண மனிதர்களுக்கு உரிய குணம் அவர்களிடமும் இருக்கும் தானே அதை விடுங்கள். வேற பேசலாம்' என்று பெருந்தன்மையாக உரையாடலை வேறுபக்கம் திருப்பிவிடுவார்.

"நிர்வாகத்திற்கும் இலக்கியத்திற்கும் பொதுவாகத் தேவைப்படுவது ஈர இதயம்" என்று சொல்லும் இவரிடம் நான் பார்ப்பது. கனிவு. பிறரின் குரலுக்கு பொறுமை யாய் செவி சாய்க்கும் தன்மை. இது இலக்கியங்கள் அவருக்கு கொடுத்த கொடை என்றே எண்ணுகிறேன். இந்தக் கனிவோடுதான் இவர் ஏராளமான கட்டுரை களையும் எழுதிவருகிறார். இவரது கட்டுரைகள் மாணவ சமுதாயத்துக்கு இளம் தலைமுறைக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த கட்டுரைகளில் எளிமை, நேர்மை, நேரில் பேசுவது போன்ற தன்மை, உண்மை போன்றவை துலங்கி நிற்கும். பாசம் மிகுந்த தம்பியின் உயர்வில் மகிழும் கரிசனம் நிறைந்த அண்ணனின் குரலோடு அந்தக் கட்டுரைகளில் சில இருப்பதை நான் வாசித்திருக்கிறேன். ஒரு இளைஞன் தன் பாதையைச் சரியாக அமைத்துக்கொள்ள உத்வேகப் படுத்தும் கட்டுரைகள் அவை. அதில் வரலாறு இருக்கும், வாழ்க்கை சம்பவங்கள் இருக்கும், மேற்கோள்கள் இருக்கும், படிப்பினை இருக்கும், படிப்பவன் தன்னை நோக்கியே சில கேள்விகளை எழுப்பித் தன்னை பரிசோதித்துக்கொள்ள வைக்கும் உத்தி இருக்கும், இப்படி அவர் கட்டுரைகளின் மேன்மைகளைச் சொல்லிக்கொண்டே செல்லலாம். ஆனால் அந்த கட்டுரைகளை எழுத அவர் படும் பாடு சொல்லி மாளாது. ஐந்து நிமிடப் பேச்சாக இருந்தாலும் சரி இரண்டு பக்கக் கட்டுரையாக இருந்தாலும் சரி அதற்காக அவர் எடுக்கும் குறிப்புகள், படிக்கும் புத்தகங்கள், கிடைத்த தகவலின் உண்மைத் தன்மையை சரிபார்க்க அவர் எடுத்துக்கொள்ளும் சிரத்தை இவை எல்லாம் என்னை வியக்க வைத்துள்ளன. ஏனோ தானோ என்று அவர் எதையும் செய்துவிடமாட்டார். அரசு வேலையாக இருந்தாலும் சரி இலக்கியப் பணியாக இருந்தாலும் சரி எதைச் செய்தாலும் அதை அலட்சியமாக செய்ய மாட்டார். நூறு விழுக்காடு கவனக்குவிப்புடன் செய்வார். அதில் ஒரு அக்கடமிக் டிசிப்ளின் துலங்கு வதை நான் கண்டிருக்கிறேன். அதனால் தான் அவரது கட்டுரை நூல்கள் இன்றும் மாணவர்களால் விரும்பி வாசிக்கப்படுகின்றன. இவரது சில கட்டுரை நூல்களை மாணவர்கள் பைபிள் போல தங்கள் கையில் வைத்திருப் பதைப் பார்த்திருக்கிறேன்.

இவரது கேள்வி பதில் புத்தகத்தை படித்தபோது அதில் இவரது அக உலகம் புலப்பட்டது. ஆன்மிகம் தத்துவம், அறிவியல், இலக்கியம் எனப் பல துறைகளில் விரிந்து பரந்திருக்கும் அவரது ஞானம் அதில் தெரிந்தது. என்னைக் கவர்ந்த சில கேள்வி பதில்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். "கடவுளைக் கும்பிட கோவிலுக்குத்தான் செல்ல வேண்டுமா?" என்றொரு கேள்வி. "நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சன நீர்" என்று தாயுமானவர் பாடவில்லையா" என்று பதில் கேள்வி கேட்கிறார். எவ்வளவு அர்த்த புஷ்டியான பதில்.

"எல்லோருடைய வாழ்க்கைக்கும் ஒரு பொருள் இருக்க வேண்டும், உங்கள் வாழ்க்கையின் நோக்கம்" என்றொரு கேள்வி. "இந்தியாவின் இளைஞர்களை இணையற்றவர்களாக மாற்றிக்காட்டும் நம்பிக்கைப் பாலத்தில் ஒரு சின்ன கல்லையாவது என் பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் எண்ணத்தாலும் எடுத்து வைக்க வேண்டுமென்பதே என் வாழக்கையின் நோக்கம்" என்கிறார். இந்த நோக்கத்தை இவர் ஏற்கனவே அடைந்துவிட்டார் என்பதற்கு இவரால் உத்வேகம் பெற்று இன்று நல்ல பதவிகளிலிருக்கும் பல இளைஞர் களே சான்று.

"மனிதன் எப்போது ஞானம் அடைகிறான்" என்றொரு கேள்வி. "தான் ஒன்றுமில்லை என்று உணர்கிறபோது" என்கிறார். அப்படி ஒவ்வொருவனும் உணர்ந்துவிட்டால் மனித வாழ்வில் ஒரு பிரச்சனையும் இல்லையே. அந்த தன்முனைப்பை உணராததாலே தானே நமக்கு இவ்வளவு சங்கடங்கள். இந்தப் பதிலை ஒட்டியே இன்னொரு கேள்வி. "ஒருவரின் அடையாளம் என்பது என்ன?"

"அடையாளம் அற்றுப்போவதே சரியான அடையாளம். அவர்களையே உலகம் நினைவில் வைத்துப் போற்றுகிறது. புத்தர் கபீர் போன்றவர்கள் அப்படிப்பட்டவர்களே என்கிறார்.

சதா நாம் எதனுடனோ முட்டி மோதிக் கொண்டிருக்கிறோம். எதில் மோதுகிறோம். யாரோடு மோதுகிறோம். ஏன் மோதுகிறோம் என்ற பிரக்ஞை சிறிதும் இல்லாமல் எதனோடோ மோதிக்கொண்டே இருக்கிறோம். அதையே ஒரு கேள்வியாக கேட்கிறார். "மோதுவது தவறா" மோதுவது தவறில்லை. எதனுடன் என்பதுதான் முக்கியம் என்று சொல்லிவிட்டு வசன கவிதை மாதிரி இரண்டு வரிகள் சொல்கிறார். "கல் கல்லோடு மோதினால் ரத்தம், உளியோடு மோதினால் சிற்பம்"

இதிகாசங்கள் புராணங்கள் பற்றிய கேள்விகளும் இதில் எழுப்பப்பட்டுள்ளன. அதில் ஒரு கேள்வி. "இதிகாசங்கள் உணர்த்தும் செய்தி" பதில். "மகிழ்ச்சியாக இருக்கும்போது வாக்கு தராதீர்கள். கோபமாக இருக்கும்போது சாபம் தராதீர்கள்." இதிகாசங்கள் உணர்த்தும் செய்திகளை அப்படியே சாரமாக இரண்டு வரிகளில் தந்துள்ளார். நாம் எல்லோரும் ஆசையை அடக்கப் படாதபாடு படுகிறோம். சில சாமியார்களோ அத்தனைக்கும் ஆசைப்படு என்கிறார்கள். அவர்களும் ஆசைப்பட்டு அல்லலுக்கும் ஆளாகிறார்கள். அதையே ஒரு கேள்வியாக்குகிறார் இறையன்பு. "ஆசையை அடக்க

முடியுமா" "அடக்க முயல்வதைவிட கடக்க முயல்வது நன்று. அடக்கினால் அது மிருகம் போல் மீண்டும் மீண்டும் துள்ளிக்கொண்டு துரத்தும். கடந்துவிட்டால் தொட முடியாத எல்லைக்குள் இருக்கும்." பரிட்சித்துப் பார்க்கலாம் என்றுதான் தோணுகிறது.

நமக்குப் பல பேர் மீது கோபம் வருகிறது. சிலரை அதனால் பகைத்தும் கொள்கிறோம். அப்படி யாரையும் பகைத்துக்கொள்ளாமல் இருக்கமுடியுமா என்றொரு கேள்வி. யாரையும் பகைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பகைத்துக்கொண்டால் அவர்களை வெறுப்பதற்காக நம் சக்தியை நாம் விரயம் செய்ய வேண்டிவரும் என்கிறார். மனோதத்துவ ரீதியில் அணுகப்பட்ட ஒரு நுட்பமான பதில். எதிரிகளையும் படபடப்பைத் தரும் வேண்டாத விஷயங்களையும் சதா நினைத்துக்கொண்டிருப்பதை முதலில் கைவிடுங்கள் பாதி மன அழுத்தம் குறையும் என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

சர்வரோக நிவாரணி போல பல துறைகள் சார்ந்து பல திசைகள் சார்ந்து கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு பதில் சொல்கிறார். இந்த மனிதருக்குள் இவ்வளவு விஷயங்களா என்று நம்மைத் திகைக்க வைக்கிறார். இவர் பெற்ற இந்த ஞானம் இன்று நேற்று வந்ததல்ல. இவரின் பால்யத்திலிருந்தே இவரது தேடல் தொடர்ந்து வந்திருக்கிறது. இந்த புத்தகத்தில் ஒரு சம்பவத்தை நினைவு கூர்கிறார். இவருடன் பத்தாம் வகுப்பு வரை படித்த சித்ரா ராய் என்கிற பெண்மணி கனடாவில் தற்போது வசித்து வருகிறார். அவருக்கு பள்ளிப் பருவத்தில் இறையன்பு எழுதிய ஆட்டோ கிராஃப் வாசகங்கள் இவை:

**தமிழ் என்னும் தரமிகு மொழியை**
**தாயகத்து வீதிகளில் பரப்பிடவே முயல்வாய்.**
**தன்னலம் என்னும் தீ குணத்தை அகற்றி**
**தரணியெல்லாம் நலம் வாழ உழைப்பாய்**

விளையும் பயிர் முளையிலே என்பது போல பத்தாம் வகுப்பு படிக்கும்போதே தன் சக மாணவிக்கு இப்படியொரு வாசகத்தை எழுதித் தந்துள்ளார். மொழியின் மீதும் சமூகத்தின் மீதும் பதின்பருவத்திலேயே இவர் கொண்டிருந்த நேசம் புலப்படுகிறது.

இப்படி எத்தனையோ கேள்விகளைத் தானே எழுப்பி அவற்றிற்குத் தானே பதில்களையும் சொல்லி விட்டு இந்தப் பதில்கள் எல்லாம் சாத்தியமான பதில் களைத் தேடும் முயற்சிதான். முடிவான பதில்கள் இல்லை, பதில்களை நோக்கிய பயணம் மட்டுமே என்கிறார் அடக்கமாக.

இவ்வளவு எழுதுவதால் படிப்பதால் பணியில் சுணக்கமோ தாமதமோ இவருக்கு ஒரு நாளும் ஏற்பட்டதில்லை. முதலில் தான் செய்ய வேண்டிய அலுவலகப் பணிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுப் பார். அதை முடித்த பின்புதான் எழுத்து வேலை களுக்குள் செல்வார். அவர் மேசையில் கோப்புகள் தேங்கிய புகார்களே இல்லை என்று சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால் தன் பணியை பயன்படுத்தி மக்களுக்கு என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதை யெல்லாம் செய்து வருபவர் இறையன்பு. காஞ்சிபுரத்தில் அவர் உருவாக்கிய நிலவொளிப் பள்ளிகளையும் மதுரையில் உருவாக்கிய வாசகர் வட்டத்தையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இதுபோன்ற அவரது செயல்களை அவ்வப்போது ஊடகங்கள் கொண்டாடி மகிழ்ந்துள்ளன. பணி வழியாக மட்டுமல்ல தனிப்பட்ட வகையில் அவர் எழுத்துப் பணிகளின் மூலம் பெற்ற பணத்தை அவர் சமூக நன்மைக்கே பயன்படுத்தி உள்ளார். அண்மையில் நடைபெற்ற தினத்தந்தி பவள விழாவில் இவர் எழுதிய "இலக்கியத்தில் மேலாண்மை" என்ற புத்தகத்துக்காக சி.பா.ஆதித்தனார் இலக்கிய விருதைப் பிரதமர் கையால் இவர் பெற்றார். அந்த இரண்டு லட்சம் பரிசுத் தொகையை சென்னை மயிலாப்பூரில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை கல்லூரி மாணவர் விடுதிக்கு தந்துவிட்டார். எனக்குத் தெரிந்து தென்கச்சி சுவாமிநாதன் அவர்கள் தனக்கு பேச்சின் மூலம் கிடைக்கும் பணத்தை எல்லாம் இப்படி அறப் பணிகளுக்காகக் கடைசிவரை செலவிட்டு வந்தார் என்பதை நான் அறிவேன். "அடுத்தவர் நலனுக்காக செய்யும் ஒவ்வொரு செயலும் பிரார்த்தனைதான். ஒவ்வொரு நிகழ்வையும் விழிப்புடன் அணுகினால் வாழ்க்கையே வழிபாடுதான்" என்ற வரிகளை எழுதிக் காட்டிய இவர் தான் எழுதிய வார்த்தைகளுக்குத் தக வாழ்ந்துகாட்டிய சம்பவங்களில் ஒன்று இது.

அரசாங்கம் எவ்வளவோ அரசு அதிகாரிகளைக் காண்கிறது. ஆனால், தன் செயல்பாடுகளால் பண்பால் மேன்மை மிகுந்த அதிகாரிகளை அரசு எந்திரம் எப்போதாவது அபூர்வமாகத்தான் காண்கிறது. இவர் வகிக்கும் பதவிக்கு வேலைகளைப் பார்த்தோம் சம்பளம் வாங்கினோம் நிம்மதியாக இருந்தோம் என்று இருக்காமல், சமூகத்துக்கு தன்னாலானவற்றை தன் எழுத்தின் பேச்சின் செயல்களின் மூலம் செய்து தன் வாழ்வை அர்த்தம் துலங்க வாழ்ந்து வருபவர் இறையன்பு. அவருக்காக நடக்கும் இந்த விழாவில் அவரைப் பற்றிய சில செய்திகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

***(வதனம் அமைப்பும் என்.சி.பி.எச். நிறுவனமும் இணைந்து 16.12.2017 அன்று, மதுரை, இந்திய மருத்துவக்கழகம் அரங்கில் நடத்திய "வெ. இறையன்புவுடன் ஒரு இனிய மாலை" கூட்டத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரை)***